AstroVed

ஜீன், 2022

# சத்வித்யா

மாலை: 3 மலர்: 32

எஸ்பி -75, சிட்கோ தொழில்துறை எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600058.

ஆன்மீக விஞ்ஞான இதழ்

இணையதளம் வாயிலாக மாதம் ஒரு முறை வெளிவரும்



## தாகம் தீர்த்த புரீஸ்வரர் திருக்கோயில்!

## செல்வத்தை ஈர்க்கக்கூடிய எளிய லால் கிதாப் பரிகாரங்கள்

# மலடு நீங்கி மகப்பேறு அடைய....

அனைத்து இதழ்களையும் AstroVed.com இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்து பயன் பெறலாம்

மேலும் விபரங்களுக்கு போன்: 88702 88701, www.astroved.com



போன ஜென்மத்தில் நாம் என்ன செய்து கொண்டிருந்தோம் என்ன நினைத்துக் கொண்டிருந்தோம் என்பதை அறிவதும் அறிவியல் தான! நினைவுத் திறன் அதிகமாக பரப்ப பட்டதாக இருந்தால் தான் நமது முற்பிறவி பற்றி அறிய முடியும். புத்தர், கடவுளே இல்லை என்றவர் ஆனால் முற்பிறவி என்பது உண்டு என நம்பினார். ஒரு விளக்கை ஏற்றினால், அதைக்கொண்டு அடுத்தது அதிலிருந்து இன்னொன்று என பல விளக்குகளை தொடர்ச்சியாக ஏற்ற முடியும். இப்படித்தான் கடந்து போன பிறவியின் நினைவுகள் நம்மை தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. ஆகையால் தான் பல பிரச்சனைகள் நம்மை தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. அடுத்து ஏற்ற முடியாமல் ஒரு விளக்கு அனைவதைப் போல் நமது மூளை முற்பிறவி நினைவுகளை எப்போது மறந்து, புதிய சிந்தனை பிறக்கிறதோ அப்போது தான் நமது பிரச்சனைகள் மறந்து புதிய வாழ்கை, புதிய பாதை பிறக்கும்.

Dr. Baskaran Pillai



அன்பு சத்வித்யா நேயர்களே!

ஆற்றுமணல் வெடித்து, விளையும் நிலம் பிளந்து கோடை வெப்பத்தை உலக உயிர்கள் அனுபவித்து வரும் இந்த அக்கினி நட்சத்திர வேளையிலே வாழ்ந்து வருகிறோம்.

இந்தக் கொடிய வெப்பத்தில் இருந்து எப்படி தப்பிப்பது என்கிற உபாயம் அறியாமல் மக்கள் பரிதவித்த நேரத்தில் மண்ணையும் மனித மனங்களையும் குளிர்விக்கும் விதமாக வெள்ளம் கரை புரண்டு, சில இடங்களில் சேதங்களையும் ஏற்படுத்தியுள்ளது. தமிழகத்தில் இதற்கு முன்னர் இவ்வாறு கோடை மழை பெய்தது உண்டா? என்ற சொல்லே எங்கெங்கும் கேட்கிறது? எப்படி? கோடையில் இவ்வளவு மழை சாத்தியமாயிற்று?! ...

இதுதான் சித்தர்களின் நல்லாசி! சித்தர்கள் நமக்கு சொல்லாத வாழ்வியல் நெறிகளும் இல்லை; வைத்திய முறைகளும் இல்லை; வானவியல் முறைகளும் இல்லை! எல்லாமே அவர்கள் எழுதி வைத்த சுவடிகளில் உள்ளது.

கடும் கோடையை தணிக்க, வருண பகவானை துணை கொள்வது எப்படி என்கிற பூஜை முறைகளை சித்தர்கள் எழுதி வைத்திருப்பதை தக்க சமயத்தில் உணர்ந்தவர், நமது Astroved நிறுவனர், தமிழ்ச்சித்தர் டாக்டர்.பாஸ்கரன் பிள்ளை அவர்கள். அவரது வழிகாட்டுதலின்படி சென்னையில் உள்ள ***Astroved*** வேள்வி ஆய்வகத்தில் தினமும் பகலில் உச்சிக்கால வேளையில் சித்தர்கள் முறைப்படி பூஜை நடத்தப்பட்டது, இதன் விளைவாய், சித்தர்களின் அருளால்.... காய்ந்த நிலங்களில் வெள்ளம் கரை புரண்டு, அருவிகள் ஆர்ப்பரித்து, பூமித்தாய் குளிர்ந்திருக்கிறாள். மக்கள் வெயிலின் கொடுமை தணிந்து சற்றே, குளிர் முகம் காண்கிறார்கள். எனவே, சித்தர்கள் வழியில் தெய்வத்தை காண்போம்.

அன்புடன்
(அச்சிட்டு வெளியிடுவோர்)
ஆஸ்ட்ரோவேட்.காம்

அன்புடன்
Astroved.com

அன்பு சத்வித்யா வாசகர்களே! இதுவரை இணையதளத்தில் வெளியாகி, எல்லையில்லா ஆன்மீக செய்திகளை அள்ளித் தந்து கொண்டிருக்கும் நமது சத்வித்யா இணையதள மாத இதழ், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க விரைவில் புத்தக வடிவில் உங்கள் கரங்களில் தவழவிருக்கிறது என்பதனை பெரு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

என்றென்றும் உங்கள் ஆதரவை வேண்டும், Astroved.com மாத இதழ்



# ஜீன் மாத காலண்டர் – 2022

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | சதுர்த்தி 3 | 4 |
| ஷஷ்டி 5 | 6 | 7 | 8 | 9 | ஏகாதசி 10 | 11 |
| பிரதோஷம் 12 | பவுர்ணமி 13 | 14 | 15 | 16 | சதுர்த்தி 17 | 18 |
| ஷஷ்டி 19 | 20 | 21 | 22 | 23 | ஏகாதசி 24 | 25 |
| பிரதோஷம் 26 | சிவராத்திரி 27 | அமாவாசை 28 | 29 | 30 | | |

## ஆலயம் அளிக்கும் அருஞ் செய்திகள்

# அலைகளாடும் அழகிய திருச்செந்தூர் ஆலயம்!

திருச்செந்தில் உலா, திருச்செந்தூர் ஷண்முக சதகம், தசாங்க வகுப்பு, திருச்செந்தூர் தலபுராணம், ஓரெழுத்தந்தாதி, சுப்பிரமணிய அந்தாதி, முருகன் கலித்துறை அந்தாதி, திருச்செந்தில் நவரச மஞ்சரி என்ற இன்னும் அனேக பண்டைய நூல்களில் போற்றப்படும் அ/மி செந்திலாண்டவர் குடிகொண்ட திருச்செந்தூர் தலம் விளங்குகிறது.

இந்த முருகன் ஆலயம் “ஓம்“ எனும் பிரணவத்தை அடிப்படையாகக் கொண்டு, உரிய வாஸ்து லட்சணங்களுடன் சிறப்பாக உருவாக்கப்பட்டுள்ளது. தெற்கு பார்த்த இக்கோயில் வடக்குத் தெற்காக 300 அடி நீளமும், கிழக்கு மேற்காக 214 அடி அகலமும் கொண்டுள்ளது.
ஆலய கோபுரமேயாளி மண்டபத்திற்கு மேலே 137 அடி உயரம், 90 அடி நீளம், 65 அடி அகலம் கொண்டு கம்பீரத் தோற்றம் தரும்.
வீரபாகு ஷேத்திரம் என்ற காரணப் பெயர் கொண்ட இத்தலத்தில் ஸ்ரீ செந்திலாண்டவர் என்ற திருநாமம் கொண்டு அருள்கின்ற முருகன் ஒரு முகங்கொண்டு, நான்கு திருக்கரங்களுடன் ஆலய கருவறையில் நின்றகோலத்தில் கிழக்கு திசை நோக்கி அருட்காட்சி வழங்குகிறார்.

கோயில் கருவறையின் பின்பக்கத்தில் ஐந்து லிங்கங்களும், கருவறைக்குள்ளேயே
3 லிங்கங்களும் காணப்படுகின்றன. கடவுள் சூரிய சந்திரராகவும், பஞ்ச பூதங்களாகவும், உயிர்களாகவும்



காஞ்சிக்குமரன்



விளங்குகிறார். என்பதை சுட்டிக்காட்டும் இந்த லிங்கங்கள் கொண்ட திருநாமம் “அஷ்ட லிங்கங்கள்“ என்பது!

இந்த அஷ்ட லிங்கங்களை ஸ்ரீ சுப்பிரமணியரே தினமும் பூஜை புரிவதாக ஐதீகம் உள்ளதால், இவைகள் அர்ச்சகரால் பூஜிக்கப்படுவதில்லை.

தினந்தோறும், மார்கழி மாதம் நீங்கலாக 9 கால பூஜை வழிபாடு நடத்தப்பட, மார்கழித் திங்களில் மட்டும் 10 கால பூஜை இங்கே உண்டு.

காரம், புளி சேர்க்காத நைவேத்தியம் மூலவருக்கு செய்யப்பட, ஸ்ரீ சண்முகருக்கோ காரம், புளி சேர்க்கப்பட்ட நைவேத்தியமுடன் பருப்புக் கஞ்சி, தோசை, தேன்குழல், அப்பம், அதிரசம், பிட்டமுது, தினை மாவு ஆகியவைகளும் இடம்பெறுகின்றன .

தவிர, உதயமார்த்தாண்ட சிறப்பு பூஜையில் கண்டிப்பாக, சிறு பருப்பு கஞ்சி, தோசை இவைகள் நைவேத்தியமாகிறது. பால், சுக்கு, வெந்நீர் இரவு நேர பூஜை நைவேத்தியங்களாகும்.
உற்சவ ஆறுமுகனாருக்கு ஆண்டுக்கு முப்பத்தி ஆறு தடவைகள் மட்டும் குறித்த விசேட நாட்களில் அபிஷேகம் நடக்கும். விபூதி அபிஷேகம் இதில் நிச்சயம் உண்டு.



குமார விடங்கப் பெருமான் என்ற சிறப்புப் பெயர் பூண்ட உற்சவ மூர்த்தி, தெய்வத் திருமண விழாக்களில் இடம்பெறுவதால் “மாப்பிள்ளை சுவாமி“ என்றும் அன்போடு அழைக்கப்படுகிறார். இவர் தங்க ஆடு வாகனத்தில் பவனி வருவது கண்கொள்ளாக்காட்சியாகும்.

ஆறுமுகங்கொண்டுள்ள இந்த அழகனின் 6 திருவதனங்களுக்கும், தனித்தனியே ஒரே சமயத்தில் ஆறு பண்டிதர்கள் ஆண்டவன் திருநாமங்களை இசைக்க, ஆறு சிவாச்சாரியர்கள் பல மலர்களால் அர்ச்சிப்பார்கள். தனித்தனியே ஒவ்வொரு முகத்திற்கும் வெவ்வேறு வகை உணவு வகைகளும், நைவேத்தியமாக, ஆறு தட்டுகளில் கற்பூர தீபாராதனை நடத்தப்படுவதை காண பக்தர்கள் இங்கே திரளுவார்கள்.

ஆறுமுகனின், ஆறுமுகங்களும் வெவ்வேறு வகை உலக செயல்களை அப்படி ஆற்றுவதாக ஐதீகம்.

உலகிற்கு ஒளி அளிப்பது ஒரு முகம்; வேள்விகளை காத்தருளுவது மற்றொரு முகம்; அடியார்கள் குறை தீர்க்கும் பிறிதொரு முகம்; வேதாகம பொருளை விளக்கவே தனி முகமாக ஒன்று; பகைவர்களையும், தீயவர்களை அழிக்கும் வேறொரு முகம்; அவருடைய ஆறாம் முகமோ தேவிமார்களுக்கு மகிழ்ச்சி அளிக்கக் கூடியது.

இவ்வாலயம் வரும் பக்தர்களுக்கு இலை விபூதி பிரசாதம் வழங்கப்படுகிறது. அந்த இலை பன்னிரு நரம்புகள் உள்ள பன்னீர் இலையே. தேவர்கள் பன்னீர் மரங்களாக உள்ளதாக ஐதீகம்.

பரதகுல பாண்டிய வம்சம் என்ற புராண நூலில் பரதவர் குலத்தில் பிறந்த தெய்வயானையை முருகன் மணந்தார் என குறிக்கப்பட்டுள்ளதால், இவரை தரிசிக்கும் பரதவர்கள் உரிமையுடன் மச்சான் சாமி என்று கூறி வழிபடுகிறார்கள்.

இக்கோயிலில் காயத்ரி மந்திர எழுத்துக்களே, ஆலய புண்ணிய தீர்த்தங்கள் ஆக விளங்குகின்றன என்ற தல புராணத்தில் கூறப்பட்டுள்ளது.

ஸ்கந்த புஷ்கரணி என்ற நாழிக்கிணறு, ஒரு சந்தர்ப்பத்தில் முருகபிரானால் உருவாக்கப்பட்டது, ஒரு சதுர அடி பரப்புள்ள இதில் ஒரு படி அளவுகொண்ட ஜலமே காட்சி தரும். இக்கிணறு தீர்த்த ஸ்நானம் முடித்தே இறை தரிசனம் பெற வேண்டும்.

இவ்வாலயத்தின் முக்கிய சிறப்புகளில்

ஒன்று, மூலவ முருகருக்கு போற்றி மடைப்பள்ளியிலும், ஸ்ரீ வெங்கடாசலபதி பெருமாளுக்கு வைணவ மட பள்ளியிலும், ஆறுமுகனுக்கு முக்காணியார்கள் மடைப்பள்ளியிலும் தனித்தனியே நைவேத்திய வகைகள் தயாரிக்கப் படுவதே!

திருச்செந்தூரில், மாமரங்கள் வளர்வதில்லை எனப்படுகிறது.
இதன் காரணமாக ஐதீக முறையில் கூறப்படுவது, மாமரமாக மாறிய சூரபதுமனை அழகன் முருகன் இரண்டாகப் பிளக்க அது ஒரு பகுதி சேவலாயும், வேறொரு பகுதி மயிலாகவும் மாறி விட்டதுதான்!
சுனாமி தமிழகத்தை தாக்கி நிறைய உயிர், பொருட் சேதங்கள் ஏற்பட்ட காலத்தில் கடற்கரை தலமான திருச்செந்தூரை பாதிக்காது போனதற்கு காரணமாக சொல்லப்படும் புராண நிகழ்வு இது-

ஒரு சந்தர்ப்பத்தில் செந்திலாண்டவனிடம் “முருகா! தாங்கள் இத்தல கரையில் இருந்து அருள்பாலிக்கும் வேளை வரை, இந்த கடலால் இந்த ஆலயத்திற்கு எவ்வித தீங்கும் நேராது”! என வருணத்தேவன் சத்தியம் செய்துள்ளதே.

வளர்பிறை கூடிய சஷ்டி தினங்களில் மட்டும் கதிர் வேலனுக்கு அக்கால 90 லட்சம் மதிப்புள்ள வைர கிரீடம் அணிவிக்கப்பட்டு பூஜைகள் நடத்தப்படுகிறது ஒரு முருக பக்தர் அளித்த காணிக்கையாக இந்த கிரீடத்தில் 315 சிவப்பு கற்கள், 7 குச்சை வகை சிவப்பு கற்கள், 44 பச்சைக் கற்கள், பெல்ஜிய நாட்டு இறக்குமதியான 4,727 வைரக்கற்கள் பதிக்கப்பட்டதோடு, அக்கிரீடம் கொண்ட எடை 45.25 கிராம் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

தங்க ஆமை, தங்கப் பிடி கொண்ட காண்டாமிருக வடிவிலான அபிஷேகப் பொருள், முருகனுக்கு அபிஷேகம் செய்யப் படுகையில், அதனை புரியும் தலைமை பட்டர் அணிய நவரத்தினங்கள், தங்கத் தாமரை பூக்கள், தங்க உலோக மீன்கள், 100 பவுன் தங்கம், 40 காரட் வைரம், பச்சைக் கற்கள் இவைகளாலான வைரவேல் ஆகிய இவைகள் இதர முருகாலாயங்களில் காணக் கிடைக்காதவைஆக இக்கோயிலின் மதிப்பைக் கூட்டுவிக்கிறது.

செந்தூர் முருகனான ஆறுமுகன் ஒவ்வொரு ஆவணித் திருவிழாவின் போது இடம்பெறும் ஏழாம் நாளன்று அவருடைய முன்புறம் ஆறுமுக தோற்றத்திலும், பின்புறம் நடனமிடும் நடராஜரின் திரு கோலத்திலும் காட்சி தருவார்.

இக்கோயிலின் கொடிமரம் சந்தன மரத்தால் உருவானது. இது வந்த விதம் குறித்து இப்படி திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ் நூலில் காணப்படுகிறது.

அக்காலத்தில் இலங்கையை ஆண்ட கண்டி மன்னன் என்ற முருக பக்தன் தன் கனவில் இத்தல முருகன் காட்சிதந்து சந்தன மரம் ஒன்றை வெட்டி கடலில் இடு“ எனக் கட்டளையிட்டவாறு, மன்னன் செய்ய, அது மிதந்து செந்தூர ஆலயமருகே ஒதுங்கி நின்றதாம்.

இந்த ஆலய கோபுர திருப்பணியை மேற்கொண்ட அக்கால திருவாடுதுறை ஆதீன ஒடுக்கத்தம்பிரான் என்பவரின் கனவில் வேலன்




தோன்றி நீ உடனே காயல்பட்டினம் வள்ளல் சீதக்காதியைப் போய் பார்!” என உத்தரவிட, தம்பிரானும் அவரை சந்தித்தார். அந்த வள்ளல் காணிக்கையாக அளித்த ஒரு மூட்டை உப்பை, திருச்செந்தூருக்கு அவர் கொணர்ந்தார். அங்கு அம்மூட்டையை பிரித்து பார்த்த தம்பிரான் உள்ளிட்டோர் ஆச்சரியப்பட்டு, மெய்சிலிர்க்கும் வகையில் அம்மூட்டை உப்பு முழுவதும் தங்க காசுகளாக மாறி விட்டனவாம்!
அப்பொருளைக் கொண்டு ஒடுக்கத்தம்பிரான் அக்கோயில் கோபுரம் உள்ளிட்ட அனைத்து திருப் பணிகளையும் சிறப்பாக முடித்து விட்டாராம்!

“வெண்டலைப் புணறி அலைக்கும் செந்தில் நெடுவேள் நிலைஇய காமர் வியன் துறை” என்று புறநானூறு நூல் போற்றும் திருச்செந்தூர் தூத்துக்குடியிலிருந்து 45 கி.மீ. தொலைவிலும், நெல்லையிலிருந்து சுமார் 88 கி.மீ. தூரத்திலும் உள்ளது. சென்னையிலிருந்தும், பல முக்கிய நகரங்களிலிருந்தும் இவ்வூருக்கு செல்ல புகை வண்டிகளும், பேருந்துகளும் உண்டு.



# இன்றைய கலை நிலை!



விஜயபுரத்தான்

காஞ்சி மகா பெரியவாளின் ஜெயந்தி மகா புண்ணிய தினம் வரும் அனுஷம் கூடிய வைகாசி 30 திங்கட்கிழமை (13.6.2022) அன்று விமர்சையாக உலகெங்கும் கொண்டாடப்படுவதை முன்னிட்டு, அம்மகான் நாடக, சினிமா நிலை குறித்து அருளியுள்ள வகைகள் இங்கே இடம் பெறுகின்றன.

"பெரிய தத்துவங்களை சொல்வதற்கு மதாச்சாரியர்களே கூட நாடகம் எழுதினார்கள் என்றால், அந்த கலைக்குப் பூர்வத்தில் எத்தனை உயர்ந்த ஸ்தானம் இருந்திருக்கிறது என்று தெரிகிறது.

அப்படிப்பட்ட நாடகக்கலை இப்பொழுது எப்படி இருக்கிறது? ரொம்ப ஜனங்களை இழுக்கிற சக்தி-**MASS MEDIA** வாக இருக்கிற சக்தி- அதற்கு இருப்பது வாஸ்தவம்தான். ஜனங்களை இழுத்து இந்திரியங்களை கிளறி அனுப்பி விட்டால் போதுமா?

அது சரியா? ட்ராமாவால், சினிமாவால் எத்தனையோ நல்லது செய்யலாம், செய்ய "லாம்" என்கிறார்கள். "லாம்" என்பது வாஸ்தவம்தான். வாஸ்தவத்தில் என்ன நடக்கிறது என்பதுதான் கேள்வி. அணுசக்தியால் நல்லது செய்யலாம் செய்யலாம் என்று சொல்லிக்கொண்டே "பாம்" களைக் குவித்துகொண்டு போகிற மாதிரி தான் நடந்து வருகிறது.

பொறுப்புணர்ந்து நாடகாசிரியரும், நாடகம் நடத்துகிறவரும் என்ன செய்ய வேண்டும்? ஜனங்களின் மனசை உயர்த்த பாடுபட வேண்டும். அவர்களுடைய உணர்ச்சிகளை நல்வழியில் திருப்பி கட்டுப்படுத்தி, லோகத்தோடு அவர்கள் ஸவ்ஜன்யமாக இருக்கும் படியாகவும், தங்களுக்குள் சாந்தமாக ஆகும்படியாகவும், செய்யக்கூடிய நாடகங்களை எழுதி நடிக்க வேண்டும். இப்பொழுது நடப்பது நேர்மாறாக இருக்கிறது.

காமமும், குரோதமும் தான் ஜீவனின் பரம விரோதிகள் என்பது பகவத்கீதா வாக்கியம். இப்போது படங்களில் இந்த இரண்டும் தான் பிரதானம். வெவ்வேறு வகுப்பு ஜனங்களை, வெவ்வேறு கட்சிக்காரர்களை பரஸ்பரம் சண்டைக்கு தூண்டி விடுகிற நாடகங்களும், சினிமாக்களும், ஜாஸ்தியாகி விட்டதாக சொல்கிறார்கள். விரசத்துக்கோ எல்லையோ இல்லாமல் போய் விட்டதாக தெரிகிறது.

நாடக, சினிமாக்காரர்களை ஒரு நல்ல கட்டுப்பாட்டுக்கு கொண்டு வருவதற்கு, இப்போதுள்ள சட்டம் போதவில்லை என்றால், சினிமாவே வேண்டாம் என்பது தான் என் அபிப்பிராயம்.






விஜய்
ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர்

# ராகு திசை

ராகு நிழல் கிரகமாகும். நவகிரகங்களில் தோஷத்தை வெளிப்படுத்துவதிலும் துன்பத்தை தருவதிலும் பலம் பெற்ற கிரகம் ராகு.

ராகு எந்த கிரகத்துடன் சேர்ந்து உள்ளதோ அந்த கிரககாரசத்துவ ரீதியாக பாதிப்பை ஏற்படுத்துகிறது.

ராகு சூரியனுடன் சேர்ந்து இருந்தால் நிர்வாகம் சார்ந்த பாதிப்புகள் தருகிறது.
பெயர், புகழ் கெடும் நிலைக்கு ஜாதகர் தள்ளப்படுவார். தந்தைக்கு பிடிவாத குணத்தை தருகிறது.
ராகு சந்திரனுடன் சேர்ந்திருந்தால் ஜாதகர், தாய்க்கு மனம் சார்ந்த பிரச்சனைகள் தருகிறது.

ஜாதகருக்கு கண்ணுக்குத் தெரியாத சக்திகள் பய உணர்ச்சியை ஏற்படுத்துகிறது.
தவறான பழக்க வழக்கங்களை தருகிறது. திடீர் மாற்றங்களை தருகிறது.

ராகு செவ்வாயுடன் சேர்ந்திருந்தால் வீடு, வாகனம், சொத்து போன்றவற்றால் பெரும் பிரச்சினைகளைத் தருகிறது. சகோதர, சகோதரிகள் ரத்த சம்பந்தமான உறவுகளுக்குள் பிரிவினையை ஏற்படுத்துகிறது.

தவறான நண்பர்கள் சேர்க்கை மூலம் குடும்பத்தை விட்டு பிரிய வைக்கிறது. காலி இடங்களில் வில்லங்கத்தை ஏற்படுத்துகிறது.
ராகு குருவுடன் சேர்ந்திருந்தால் பெரும் அவமானத்தையும், பொருளாதார இழப்புகளையும் ஏற்படுத்துகிறது. பிள்ளைகளை விட்டுப் பிரியும் சூழ்நிலைக்கு ஜாதகர் தள்ளப்படுவார்கள்.

ராகு சுக்கிரனுடன் சேர்ந்திருந்தால் திருமண வாழ்வில் பெரும் பாதிப்பைத் தருகிறது. பெண்களால் பெயர் கெடும் சூழ்நிலைக்கு ஜாதகர் தள்ளப்படுவார். பொருளாதாரத் தட்டுப்பாடு இருந்துகொண்டே இருக்கும். பேராசைகளாலும் தவறான நபர்களின் யோசனைகளாலும் பெரும் பண இழப்பை சந்திக்க நேரிடும்.
ராகு சனியுடன் சேர்ந்திருந்தால் தொழில் பாதிப்பு, வேலை இழப்பு போன்றவைகளை அடிக்கடி ஏற்படுத்தும். பூர்வீகத்தை விட்டு வெளியேறும் நிலைக்கு ஜாதகர் தள்ளப்படுவார்.
ராகு எளிய மாற்றங்களையும் உறவுகளுக்குள் கசப்புணர்ச்சியையும், காரணம் தெரியாத பிரச்சினைகளையும் தருகிறது.

ராகு தனியாக இருக்கும் போது பெரும் பாதிப்புகள் தருவதில்லை. ராகு வக்ர கிரகங்களுடன் சேர்ந்திருந்தால் நன்மையை செய்கிறது.
ஏற்படும் பாதிப்புகளை சமாளிக்கும் சக்தியை தருகிறது. ராகு மேஷம், ரிஷபம், கடகம், கன்னி, மகரம் ஆகிய வீடுகளில் இருந்து அந்த இடம் லக்னத்துக்கு 3, 6, 10, 11 ஆம் வந்தால் நன்மையை செய்கிறது.

ராகு நன்மையையும், தீமையையும் தனது தசா, புத்தி, தான் சேர்ந்து இருக்கும் கிரகத்தின் தசா புத்தி காலங்களில் வெளிப்படுத்துகிறது, வாழ்வில் உயர்ந்த நிலைக்கும், தாழ்ந்த நிலைக்கும் ஜாதகர் தள்ளப்படுவது தசாபுத்தி கிரகங்களே நிர்ணயிக்கிறது.
புற்று கோவில்களை வழிபடுவதன் மூலம் தீமைகளை குறைத்துக் கொள்ள முடியும். சித்தர்களை வழிபடுவதன் மூலம் மன அமைதி பெற முடியும்.
இறைவனிடம் சரணாகதி அடையும்போது பாதிப்பு ஏற்படாமல் பாதுகாப்பாக காலத்தை கடக்க முடியும்.



# சித்தர்கள் பார்வை

ஆர். பரஞ்சோதி



திருமந்திரம் எனப்பெயர் பெற்ற உயர்ந்த சிந்தனைகள் கொண்ட பாடல்களை தந்தார் திருமூலதெய்வம். அந்தப் பாடல்களில் இறைசிந்தனை என்றால் அது என்ன? எப்படி இருக்க வேண்டும்? என்கிற கருத்துக்களை உணர்த்துகின்ற பாடல்களை கண்டோம்.

சித்தர்களின் பணி, கடவுளைப் பற்றிய சிந்தனையோடு முடிந்துவிடுவதில்லை; அந்த நற்சிந்தனையோடு சமூகம் சார்ந்த பண்புகளையும் நெறிமுறைகளையும் பாடல்களாய் தொகுத்து வழங்கியுள்ளமையும் நாம் அறிந்தோம்.

அதன் நீட்சியாக, திருமூலர் தன்னுடைய பாடல் ஒன்றில்,

”ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்
பார்த்து இருந்து உண்மின் பழம்பொருள்
போற்றன்மின் போற்றன்மின்
வேட்கையுடையீர் விரைந்து ஒல்லை
உண்ணன்மின்
காக்கை கரைந்துண்ணும் காகம் அறிமினே”...

என்று குறிப்பிடுகிறார். இன்றைக்கு அரிச்சுவடியாக நாம் பள்ளியில் படிக்கின்ற பாடத்தின் இந்த கருத்துக்கு திருமூலரே மூலம் என்பதனை இதன் பொருளால் விளங்கலாம். பாடலின் பொருள் யாதெனில்.... ஒருவருக்கு உணவிடும் போது தகுதியானவர், தகுதி இல்லாதவர், உயர்ந்தவர், என்று பேதம் பாராமல் பசித்திருக்கும் அனைவருக்கும் உணவிடுங்கள்! அடுத்து உணவு வேண்டி யார் வருவார் என எதிர்பார்த்துக் காத்திருங்கள்! அப்படி யாரும் வரவில்லை என்றால் அதற்கு பிறகு நீங்கள் உண்டு மகிழுங்கள்: மீதமாகிப்போன உணவுகளை

சேமித்து வைக்க நினைக்காதீர்கள்: உண்ணும் போது வேகமாக உண்ணாதீர்கள்! தான் மட்டுமே உண்ண வேண்டும் என தனித்து உண்பவர் தான் வேகமாக உண்பார்! இன்றைக்கு பல தரப்பிலும் சுட்டிக்காட்டும் உதாரணம்தான் காக்கை! உணவு இருப்பதை ஒரு காக்கை பார்த்துவிட்டால் “கா,கா“ எனக் கத்தி, தன் இனத்தையே அழைத்து கூட்டத்தோடு சாப்பிடுகின்றதே அந்தக் காக்கையின் நற்குணத்தை பின்பற்றுங்கள் எனத் தெளிவாகக் கூறுகின்றார்.

இதிலிருந்து..... மனிதன் வேறுபாடு பாராமல் அனைவருக்கும் உணவிட வேண்டும். இது பரந்த மனப்பான்மையைக் குறிக்கிறது. பழைய உணவுகளை சேமித்து வைக்கக்கூடாது. இதனால், நம் உடல் நலம் காக்கப்படுவதோடு இன்னும் யாராவது பசியோடு இருக்கின்றார்களா என்ற தேடலையும் கொடுக்கின்ற மனோபாவத்தையும் வளர்க்கும்! அவசர அவசரமாக உண்ணாமல் இருப்பது செரிமானத்தை பெருக்கும்: தனக்கு ஏதாவது கிடைத்தால் அதை தன்னைப் போல் இருக்கும் பலருக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும் என்ற பரந்த மனப்பான்மை இருந்திடல் வேண்டும்!

காடு, மலை என இறைவனைத் தேடி அலையும் ஒரு சித்தரின் மனதில் சிவசிந்தனை எந்த அளவுக்கு இருந்ததோ அதே அளவுக்கு மக்களை பற்றிய சிந்தனையும் இருந்துள்ளது என்பதனை மேற்கண்ட பாடலில் கண்டோம்.

மேலும் இன்னொரு பாடலில் திருமூலர்,
“அவ்வியம்பேசி அறங்கெட வவ்வன்மின்
வெவ்வியன் ஆகிப் பிறர்பொருள் வவ்வன்மின்
செவ்வியன் ஆகிச் சிறந்தண்ணும் போதொரு
தவ்விக் கொடுண்மின் தலைப்பட்ட போதே”,
எனக் குறிப்பிடுகின்றார்.

இந்தப் பாடலின் கருத்தை துய்த்துணரும் போது..... அடுத்தவர் மீது பொறாமை கொண்டு அவதூறு பேசக்கூடாது! பெரும் கோபம் உள்ள மனிதனாக- அதாவது கோபக்காரனாக இருக்கக் கூடாது. எந்த நிலையிலும் அடுத்தவர் பொருளைத் தீயவழியில் அடைய நினைக்கக் கூடாது! எத்தனை செல்வம் பெற்று சிறப்புடன் வாழ்ந்தாலும் பசி என்று வருவோர் யாராயினும் அவருக்கு உணவிட மறக்காதீர்கள் என்பதனை இந்த பாடல் மூலம் திருமூலர் உணர்த்துகின்றார்.
என்ன ஒரு அருமையான கருத்து?!

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் திருமூலர் எழுதிய பாடல், இன்றைய மனிதர்களுக்கு, இப்போதும் தேவைப்படுகின்ற கருத்தினை வலியுறுத்துவதை மறுக்க முடியாது! எக்காலத்துக்கும் ஏற்ற வாறு,
“கோபம் கொள்ளாதே; பொறாமைப்படாதே; அடுத்தவர் பொருளைத் தவறாக அடைய எண்ணாதே இல்லாதோர்க்கு கொடுத்து வாழ்”.... என்ன ஒரு அற்புத சிந்தனை!? இந்தக் கருத்து இன்றைக்கு மட்டுமல்ல; எதிர்வரும் எக்காலத்திற்கும் ஏற்றதாக அமைந்துள்ளது அல்லவா?

இப்படி எல்லாம் மனித சிந்தனை மாறி விடும் என்பதனை முன்கூட்டியே உணர்ந்த திருமூலரின் தீர்க்கதரிசனம் தான் அவரை திருமூல தெய்வம் எனப் போற்றி, தெய்வ நிலைக்கு உயர்த்தி இருக்கிறது என்பது உண்மைதானே!?

மேற்கண்ட பாடலில் மனிதனின் தீய குணங்களை பற்றி கூறி, அதனை அறவே அகற்றி விட வேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்திய திருமூலர், இன்னொரு பாடலின் மூலம், மனிதனின் பேரழிவுக்கு காரணமான ஒரு குணத்தை பற்றியும் அதனால் ஏற்படும் விபரீதங்கள் பற்றியும் கூறி, அந்த குணத்தினை எப்படி விட்டு என்ன நன்மையை அடையலாம் என்று குறிப்பிட்டுள்ளார். அந்தப் பாடல்.....

”வெல்லும் அளவில் விடுமின் வெகுளியைச்
செல்லும் அளவும் செலுத்துமின் சிந்தையை
அல்லும் பகலும் அருளுடன் தூங்கினால்
கல்லும் பிளந்து கடுவெளி ஆகுமே”....
என்பதுதான்.

இந்தப் பாடலில் வெகுளியை விட்டு விடுங்கள் என்கிறார். வெகுளி என்பது என்ன? கோபம்! கோபத்தை எதற்காக விட வேண்டும்?.... வெற்றிகளை பெறுகின்ற வகையில் கோபத்தை விட வேண்டும் என்கிறார். இதிலே இன்னொரு பொருளும் உள்ளது. கோபப்படுவதனால் நமக்கு ஒரு வெற்றி கிடைக்கும் எனத் தெரிந்தாலும் கோபப்படக் கூடாது என உணர்த்துகிறார். கோபத்தை அகற்றும் விதமாக, மனதை வேறு வழியில் செலுத்த வேண்டும்: அதாவது, கோப உணர்வை தவிர்க்கும் விதத்தில் சிந்தனையை வேறுதிசையில் திருப்ப வேண்டும் என்று ஒரு உபாயத்தையும் கூறியிருக்கின்றார்,

இதனையடுத்து, திருமூலர் கூறுவது தான் ஆகச் சிறந்த வழிகாட்டியாக அமைந்துள்ளது

என்பதை யாராலும் மறுக்க முடியாது! அதாவது,

"அல்லும் பகலும் அருளுடன் தூங்கினால்
கல்லும் பிளந்து கடுவெளி யாகுமே!"

இந்த வரிகளில் உறைந்துள்ள உண்மை என்பது தத்துவ ஞானமாக ஒளிர்கின்றது. மேம்போக்காக பார்க்கும்போது, இரவும் பகலும் தூங்கினால் எல்லாம் சரியாகி விடும் என்பது போல் மேம்போக்காக தோன்றினாலும் இதில் மறைந்திருக்கும் பொருள் என்னவென்றால், "இரவு பகல் என்றில்லாமல் நேரம் கிடைக்கும் போதெல்லாம் அருளுடன் தூங்கினால்" என்கிறார். அப்படி என்றால்.... இறைவன் அருளைப் பெறுகின்ற வகையிலே தூங்கவேண்டும். அதாவது இறைவனை தியானிக்க வேண்டும். "சும்மா இருத்தலே சுகம்; இறை நினைவோடு இயங்காமல் இருப்பது போன்றவற்றை தான் ஞானிகளும் யோகிகளும் தியானம் என்பார்கள்.

எனவே தான், கோபத்தை விடுத்து, மனதில் இறைச் சிந்தனை ஒன்றையே நினைத்து தியானிக்க வேண்டும் என்றவர் அப்படி தியானித்தால்.....

"கல்லும் பிளந்து கடுவெளி யாகுமே!" என்கிறார்.

கல் பிளந்து, கடுவெளி தோன்றுமா? தோன்றும், எப்படி!....

நாம் மனதால் சிவனை நினைத்து எல்லா பொழுதும் தியானிக்கிறோம். அப்படி செய்யும் போது, கல்லாலான சிவலிங்கமே கனிந்து, பிளந்து, அதிலே கடுவெளி தோன்றும் என்கிறார். இதன் பொருளாவது.... கல்லாய் நாம் காணுகின்ற சிவன் கடுவெளியாய்.... அதாவது, பிரபஞ்ச வெளியாய் தானே பரந்து விரிந்து, எல்லையின்றி, ஆதி அந்தம் இன்றி இருக்கிறார். உண்மையில் இறைவன் இதுதான் என்பதனை உணர, தியானம் செய்யுங்கள்; தியானத்தின் இறுதியில் உண்மை புலப்படும்; இறைவனை அடையலாம் என்கிறார்.

இதற்கு அடிப்படையாய் செய்யவேண்டியது, கோபத்தை விட வேண்டியதே என்கிறார், திருமூலர்! மனித சமுதாயம் ஒழுக்க நெறிகளோடு வாழ்ந்து, இறைவனை அடைய, தியானிப்பதற்கு முன்னர், இத்தனை வழிமுறைகளைப் பின்பற்றி, தீயவற்றை விலக்க வேண்டும் என்ற திருமூலரின் சிந்தனையை சித்தத்தில் கொள்வோம்.

...... ( இன்னும் வரும்....)





TURMERIC
& BLACK PEPPER

HI-HEALTH FORMULA

Navel Chakra & Detoxifier

Hi –health formula can be a solution for
everyday health issues
Turmeric fights with free radicals & protects brain,
heart and liver cells from ageing process

Call: 88702 88701

# பல்சுவை பக்கங்கள்

## வார தின பைரவர் வழிபாடு!

காலபைரவர் தெய்வத்திற்கு தொடர்ந்து வழிபாடு செய்ய அனேக நற்பலன்கள் பக்தர்களுக்கு கிட்டும் என புராண நூல்களில் கூறப்பட்டுள்ளது.

திங்கட்கிழமையில் பைரவருக்கு வில்வார்ச்சனை புரிவோருக்கு சிவபிரானின் பரிபூரண அருள் கிட்டும். அத்தினத்தில் அவருக்கு பன்னீரால் அபிஷேகம் செய்து சந்தனக் காப்பிட்டு புனுகு பூசி நந்தியாவட்டை மலர் மாலை அணிவித்து கண் சம்பந்தப்பட்ட அனைத்து நோய்களும் நீங்கிவிடும் எனப்படுகிறது.

இத்தெய்வத்திற்கு செவ்வாய்க்கிழமை சாயங்கால வேளையில் மிளகு தீபம் ஏற்றி வணங்கினால், இழந்த பொருட்கள் அப்பக்தர்களை மீண்டும் அடைந்துவிடும்.

பூமி இலாபம் அடைய, புதன் கிழமையில் பைரவருக்கு நெய் தீபம் ஏற்ற வேண்டும்.

வியாழனன்று இக்கடவுளுக்கு காலை, மாலை இரு வேளைகளிலும் விளக்கேற்றி வணங்கினால் அவர் அருளால் ஏவல், பில்லி, சூனியம் ஆகிய தீய சக்தியிலிருந்து விடுதலை கிடைக்கும்.

வறுமை நீங்கி செல்வம் பெற வேண்டுமானால் வெள்ளிக்கிழமை மாலையில் வில்வ இலை, மற்றும் நறுமண மலர்கள் கொண்டு பைரவரை அர்ச்சித்து வந்தால் போதும்.

அனைவரும் அறிந்தது சனி பகவானின் குரு பைரவர் என்பது. இவரை சனிக்கிழமை அன்று பூஜிக்கும் அஷ்டம சனி, ஏழரை சனி, அர்த்தாஷ்டமச் சனியால் பீடிக்கப்பட்டோர்கள் அவைகளிலிருந்து தக்க நிவாரணம் பெறுவர்.

சர்ப்ப தோஷம் உடையோர் ஞாயிற்றுக்கிழமையில் பைரவ வழிபாடு மேற்கொள்ள அது அத்தோஷத்தை அழித்துவிடும் என்று கூறப்படுகிறது.

ஏனாதூர் பத்ரி நாராயணன்



# நாம் வசிக்கும் இருப்பிடத்தில் நேர்மறை சக்தியை அதிகரிக்கச் செய்யும் வழிகள்

நாம் வசிக்கும் வீட்டில் உள்ள அஷ்ட திக்குகளில் சில திக்குகளில் நேர்மறை சக்தியும், சில திக்குகளில் எதிர்மறை சக்தியும், சில திக்குகளில் நேர்மறை மற்றும் எதிர்மறை சக்தியும் கலந்து காணப்படுகிறது. அதிக நேர்மறை சக்திகள் நிறைந்து இருக்கும் வீடு கலகலப்புடன் மகிழ்ச்சி மற்றும் சகல ஐஸ்வர்யங்களையும் பெற்றதாக இருக்கும். அதிக எதிர்மறை சக்திகள் நிறைந்த வீட்டு நபர்களுக்கு உடல் ஆரோக்கியம் நலிந்ததாகவும், தன பற்றாகுறை மற்றும் கடன் தொல்லைகள் நிறைந்ததாகவும் காணப்படுகிறது. இந்த கட்டுரையில் ஒரு வீட்டில் எவ்வாறு நேர்மறை சக்திகளை அதிகப்படுத்திக் கொண்டு உலாவ விடுவது என்பதை பற்றி பார்ப்போம்.

1. தலைவாசல் என்பது நாம் வீட்டிற்குள் நுழைவதற்காக மட்டும் அல்ல நேர்மறை சக்திகளை வீட்டிற்குள் கொண்டு சேர்க்கும் மையமாக திகழ்கிறது. வாஸ்துவில் வடக்கு, கிழக்கு மற்றும் வடகிழக்கு திக்குகள் நேர்மறை சக்திகள் நிறைந்து காணப்படுகிறது. எனவே தலைவாசலை வடக்கு, கிழக்கு மற்றும் வடகிழக்கில் அமைப்பது இயற்கையாகவே நேர்மறை ஆற்றல்களை வீட்டிற்குள் வர செய்யும்.

2. தலைவாசலுக்கு முன் நீர் தொட்டியையோ, சிறிய நீரூற்று வைப்பதையோ தவிர்க்க வேண்டும்.

3. குப்பை தொட்டியையோ, காலணி அடுக்குகளையோ தலைவாசலுக்கு வெளியே வைப்பதை முற்றிலும் தவிர்க்க வேண்டும்.

4. குளியல் அறையை தலைவாசலுக்கு அருகில் அமைத்தல் கூடாது.

5. தலைவாசல் கதவில் கருப்பு வண்ணம் அடிப்பதை தவிர்க்க வேண்டும்.

6. தலைவாசல் கதவில் அழகிய தோரணங்களை தொங்கவிடுவது நேர்மறை சக்திகளை வீட்டிற்குள் ஈர்க்கும்.

7. வாசக்கதவு அருகில் மிருகங்களின் சிலைகளையோ, வேறு சில உருவ அமைப்புகளையோ நிறுவுவதை தவிர்க்க வேண்டும்.

8. கடிகார சுற்றுப்படி வாசல் கதவு திறக்கப்பட வேண்டும்.

9. தியானம் மற்றும் யோகபயிற்சி செய்யும் அறையை கிழக்கு அல்லது வடகிழக்கு பகுதியில் அமைப்பதினால் நல்ல ஆன்மீக தொடர்பு ஏற்பட்டு நேர்மறை ஆற்றல்கள் பெருகும்.

10. தியான அறையை வெள்ளை, இளம் மஞ்சள் மற்றும் இளம் பச்சை நிற வண்ணங்களை அடிப்பதால் ஆன்மீக எண்ணம் பெருகி நேர்மறை சக்தி பெருகும்.

11. கிழக்கு நோக்கி தியானம் செய்வதால் வீட்டில் நேர்மறை சக்தி கவரப்பட்டு அதிகரிக்கும்.

மேலே கூறப்பட்டுள்ள சில வழிமுறைகளை பின்பற்றி நம்முடைய வீட்டை அமைத்து நேர்மறை சக்தியை பெருக்கி சகல செல்வங்களையும் பெற்று இன்புற்று சுகமாக வாழ்வோம் ஆக.




**திரு. செந்தில் நாதன்**

ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர்



# கட்டு மலையில் குடிகொண்ட கந்தவேள்!

நந்தினி ஸ்ரீராம்

“அஞ்ஞான இருட்டுக்கு அப்பால் இருக்கிற “ஞான ஜ்யோதிஸ்தி“ தான் சுப்பிரமணியர். அக்னி ஸ்வரூபம் என்றால் அது ஞானாக்னி தான். அவர் கையிலே தகதகவென்று இருக்கிற சக்கராயுதமும், ஞானவேல் தான்!!

பாஹு பல பராக்கிரமத்தைக் காட்டும் சக்தி; கோடி கோடி மன்மத லாவண்யம்; தீன ரக்ஷனத்தில் முதல்வராக இருக்கும் காருண்யம் எல்லாமும் கடைசியில் அந்த ஞானத்தில் பிறந்தவையே; அந்த ஞானத்தோடு பிரிக்க முடியாமல் சம்பந்தப்பட்டவையே. ஞானத்தை மற்றவருக்கும் வழங்கும் குருநாதனாக இருப்பதே சுப்பிரமணிய சுவாமியின் உயிரான லட்சணம்- எனவே

“தத்வோ பதேச கர்த்ரே; வீர நுத குரு குஹாயாஜ் ஞான -த்வாந்த ஸவித்ரே” என போற்றப்படுபவர் அவர்!” என்று காஞ்சிமகாப் பெரியவர்களால் அருளப்பட்ட சிவகுமாரன்,

“தகையா தெனுக்குன் அடி காண
வைத்த
தனி ஏரகத்தின் முருகோனே
தரு காவிரிக்கு வட பாரிசத்தில்
சமர் வே லெடுத்த பெருமாளே”

என்று மகான் அருணகிரிநாதர், தான் கந்தனை போற்றி தனது திருப்புகழ் நூலில் பாடியருளிய முப்பத்தி எட்டு பாடல்களில் ஒன்றில் அருளப்பட்ட சுவாமிநாதன் தான் குடிகொண்ட அறுபடை வீடுகளில் நான்காவது படை வீடாகத் திகழ்கிறது, சுவாமிமலை.

சுவாமிமலை தலத்தை புராணங்களும், இலக்கியங்களும்

“திருவேரகம்“ என்று குறிப்பிடுகின்றன. ஏர் என்றால் அது அழகை குறிப்பது. அழகுமிக்க படைவீடு ஆதலால் இது திருவேரகம் (திரு, ஏர், அகம்) ஆகிறது.

ஏர்த்தொழிலான விவசாயம் சிறக்கும் (தஞ்சைத் தரணி) பகுதியில் உள்ள படை வீடு என்பதால் இது திருவேரகம் எனக் குறிப்பிடுவாரும் உண்டு.

இந்த முருகன் எப்படிப்பட்டவன் எனில் தன் அடியவர்களின் மனதை
“அருள்“ எனும் ஏர் கொண்டு உழுது, அன்பு எனும் பயிரை வளர்ப்பவர் ஆவார்!
மலைகளே இல்லாத தஞ்சை மாவட்டத்தில் சுவாமிமலை செயற்கையான குன்று என்று வழங்கப்படும் கட்டுமலை படைப்பு! அறுபடை வீடுகளில் முருகனுக்கு மலையே இல்லாத தனி வீடு இது! எனவே குரு அம்சமாக இத்தலம் குரு மலை, குரு கிரி என்றும் அழைக்கப்படுகிறது.

செந்தில்வேலன் குரு அம்சமாக திகழும் இரண்டு தலங்களில் ஒன்று திருச்செந்தூர், மற்றொன்று சுவாமிமலை. குகனின் அறுபடை வீடுகளும் ஆறு ஆதார மையங்களைக் குறிப்பவை, இப்படி திருப்பரங்குன்றம் மூலாதாரமும், திருச்செந்தூர் சுவாதிஷ்டானமாயும், திருவாவினன்குடிஎன்னும் பழனி மணிபூரகமாயும், திருத்தணி விசுத்தி யாயும், பழமுதிர்ச்சோலை ஆக்நையாயும், சுவாமிமலை அனாகதமாயும் இருந்து சிறக்கின்றன!

தவிர சுவாமிமலை “பஞ்ச குரோச“ தலங்களில் ஒன்றாகவும் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இவ்வூருக்கு தெற்கு காவிரி நதியும், அதன் கிளை நதியான அரசலாறு நதியும் ஓடுகின்றன.
“சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண் குன்றும், ஏரகமும் நீங்கா இறைவன்“ என சுவாமிமலை சுவாமிநாதண் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் புகழ, நக்கீரர் தன்திருமுருகாற்றுப்படை நூலில் இடம்பெறும் 177 முதல் 190 எண் வரை உள்ள பாடல் வரிகளில் ஆனந்தப்பட, சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான ஸ்ரீ முத்துசுவாமி தீட்சிதர் தான் இயற்றிய “சுவாமிநாத பரிபாலயமாம் நாட்டை ராக கீர்த்தனையில் மெய்சிலிர்த்து பாட, இன்னும் எத்தனையோ நூல்களில் இந்த தகப்பன் சுவாமி குறித்தான புகழ்மாலை கொட்டிக்கிடக்கின்றன.

அருட் புலவர் அருணகிரிநாதருக்கு இத்தலத்தில் நாதன் பாத தரிசனம் அளித்திருக்க, இந்த இறைவன் சுவாமி மலையில் ஒரு வித்தியாச கோலத்தில் குடிகொண்ட புராண சம்பவம் மிகச் சுவையானது.
விதிக்கு தப்பிய தெய்வமில்லை; மனிதனும் இல்லை என உலக வழக்கில் சொல்வதற்கு ஏற்ப அந்த நிலை படைப்புக் கடவுள் பிரம்ம தேவனுக்கும் ஏற்பட்டுவிட்டது.
ஒருசமயம் பிரம்மாவிற்கு தலைக்கனம் வந்துவிட்டது இப்படி-” அனைத்து உலக படைப்பிற்கும் தான் தானே காரணகர்த்தா” வென. அந்த செருக்கோடு பிரம்மன் கயிலை மலைக்கு சிவதரிசனம் செய்ய சென்றபோது, அங்கிருந்த பாலதண்டாயுதனை கவனிக்காததுபோல் அலட்சியமாக கடந்து சென்றுவிட்டார்.


கதிர்காமம் முருகன் சந்நிதி


மாணிக்க கங்கை ஆறு

இச்செய்கையால் சினமுற்ற முருகன், பிரம்மனை தன்னருகே அழைத்து "நீர் இப்பொழுது எனக்கு பிரணவத்தின் பொருளைக் கூற முடியுமா?" என வினவினார். அதன் பொருளை அறியாத நிலையில் படைப்புக் கடவுள் திருதிருவென விழித்து நின்றார். "இதற்கு கூட பொருள் அறியாத நீர் படைப்புத் தொழிலை செய்து என்ன பலன்?" எனக் கூறிவிட்டு, அவர் தலையில் ஒரு குட்டும் வைத்து தனியிடத்தில் சிறையிட்டும் விட்டார் சுப்ரமணியர்.
அதுமட்டுமன்றி இதுவரை பிரம்மன் புரிந்து வந்த படைப்புத் தொழிலையும் தானே எடுத்துக் கொண்டார் பிரம்மன் தன் பிள்ளையால் சிறையிடப்பட்ட செய்தியறிந்து சிவபிரான் கந்தனிடம் வந்து " பிரம்மனை விடுவித்து விடு!" எனக் கேட்டுக் கொண்டார். தந்தையின் கட்டளையின்படி பிரம்மனை விடுவிக்க முருகன், அப்பொழுதே தன் தந்தைக்கும், பிரம்மனுக்கும் பிரணவத்தின் பொருளை உபதேசத்தருளினார்.

அச்சமயம் மன மகிழ்ந்து போன கயிலைநாதன் "நீயே சுவாமி"! என அருளிக் கூற, அன்று முதல் சுவாமிமலை என்று அந்த இடம் வழங்கப்படலாயிற்று. அங்கு குடி கொண்ட கந்தனுக்கு "தகப்பன் சுவாமி" என்ற திருநாமமும் கூடுதலானது.
மேலே நிகழ்ந்தவற்றுக்கு முன்பே நடைபெற்ற புராண சம்பவமொன்று இப்படியும் கூறப்பட்டுள்ளது.

அனைத்தையும் அறிந்த சிவனுக்கு பிரணவப் பொருள் தெரியாமலா இருந்திருக்கும் என்ற கேள்வி எழும் வாய்ப்புண்டு!
புகழ்பெற்ற "பிருகு மகரிஷி" என்பவர் ஒரு சமயம் கடும் தவத்தை மேற்கொண்டிருந்தார். தவமிருக்கும் முன்பே அவர் ஒரு எச்சரிக்கை செய்திருந்தார் தனது தவத்திற்கு எவர் தடை உண்டாக்கினாலும், அவர் தன்னுடைய இயல்பான சிறப்பை இழந்து விடுவர் என்று. இந்த தவத்தின் விளைவாக அச்சமயம் அகில உலகமும் வெப்பத்தால் தகிக்கத் தொடங்கிவிட்டது. தவித்துப் போன தேவர்கள் கூட்டம் கயிலை மலை நாடி, சிவபெருமானிடம் இதனை எடுத்துரைத்து, ஆவன செய்யும்படி கேட்டுக் கொண்டனர். அதனால் சிவன் அவர்கள்பால் மனமிரங்கி, பிருகு மகரிஷி தவம் புரியும் இடம் சென்று, அவருடைய சிரசின் மேல் தனது கையை வைத்தார். அடுத்த கணமே உலக வெப்பம் மறைந்ததுடன், மகரிஷியின் தவமும் உடனே கலைந்து போனது. அத்துடன் கைமேல் பலனாக, கயிலைநாதன் கொண்ட சிறப்பியல்களின் ஒன்றான பிரணவ மந்திரத்தை அவர் மறக்க நேரிட்டு விட்டது!

பிரணவ மந்திரத்தின் பொருளை சிவகுமாரன் தனது தந்தையின் இடக்காதில் ஓதினாராம். இதன் காரணம் தன் அன்னை பார்வதியும் இம்மந்திர பொருளை அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக!
சிவபிரானே பிரணவ மந்திர உட்பொருளை அறிந்த தலம் சுவாமிமலை என்பதால் இங்கு சிறுவர்களுக்கும் யக்ஞோப வீத மென்கிற முதல் முதலில் பூணூல் அணிவிக்கும் கல்யாணம் நடத்தி வைப்பது சிறப்பு எனப்படுகிறது. இனி சுவாமி மலை தல இறைவன் குடி கொண்ட ஆலய தரிசனம் பெறலாம்.
இக்கோயிலின் தல விருட்சமாக "தாத்ரி" என்கிற நெல்லி மரம் உள்ளது. இந்த மரம் சாட்சாத் பூமாதேவியின் அம்சம் ஆகும்.



காவடி எடுத்து வரும் பக்தர்கள்

சுவாமிநாதரின் ஆலயத்தின் ஒரு பகுதியான, கீழக் கோயிலான மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயமருகில் கூப தீர்த்தமெனும் வஜ்ர தீர்த்தம் கிணறு வடிவில் இருக்கிறது.
இந்தக் கோயிலின் வட கிழக்கில் சரவண தீர்த்தமும், உள்பகுதியில் நேத்திர தீர்த்தமெனும் சுவாமி தீர்த்தமும், ஈசான திக்கில் உள்ள குல வடிவு (பெரமாட்டான் குளம்) பிரம்ம தீர்த்தமும், பக்கத்தில் ஓடும் காவிரியின் கிளை நதியான ஒன்றை குமார தீர்த்தம் என்றும் அழைக்க, ஆக புண்ணிய தீர்த்தங்களாக 5 உள்ளன; இத்தலத்திற்கு இம்முருகாலயத்தின் பிரதான ராஜகோபுரம், ஐந்து நிலைகள் கொண்டு தெற்கு வாயிலில் அமைந்து பல சிற்பச் சிறப்புகளுடன் கம்பீரமாக திகழ்கிறது. கிழக்கு மற்றும் மேற்கு வாயில்களை மொட்டை கோபுரங்கள் அணி செய்கின்றன.

3 பிரகாரங்களைக் கொண்டுள்ளது கட்டுமலை கோயிலின் அடிவாரத்தில் உள்ள மூன்றாம் பிரகாரத்தை வலம் வந்து 28 படிகள் ஏறிச் சென்றால் இரண்டாம் பிரகாரம் செல்லலாம். அங்கிருந்து முப்பத்தி இரண்டு படிகள் ஏறிப் போனால் கருவறையில் சுற்றி அமைந்த முதல் பிரகாரம் வரும். 60 படிக்கட்டுகளும் 60 தமிழ் ஆண்டின் பெயர்களைக் கொண்டுள்ளது இங்கே குறிப்பிடத்தக்க ஒன்று.

தெற்கு நோக்கிய கோபுர வாயிலில் நுழைந்தால் மாமதுரை அன்னையாகிய அ.்.மி அங்கையர் கண்ணியின் சந்நிதி வர, அம்மையின் தரிசனம் பரவசமூட்டும். தன்னை வேண்டும் வறுமை படைத்தோருக்கு செல்வநிலை அருள்வாள் இவ்வன்னை!

அடுத்து இடம் பெற்றுள்ள அ.்.மி மீனாட்சி சுந்தரேஸ்வரரின் தனிச் சந்நிதியில், அவரை வணங்கிடலாம். ஒரு காலத்தில் மதுரையை ஆண்ட வரகுண பாண்டியன் பிரம்மஹத்தி தோஷம் பெற்றிருந்ததால் அதனைப் போக்கிக் கொள்ள திருவிடைமருதூர் தலம் வந்தான். போகும் வழியில் அவன் சுவாமிமலையில் சில நாட்கள் தங்கி இளைப்பாறினான். மதுரையில் பாண்டியன் இருக்கும் தினங்களில் அவர் மீனாட்சி-சுந்தரேசுவரர் தரிசனம் பெற்றே உண்ணும் பழக்கம் உடையோன். எவை சுவாமிமலை ஆலயத்தில் அவரது திருவுருவை ஸ்தாபித்து தினமும் வழிபாடு செய்தான் எனப்படுகிறது.

ஸ்ரீமீனாட்சி சுந்தரரை வலம் வருகையில் அ/மி தட்சிணாமூர்த்தி, விநாயகர், சோமாஸ்கந்தர், வள்ளி, தேவசேனா உடனுறை சுப்பிரமணியர், துர்க்கை, சண்டிகேஸ்வரர் மற்றும் நவகிரகங்களின் தரிசனத்தை பெற்றிடலாம்.

பிறகு படி கற்களின் மீது ஏறி இரண்டாம் பிரகாரம் வரலாம். இதன் கிழக்குச் சுற்றில் முருகப் பெருமான், சிவபிரானுக்கு பிரணவ உபதேசமருளும் அழகிய சுதைச் சிற்பத்தை காணமுடியும். சிவனின் மடிமீது சுவாமிநாதன் எழுந்தருளியிருக்க, இடப்புறம் பிரம்மன், அகத்தியர் வீரபாகு தேவரும், வலப்புறம் திருமால், நாரத முனிவர் ஆகியோர் இருக்க, நந்தியம் பெருமான் ஈசனின் திருவடிகளில் இடம் பெற்றிருக்கிறார்.

இரண்டாம் பிரகாரத்தின் தெற்கு சுவற்றில், கந்தரனுபூதி எழுதப் பெற்றுள்ளது. தவிர அருணகிரியாரின் திருஎழுகூற்றிருக்கை எனும் பாடலையும் வித்தியாசமாக தேர் வடிவ சித்திரக்கவி சலவைக் கல்லில் பொறித்து வைத்துள்ளனர்."ரத பந்தம்" என இதைச் சொல்வார்கள்.

இங்கிருந்து 32 படிகளை ஏறிக் கடந்து போனால் உச்சி எனும் முதல் பிரகாரம் அமைந்திருக்க, அங்கே தென்திசை எழுந்தருளியுள்ள தல விநாயகரின் தரிசனத்தை பெறலாம். ஒரு காலத்தில் கொங்கு நாட்டிலிருந்து சுவாமிமலை கோயிலுக்கு வந்த பிறவிக் குருடன் ஒருவன் கடுமையான உண்ணாநோன்பை மேற்கொண்டு சில காலம் இந்த கணபதியை தினமும் வழிபாடு செய்து அவரருளால் தன் கண்பார்வையை பெற்றான், இதனால் இவரை நேத்திரக்கணபதி என வழங்குகின்றனர் பக்தர்கள்.

மூலவர் குடிகொண்ட கருவறைக்கு செல்லும் முன்பாக வரும் மகா மண்டபத்தில் முருகனுக்கு பிடித்த பக்தன் இடும்பன் திருஉருவும், இடப்புறம் அகத்திய மாமுனிவர், அருணகிரிநாதர் ஆகியோரின் திரு உருக்கள் இடம்பெற்றுள்ளன. இங்கு காணப்படும் கருங்கல் தூண் மற்றும் சிற்ப வேலைப்பாடுகளுடன், வளைவான கொடுங்கைகளும், கல்லால் உருவான தொங்கும் தாமரை மொட்டும் தவிர யாழி உருவங்களும் இருந்து, நமது முன்னோர்கள் கொண்டிருந்த சிற்பத் திறன்களை அழகாக வெளிப்படுத்துகின்றன.

தங்கக் கொடிமரம் கொண்ட அ.்.மி சுவாமிநாத சுவாமியின் சன்னிதி கிழக்கு திசையை நோக்கியபடி உள்ளது. எழிலான கருவறையின் உள்ளே அகரம், உகரம், மகரம், நாதம், பிந்து என ஐவகை யானை ஓங்காரத்தின் உருவினராக, மெய் ஞான குருவாகவும் எழுந்தருளி அருள்பாலிக்கிறார் அ.்.மி சுவாமிநாத சுவாமி! இம்மூர்த்தி தம் இடக் கரத்தை இடுப்பில் அமர்த்தி, வலக்கரத்தில் திருதண்டமெனும் தண்டாயுதத்தை ஏந்தியவாறு, சிரசில் ஊர்த்துவ சிகாமுடி என்கிற கிரீடம் தரித்தும், தன் திருமார்பில் முப்புரிநூல் மற்றும் உருத்திராட்சம் பூண்டும் அளிக்கும் சுமார் 6 (ஆறு) அடி உயரத் திருக்காட்சி தரிசனம் எவரையும் பரவசப்படுத்திவிடும்!

மூலவர் தரிசனம் தரும் ஆனந்தமுடன், இத் திருக்கோயிலில் ஆங்காங்கே குடிகொண்டு தரிசனமளிக்கும் அ.்.மி. பாகுலேயே சுப்பிரமணியர், பாலசுப்பிரமணியர், கலைமகள், திருமகள்,

விசாலாட்சி, விசுவநாதர், நடராஜர், சண்முகர், பைரவ மூர்த்தி, சாஸ்தா, சூரியன், நவ வீரர்கள், கார்த்தவீரியன், ஆறுமுகம், தண்டாயுதபாணி, சேனாதிபதி எனும் சந்திரசேகர், ஆறுமுகனின் தேவிமார்கள், மாரியம்மன், பிடாரி அய்யனார், வள்ளி நாயகி, வேட குபமுருகன், நம்பிராஜன், அவனுடைய மனைவி நங்கை, நாரதர், விநாயகர் தனி உரு, பள்ளியறை இச்சை, கிரியை சக்தி தேவிகள், சண்டிகேஸ்வரர், தவிர இன்னும் பல தெய்வத் திரு உருக்களை தரிசிக்கலாம்!
சுவாமிமலை ஆலய பூஜை முறைகள் காரணாகமம் படியும் குமார தந்திர முறைப்படியும் நடத்தப்படுகின்றன.

பூஜை முறைகள் விபரம்:

காலை 5:30 மணிக்கு பால் நிவேதனமும், விஸ்வரூப தரிசனமும், உஷத் கால தரிசனம் காலை 7 மணிக்கும், காலசந்தி 9 மணிக்கும், உச்சி காலம் நண்பகல் 12 மணிக்கும் சந்தியாகாலம் மாலை 5:30 மணிக்கும் இரண்டாம் கால பூஜை இரவு 7 மணிக்கும் அர்த்தஜாம பூஜை இரவு 9 மணிக்கும் நடைபெறுகின்றன.

தினந்தோறும் காலை 5:30 மணியிலிருந்து முற்பகல் 12 மணி வரையும், பிற்பகல் 4 மணியிலிருந்து இரவு 9 மணி வரையும், இவ்வாலய தரிசன நேரங்களாகும்.

ஒவ்வொரு ஆண்டும் சித்திரை மாதம் 10 நாட்கள் பிரம்மோற்சவம் நடத்தப்படும் இத்திருக்கோயிலில் இடம்பெறும் வேறு சிறப்பு நிகழ்ச்சிகள் இவை-

வைகாசி விசாகப் பெருவிழா, ஆவணி பவித்ரோற்சவம் (10 நாட்கள்) புரட்டாசி நவராத்திரி விழா (10 நாட்கள்) ஐப்பசி கந்த சஷ்டி பெருவிழா (10 நாட்கள்) கார்த்திகை திருக்கார்த்திகை பெருவிழா (10 நாட்கள்) மார்கழி திருவாதிரைத் திருநாள் தனுர் மாத பூஜை (10 நாட்கள்) தையில் தைப்பூசப் பெருவிழா, பங்குனி ஸ்ரீ வள்ளிதேவி திருக்கல்யாண விழா, ஆண்டு தேரோட்ட விழா.

பிரார்த்தனை செய்து கொண்டோருக்கான தங்க ரத உற்சவம் தினந்தோறும் இவ்வாலயத்தில் நடைபெறும் இது கட்டண சேவையாகும்.

இதைத்தவிர இன்னும் எண்ணற்ற சிறப்புகளை கொண்ட, இத்திருக்கோயில் தமிழக அரசின் அறநிலையக் கட்டுப்பாட்டுக்குள் இயங்குகிறது.
கோயில் நகரான கும்பகோணத்தில் இருந்து 9 கி.மீ.தூரத்திலும், திருச்சி விமான நிலையத்திலிருந்து 82 கி.மீ.தூரத்திலும் சுவாமிமலை அமைந்திருக்க, சென்னை எழும்பூரிலிருந்தும், தஞ்சாவூரிலிருந்தும், கும்பகோணத்திலிருந்தும் சுவாமிமலை செல்ல புகைவண்டி வசதி மற்றும் மாவட்ட, நகரப் பேருந்துகள் உள்ளன.

சுவாமிமலை அ.ஃ.மி சுவாமிநாத சுவாமியை தரிசித்து வழிபடுவோருக்கு அவருடைய அடியவர்கள் வேண்டும் அனைத்தையும் அருள்வார் என்று நமக்கு இப்படி வழிகாட்டி அருள்கிறார் மஹான் அருணகிரிநாதர் இயற்றிய பாடல் வரிகள் வாயிலாக;
“பதினாறுலகத்தினில் உற்றுறு பக்தர்கள் ஏது நினைத்தது மெத்த அளித்தருள் இளையோனே”
(திருப்புகழ்)
வைகாசி விசாகனின் அருளை என்றென்றும் பெறுவோம்!




# நாயன்மார் வரலாறு

# திருக்குறிப்புத் தொண்டர்

# ‘இதுவும் பக்தி தான்’





ரா. பன்னீர்செல்வம்

சாதாரண மனிதர்கள் இறைவனின் அருளை எந்தவிதத்தில் பெற்று நாயன்மார்களாக இன்று வணங்கப்படுகின்றார்கள்?

இதில் என்ன சந்தேகம்! அவர்கள் கொண்ட பக்தியினால் தான்!

இறைவன், அவர்களைத் தன் நிழலில் இருத்தி, தெய்வ நிலைக்கு உயர்த்தி, வணங்கத் தக்கவர்களாக வரித்துக் கொண்டது எங்ஙனம்? அதுவும் பக்தியால் தான்! சரி....

பக்தி என்றால் என்ன?...

பசித்த வயிற்றுக்கு சோறு இல்லாத பாமரன் ஒருவன், இறைவன் மீது மட்டுமே நம்பிக்கை வைத்து வாழ்கிறானே அது பக்தி!

வசிக்க ஒரு கூரை இல்லை எனினும் வானமே கூரை எனக் கொண்டு, வாசிப்பதும் சுவாசிப்பதும் ஐந்தெழுத்து மந்திரமான “நமசிவாய“ மட்டுமே என எப்பொழுதும் ஒருவன் இறை சிந்தனையில் ஆழ்கிறானே அது பக்தி!

காலணாவுக்கு கற்பூரம் வாங்கி ஏற்றிவிட்டு, அந்த “கற்பூர ஜோதியே இறைவன்“ என கைகூப்பி வணங்குவதும் பக்திதான்! அந்தக் காலணாவுக்கும் வழியில்லாமல் கைகளைக் கூப்பி “கடவுளே, உனையன்றி வேறேது துணை” என வணங்குவதும் பக்திதான்.

செல்வம் படைத்தவன் தங்கத்தேர் இழுப்பதும் செல்லும் இடம் தெரியாமல் பரதேசியாய் திரிபவன் தனது மனத்தேரிலே இறைவனை வைத்து போற்றுவதும் பக்திதான்!

அவரவர் நிலையைப் பொறுத்து பக்தி இத்தனை வகைகளாக இருந்தாலும் நோக்கம் என்ற ஒன்றுதான் ஒருவன் கொள்கின்ற பக்தியின் தரத்தை உயர்த்துகிறது.

“எனக்கு இதைக் கொடு“ என இறைவனை வேண்டி நிற்பதற்கும், எல்லோரும் நல்லா இருக்கணும் என வேண்டிக் கொள்வதற்கும் நிறைய வித்தியாசம் உண்டு! இந்த வித்தியாசம் தான் ஒரு மனிதனை நோக்கி இறைவன் வருவதற்கு காரணமாக அமைந்துவிடுகிறது.

அப்படித்தான், சுயநலம் ஏதுமின்றி இறைவனையும் இறை அடியார்களையும் மதித்து, துதித்து, இறை சிந்தனையை பெரிதென எண்ணி

வாழ்ந்தவர்களை நோக்கி இறைவன் வந்தான். இன்னருள் தந்தான்! அப்படி இன்னருள் பெற்றவர்கள் தான் இன்று அறுபத்து மூவர் என ஆலயங்களில் ஆராதிக்கப்படுகின்ற நாயன்மார்கள்.

அந்த வரிசையில், பாமரனாய் தோன்றி, தன் பக்தியால் மட்டுமே பரமனை ஈர்த்த ஒரு சிவனடியார் தான் திருக்குறிப்புத் தொண்டர் ஆவார்!

இவர் இறைவனின் குறிப்பை மட்டுமல்ல, அடியார்களின் குறிப்பையும் அறிந்து வாழ்ந்து, அருந்தொண்டாற்றிய அண்ணல்! வாழும் குலம் எதுவாயினும் வாழும் நெறியறிந்து வாழ்ந்தவர்! வாழும் நாளெல்லாம் இறைப்பணி செய்தலே வளமான வாழ்வு என செயல்பட்டவர்! இதோ....

புண்ணியத் தலமாக போற்றிப் புகழப்படும் காஞ்சி நகரிலே சலவைத் தொழில் செய்யும் குலத்திலே தோன்றி, சர்வேஸ்வரனே கதி என்று வாழ்ந்தவர்.

ஊரார் துணிகளை வீடு வீடாய் சென்று சேகரித்து அதனை ஆற்று நீரில் வெளுத்து, மாலைப் பொழுதில் அவரவர் ஆடைகளை அவரவரிடம் ஒப்படைத்து, அவ்வீட்டார் கொடுக்கின்ற உணவினை கொண்டுவந்து வயிறு வளர்க்கும் வண்ணார் தொழில்! ஆனாலும் அந்த உடை வெளுக்கும் தொழிலிலும் ஒரு உன்னத லட்சியத்தைக் கொண்டிருந்தார்.
அது என்ன லட்சியம்?!

தினந்தோறும் சிவனடியார் ஒருவரை தேடி கண்டுபிடித்து அவரது காஷாய உடையை வாங்கி, அதனை வெளுத்த பின்பே மற்ற ஆடைகளை வெளுப்பது என்ற உயர்ந்த நோக்கம் இவர் மனதில் ஊறிக் கிடந்தது. இந்த நோக்கத்திற்கான விதையை இவரது மனதிலே ஊன்றியது சாட்சாத் அந்த இறைவன் சிவனே என்பதை உறுதி செய்யும் வகையில் இவர் வாழ்வில் நிகழ்ந்த ஒரு சம்பவமே... இல்லையில்லை, இறைவன் நிகழ்த்திய ஒரு சம்பவமே இவரை பக்தி பேரொளியாய் ஜொலிக்க வைத்தது எனலாம்.
அன்றைய காலகட்டத்தில்

அனாப்பைசாவைக் கூட ஆண்டுக்கு ஒரு முறையேனும் பார்க்க கொடுத்து வைக்காத வறிய குலம் இந்த வண்ணார் குலம்! வறுமையின் நிழல் படிந்தாலும் நெஞ்சில் வஞ்சம் படியா உத்தமராக விளங்கினார் திருக்குறிப்புத்தொண்டர்.

இவருக்குத் தேவையெல்லாம் தினமும் ஒரு சிவனடியாரின் ஆடை! அது கிடைக்கவில்லை- அடியார் எவரும் கண்ணில் தென்படவில்லை என்றால் அதனை இறைவனின் சோதனை என எண்ணி வருந்துவாரே தவிர, தான் வாங்கி வந்த ஊரார் துணிகளை அன்று வெளுக்கவே மாட்டார்! "ஊராரின் ஏச்சும் பேச்சும் இவரை காயப்படுத்தும்; அதனை லட்சியம் செய்யவே மாட்டார்! பரமனின் அடியவர்களுக்கு பணி செய்ய முடியவில்லையே என்று வருந்துவாரே தவிர, வேறு எதற்கும் கலங்கவே மாட்டார்! ஊரார் துணிகளை வெளுக்காதலால் அன்று உணவு கிடைக்காது; ஈசன் இன்று அடியாரை அனுப்பி அருள் செய்யவில்லை; அதனால், ஈரத்துணி போட்டு வயிற்றை ஆற்றுப்படுத்த முடியாமல் கூட, தன் வாழ்நாளில் ஒருநாள் வீணானதென்றே எண்ணி கவலைப்படுவார்.

அக்கம்பக்கத்தில் உள்ள சக தொழிலாளர்கள், உறவுக்காரர்கள் என்று எவர் சொல்லும் அறிவுரைகளையும் இவர் ஏற்றதில்லை.
"ஒருநாள் சிவனடியார் யாரும் வரலன்னா என்ன?... அடுத்த நாள் நாலு பேரா வந்தா.... எல்லோருடைய துணிகளையும் வெளுக்கலாமே! அதுக்காக, ஊரார் துணியை துவைக்கறத விட்டு இப்படி பட்டினியா கிடக்கணுமா? " என்பார், ஒரு கிழவி.
"ஒரே நாள்ல மொத்தமா எத்தனை சாமியாரோட துணிகளை வெளுத்திருக்கிற! யாரும் வராத நாள்ல அந்தக் கணக்குல கழிச்சிட வேண்டியதுதானே!? அத விட்டுட்டு ஊர் பொல்லாப்பு எதுக்கு? " என்பான் ஒருவன்.

இவை எதையுமே காதில் வாங்கிக் கொள்ள மாட்டார், நம் சிவப்பிரியர்! "உலகாளும் ஈசனின் அடியார் துணிகளை வெளுக்காமல் ஒருவர் துணிகளையும் வெளுக்க மாட்டேன்; இது என் இறைவனுக்கு நான் செய்திருக்கும் சங்கல்பம்! இதனை மீற என்னால் இயலாது! தயவு கூர்ந்து என்னை வற்புறுத்த வேண்டாம் என்று அமைதியாக சொல்லிவிட்டு அந்த இடத்தை விட்டே அகன்று விடுவார்.

இப்படிப்பட்ட ஒரு இறைத்தொண்டரை பக்தியுலகம் மெச்சி போற்ற வேண்டும் என அந்த இறைவன் நினைத்ததில் தவறு ஏதும் இல்லை அல்லவா?
அதற்காக ஒரு நாள் குறித்தான் இறைவன்! சைவ சமயத்தின் பெருமையை உணர்ந்த சிவத்தொண்டர்களை சோதனைகளுக்கு

ஆட்படுத்தி, அழிவில்லாத சுகத்தை அளிப்பதில் அந்த உலகமகா ஜோதிக்கு இணையேது!?

இறைவன் இதனை செயல்படுத்த எண்ணிய அந்த நாள்.... உண்பதற்கு ஏதும் இல்லை என்றாலும் தூய ஆடையை இடையில் உடுத்தி, தூவெண்ணீறை உடலெல்லாம் பூசியபடி, முன்தினம் ஊரார் தயக்கத்தோடு கொடுத்த அழுக்குத் துணிகளை சிறு மூட்டையாய் கட்டி, தோளில் மாட்டிக் கொண்ட நம் அன்பர், ஆற்றங்கரையை நோக்கி நடை போட்டார்!

பாதமோ ஆற்றை நோக்கி; பற்றோ பரமனின் மேல்; பார்வையோ சிவனடியார்களைத் தேடி! ஆற்றை நோக்கி அவர் நடந்தாலும் ஒரே ஒரு சிவனடியாராவது தன் பார்வையில் பட்டு விட மாட்டாரா என்னும் தவிப்பு அவரது இதயத்தை தடதடக்கச் செய்தது!

காவி உடை ஏதேனும் கண்ணில் பட்டுவிடுமா? நீறு பூசிய திருமேனியுடன் சிவனடியார் எவராவது தென்படுவாரா? சடைமுடியோடு யாரும் சன்னியாசி கோலத்தில் சர்வேஸ்வரன் இன்று ஒருவரையாவது அனுப்பி வைக்க மாட்டானா? என்னும் தவிப்பும் எதிர்பார்ப்பும் இணைய, தேடினார்.... தேடினார்.... தேடியபடியே நடந்தார்.

நகரின் முக்கிய வீதிகளை கடந்து விட்டார்! இனி, நகரின் வெளிப்புறம் வந்துவிடும்; அங்கெல்லாம் எந்த ஒரு சிவனடியாரும் இருக்க வாய்ப்பில்லை.
"இன்றும் அந்த பேற்றினை இழந்து விடுவேனோ?" ஏமாற்றம் நேர்ந்துவிடுமோ என்கிற ஏக்கம் அவரை நிலைகுலையச் செய்தது; அப்படியே நின்றார்! சற்று யோசித்தார்.

காஞ்சியில் இருந்தபடி உலகையே ஆளுகின்ற ஏகாம்பரேஸ்வரரின் ஆலயம் நோக்கி நடை போட்டார்! பக்தர்கள் கூட்டம் சிறிதளவே இருந்தது! வெளியிலிருந்து ஆலயத்தின் உட்செல்வோர், உள்ளிருந்து வெளியே வருவோர் அனைவரையும் கூர்ந்து கவனித்தார். சிவனடியார் ஒருவர் கூட கண்ணுக்குத் தென்படவில்லை. கவலை தோய்ந்த முகத்துடன் பார்த்தபடியே நின்றார். கால்கள் கடுத்தன; நேரம் சென்று கொண்டே இருந்தது.

இனி வேறு வழியில்லை, வாழ்வளிக்கும் ஆற்றங்கரையே ஆண்டவன் வீடு; அங்கேயே சென்று பார்க்கலாம் என முடிவெடுத்த நிலையில்
அதோ.....
ஆலயத்தின் உள்ளே இருந்து....

அந்த ஆண்டவனே இறங்கி வந்ததைப் போல ஒரு சிவனடியார் வெளியே வந்தார்! அவரைப் பார்த்ததும்....

இருண்ட வானில் மின்னல் தோன்றி வெளிச்சம் காட்டியது போல் நமது அடியவரின் முகத்திலே ஒரு வெளிச்சம்; மலர்ச்சி! "இறைவா," என்று வாய்விட்டு சொல்லிவிட்டார்!

தளர்ந்திருந்த நடை தாராள நடையாய் மாறிட, அந்த சிவனடியாரை நோக்கி, சிவத்தை நினைத்தபடி நடை போட்டார்!
"என் ஆண்டவன் அடியவரை அனுப்பி வைத்தான்! வாழ்க எம்மான்..... ஓம் நமச்சிவாய" என மனதில் நினைத்தபடி சிவனடியாரை நெருங்கி," திருச்சிற்றம்பலம்.... "என்றார். சிவனடியாரும் கருணை பொங்கும் முகத்தோடு," திருச்சிற்றம்பலம்.... யாரப்பா நீ?.... இந்த சன்னியாசியிடம் எதை எதிர்பார்த்து இப்படி ஆவலோடு நிற்கிறாய்? " என்றார்.

அவரது திருப்பாதங்களில் விழுந்து வணங்கி எழுந்தவர், " சுவாமி.... நான் ஊரார் துணிகளை வெளுப்பவன்; தினமும் ஒரு சிவனடியாரின் ஆடையை வெளுத்த பின்னரே, என் பணியை செய்வதாக இறைவனிடம் சூளுரைத்து அந்த கொள்கையை தவறாமல் கடைபிடித்து வருகிறேன். இறைவனின் சோதனை போலும்; காலையிலிருந்து அடியார் ஒருவரையும் காணவில்லை!"... என முடிப்பதற்குள், "சரியான நேரத்தில் நான் அகப்பட்டு விட்டேன்.... அப்படித்தானே?!" என சிரித்தார்.

"சுவாமி..... இறைவனின் திருவுள்ளம், தங்களிடமுள்ள ஒரு துணியைக் கொடுங்கள்; அதை வெளுத்து என்னுடைய சிவ தொண்டினைச் செய்து மகிழ்கிறேன்".... என்றார்.
"நீ மகிழ்வாய்.... என்னிடம் உள்ள ஒரே துணி இந்த மேலாடை.... துண்டு மட்டும் தான்! இதை நான் உன்னிடம் கொடுத்து, நீ சரியான நேரத்தில் திருப்பிக் கொடுக்காமல், நான் உன்னை தேடி அலையும் அவலம் ஏற்பட்டுவிடுமோ என அஞ்சுகிறேன்," என்றார் சிவனடியார்.

நடுங்கிய திருக்குறிப்புத் தொண்டர், "சுவாமி.... அப்படி எதுவும் நடவாது! இது என் வைராக்கியம்! தங்கள் ஆடையை துவைத்து முடித்த பின்னரே என் பணியை தொடங்குவேன்.... சரியான நேரத்தில் தங்கள் துணியை துவைத்து தூய்மையாக்கி உலரவைத்து தங்களிடம்

ஒப்படைப்பேன்.... தயங்காதீர்கள்.... தயை கூர்ந்து என் சிவப்பணிக்கு உதவி செய்யுங்கள்" என கெஞ்சியபடி நின்றார்.

சிரித்த சிவனடியார், "சரி.... நீ அழுதே விடுவாய் போல இருக்கிறது! இதோ.... என் மேலாடை! இருப்பது இது ஒன்றுதான். பத்திரம்.... நன்றாக வெளுத்து வை! நானே ஆற்றங்கரைக்கு வந்து வாங்கிக் கொள்கின்றேன். இந்தா"..... எனக் கொடுத்தார். அதனை வாங்கி, கண்களில் ஒற்றிக் கொண்டபடி ஆனந்தத் துள்ளலோடு ஆற்றங்கரையை நோக்கி நடந்தார்.
ஆற்றங்கரையை அடைந்த நமது தொண்டர், உற்சாகத்தோடு துணி மூட்டையை மணலில் வைத்தார். சிவனடியாரின் காவி துணியைக் கண்களில் ஒற்றி பரவசத்துடன் பார்த்தார். மனம் நெகிழ்ந்தார். இதை சற்று தொலைவில் இருந்து கவனித்த சக துணி வெளுக்கும் தொழிலாளர்கள் "இவர் இப்படித்தான்" என எண்ணி ஏளனமாக சிரித்தனர்.

இவை எதையும் நம் தொண்டர் கவனிப்பதில்லை. காரணம், சிவனடியாரின் துணிகளை இவர் வெளுப்பதினால் மற்றவர்கள் அடித்துத்துவைக்கும் துணியின் அழுக்கு, அடியாரின் உடைகளை அசுத்தப்படுத்தாதிருக்க, சற்றுத்தள்ளி மற்றவர்களுக்கு முன்னே சென்று தூய நீரில் துவைப்பதை தனது வழக்கமாய்க் கொண்டிருந்தார். அன்றும் அவ்வாறே தனது இடத்திலுள்ள துணி துவைக்கும் கல்லின் மீது அடியவரின் துண்டை வைத்து, இறைவனுக்கு நன்றி கூறியபடி ஓடுகின்ற ஆற்றுநீரை, தனது இரண்டு கைகளாலும் அள்ளி, துணியின் மீது தெளித்து நனைக்க....

அடுத்த நொடியே, வானத்தை சல்லடையாக்கி, வருணன் தன் மழைத் தாரைகளை பூமியை நோக்கி செலுத்தினான். எங்கிருந்து வந்தது இந்த மாமழை என எவருமே எதிர்பாராத வண்ணம் சடசடவென்று கணப்பொழுதில் நிலத்தை நனைத்து நீரோடியது!
தொண்டரைத் தவிர, மற்ற சலவை தொழிலாளர்கள் வேகமாக ஓடிச்சென்று சற்று தொலைவில் இருந்த மரத்தடியில் நிற்க, நமது தொண்டரோ, தான் நனைவதை பற்றி கவலையில்லாமல் அடியவரின் துண்டை நெஞ்சில் அணைத்தபடி, மழையில் நனைந்தவாறு," இறைவா! மழை சீக்கிரமே நிற்க வேண்டும்" என வேண்டிக் கொண்டிருந்தார்.

சோதிபவனிடமே, "சோதனையை நிறுத்து" என வேண்டுவதால் என்ன பலன்? மழை பலமடங்கு பலமாய் கொட்டித் தீர்த்தது. மரத்தடியில் நின்றவர்கள் தொண்டரை அழைத்தனர். "நனைய வேண்டாம்; இங்கே வந்து விடுங்கள்; மழை இப்போதைக்கு நிற்காது", என கூச்சலிட்டனர். தொண்டரின் உள்ளத்திலோ "அடியவரின் துணியை எப்போது வெளுத்து, எப்போது உலர்த்தி, எப்போது கொடுப்பது? மழை விட்டவுடன் வந்து விடுவாரே.... என்ன செய்வேன்?" என்ற சிந்தனையில் அவரது கண்களில் நீர் சுரந்து மழை நீரோடு மாயமாகி கரைந்து கொண்டிருந்தது.

நேரம் கடந்து கொண்டிருந்தது, மழை சற்றே வலுக்குறைய, பகலவன் தன் பணியை முடித்து மேற்கில் மறையப் போகும் நேரம்! மழை தூறலாய் மாறியது!.. விட்டு விடும் என்ற நிலை.

நமது தொண்டர் சற்றே ஆறுதலடைந்தவராய் துண்டை எடுத்துப் பிழிய, இரண்டு மூன்று கிழிசல்களுடன் தெரிந்தது துண்டு!
பதறிவிட்டார் தொண்டர்! இறைவா! இது என்ன கொடுமை! அடியவர்க்கு கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாமல் ஆடை இப்படி அலங்கோலமாய் கிழிந்து கிடக்கிறதே! இதனை எப்படி அவரிடத்தில் நான் கொடுப்பேன்?! தெய்வ நிந்தனைக்கு ஆளாகி விட்டேனே....

ஒரு சிவனடியாருக்கு துன்பம் இழைத்த பாவத்திற்கு ஆளாகிய நான் இனி உயிரோடு இருந்து என்ன பயன்? இனி நான் வாழ்ந்து என்ன பயன்? இறைவா, என்னை ஏற்றுக்கொள்... ஏற்றுக்கொள், " என தான் துணி துவைக்கும் கல்லிலே தலையை பலமாய் மோதிக்கொள்ள...

திடீரென கல், மலர் போல மெத்தென்று இருக்க, அதிர்ச்சியுடன் தொண்டர் நிமிர்ந்து பார்க்க, சிரித்தபடி நின்றார் சிவனடியார்". அடியார்களின் குறிப்பறிந்து உதவும் நீ இன்றுமுதல் திருக்குறிப்புத் தொண்டன்" என்னும் பெயர் தாங்கி நாயன்மார்களில் ஒருவராக விளங்குவாய்! எனக்கூறி மறைந்தார்.

அப்போதுதான் தன்னைச் சோதிக்க இறைவனே நேரில் வந்ததை அறிந்து, மகிழ்வோடு இறையடியில் இணைந்தார்.




சைவ சித்தாந்த செம்மல்
**கவிஞர். சீனு. செந்தாமரை**
கடலூர்

## திருக்கோயில் திருஉலா

# *தாகம் தீர்த்த புரீஸ்வரர் திருக்கோயில்!*

திருஞானசம்பந்தர் சுவாமிகளுடன் தொடர்புடைய சிவன் கோயில்கள் (அல்லது) அதிசய சிவாலயங்கள்

இறையூர் பெயரே அழகு! தேவாரத் திருப்பதிகங்களில் மாறன்பாடி என்றே உள்ளது. நால்வர்களில் ஒருவரான திருஞான சம்பந்தப் பெருமானுக்கு அருள்பாலித்த மகா சிவாலயம். இறையூர் அருள்மிகு தாகம்தீர்த்தபுரீஸ்வரர் திருக்கோயில்!

சென்னையிலிருந்து உளுந்தூர்பேட்டை விருத்தாசலம் வழியாக பெண்ணாடம், தொழுதூர்-விருதாச்சலம் பேருந்து சாலையில் தொழுதூரிலிருந்து 20 கிலோமீட்டர் தொலைவிலும், கடலூர் விருத்தாசலம் வழியாக பெண்ணாடம் நகர் அருகே, அதாவது பெண்ணாடம் புகைவண்டி நிலையத்தில் இருந்து 4 கிலோமீட்டர் தொலைவிலும், மாறன் பாடி எனப் போற்றப்பெறும், இறையூரில் அருள்மிகு தாகம் தீர்த்த புரீஸ்வரர் திருக்கோயில் மிகுந்த எழிலுடன் அமைந்துள்ளது.

தல இறைவனின் பெயர் - ஸ்ரீ தாகம் தீர்த்தபுரீஸ்வரர். அம்பிகை பெயர் ஸ்ரீ அன்னபூரணி அம்பிகை.

திருஞானசம்பந்தர் சுவாமிகள் கேட்காமலேயே சுவாமிகளுக்கு முத்துச் சிவிகை தந்து அழைக்கப்பட்ட அற்புதத் தலம்.

சுவாமிகளுடன் வந்த அடியவர்களுக்கு இத்தல அம்பிகையே அமுது படைத்ததாகவும், தம் அடியவர்களின் தாகத்தைத் தீர்த்ததால்,

இத்தல இறைவனுக்கு தாகம் தீர்த்தபுரீஸ்வரர் என்ற திருப்பெயரும் உண்டு.

கேட்காமலேயே திருஞானசம்பந்தருக்கு வரம் அருளிய ஈசன் அருள் பாலிக்கும் மகா சிவாலயம் இது என்றால்- இதே பகுதியில் அதாவது தொழுதூர் - விருதாச்சலம் பேருந்து சாலையில் தொழுதூரிலிருந்து 20 கிலோமீட்டர் தொலைவிலும், கடலூர் விருத்தாச்சலம் பெண்ணாடம் சாலையில் கொடிக்குளம் என்னும் ஊரில் அற்புதமாக எழுந்தருளிய ஸ்ரீ தீர்த்தபுரீஸ்வரர் அருள்பாலிக்கும் மகா சிவாலயமும் திருஞானசம்பந்தர் உடன் நெருங்கிய தொடர்பு உடைய ஆலயமாகும்.

ஸ்ரீ ஆனந்தீஸ்வரர், அரத்துறை நாதர் என்ற திருப்பெயர்கள் இத்தல ஈசனுக்கு உள்ளது. ஸ்ரீ ஆனந்த நாயகி, ஸ்ரீ திரிபுரசுந்தரி, ஸ்ரீ அரத்துறை நாயகி என்ற திருப்பெயர்கள் இத்தல அம்பிகைக்கு உண்டு.
திரு ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் சுந்தரர் ஆகியோர்களால் தேவாரத் திருப்பதிகங்கள் பெற்ற அற்புதத் தலம்.

நடுநாட்டு திருத்தலங்களில் முதன்மையானது திருநெல்வாயில், அரத்துறை, திருவரத்துறை, திருவருட்துறை என்று மிகுந்த பக்தியுடன் அழைக்கப்படுகின்ற மிகப் பழமையான தலம்.

மாறன் பாடி என்ற இறையூருக்கு வருகை தந்து தரிசித்த திருஞானசம்பந்தருக்கும் அவரது அடியவர்களுக்கும் திருவமுது படைத்து, தாகம் தீர்த்து, இரவு தங்க வைத்து, மறுநாள் நான்மறை முழங்க, நாத நல்லிசை வழங்க முத்துச் சிவிகை வழங்கி- முத்துக் கொடை, சிவ சின்னங்களை வேதவிற்பன்னர்கள் மூலமாக வழங்கி மிகுந்த சிறப்புடன் வரவேற்று அவர் கேட்காமலேயே அருள்பாலித்த மகா சிவாலயம். தலவிருட்சம் ஆலமரம். தல தீர்த்தம் நிவா நதி. முன்னோர் வழிபாட்டிற்கு ஏற்ற உயரிய தலம். இத்தலங்களை இனிதே தரிசிப்போம். சிவனருள் பெறுவோம்.



## சித்தர் பூமி

# போகர்

## பதினெண்மரில் சிறந்தவர்






ரா. பன்னீர்செல்வம்

நமது தமிழ்மண் சித்தர் பூமி என்பதை நாம் நன்கு அறிவோம். இந்த இதழில் 18 சித்தர்களில் தலையாய சித்தராய் விளங்கி, இன்றளவும் உலகத் தமிழர்கள் வணங்கும் ஒப்பற்ற பழனி முருகன் சிலையை நவபாஷாணம் என்னும் ஒன்பது பாஷாணங்களால் கட்டமைத்து அருளும் ஆரோக்கியமும் இணைந்து மக்களை சென்றடைய வழி செய்த சித்தர் போகரை பற்றி காண்போம்.

நவநாத சித்தர்கள் என போற்றப்பட்ட தலைமை சித்தர்களில் முக்கியமானவரான காலங்கிநாதரின் சீடராய் விளங்கியவரே போகர்! புலிப்பாணி என்கிற ஒப்பற்ற சித்தரின் குருவானவரும் போகரே!

திருமூலரின் காலத்தைச் சேர்ந்தவரான போகர், தமிழ்நாட்டிலிருந்து சீன தேசத்திற்கு சென்று அங்கு பல காலம் வாழ்ந்து சீன மொழியில் பல வைத்திய சாஸ்திர நூல்களை இயற்றியுள்ளார் என்று அறியப்படுகிறது.

அதன் பிறகு தான் தமிழகம் திரும்பி வந்து பழனி மலையில் முருகன் சிலையை தானே செய்து பிரதிஷ்டை செய்தார் என்றும் நம்பப்படுகிறது.

சீனாவில் இவரது பெற்றோர் துணிகளை வெளுத்து பிழைப்பு நடத்தியவர்கள். இந்த விபரங்கள் அகத்தியர் 12000 என்ற நூலில் அடங்கியிருப்பதைக் காணலாம். இன்னும் சீன நாட்டில் உள்ள வெள்ளை இனத்தவர் போகர் மரபைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுவதை அறியலாம்.

சீனாவில் வாழ்ந்த போது போகருக்கு போ-யங் என்கிற பெயர் இருந்ததென்றும் வா-ஒ-சியூ என்னும் பெயரில் மிகச் சிறந்த ஞானி என்றும் போற்றப்பட்டதாக "போகர்" சுத்த காண்டம் என்னும் நூலில் விபரங்கள் காணப்படுகிறது.

போகர் சீன தேசம் செல்வதற்குமுன் கொங்கணவர், இடைக்காடர், கருவூரார், சட்டைமுனி போன்ற சீடர்கள் புடைசூழ தமிழ்நாட்டில் இருந்தவர் என்னும் குறிப்புகளும் காணப்படுகின்றது.

சீனாவிலிருந்து இவர் திரும்பி வருகின்ற பொழுது புலிப்பாணி மட்டுமே இவருடன் சீடராக இருந்ததாகவும் செய்திகள் உண்டு. புலிப்பாணி, போகரை தமிழ்நாட்டிற்கு அழைத்து வருவதற்கு முன்பு "போ -யங்" என்கிற சீனரின் உடலில் கூடுவிட்டு கூடு பாய்ந்து, சீன நாட்டினராகவே வாழ்ந்தார்; அதனால்தான் போகருக்கு போ -யாங் என்கிற பெயர் வந்ததாகவும் அறியப்படுகிறது.

## தமிழ் மண்ணில் தவம்

போகர், தன்னுடைய தவ வலிமையை கொண்டு இந்த மண்ணில் உள்ள மக்களின் நல்வாழ்விற்காக பயன்படுத்தவே எண்ணி, பெரும் தவங்களை மேற்கொண்டார்.

தன்னைச் சுற்றியிருந்த சீடர்கள் 63 பேரும் சமாதி நிலையில் இருக்கச் சொன்னவர், தானும் தவ நிலையை அடைந்தார். மேலும் தன்னுடைய ஞான சித்திகளைப் பெருக்கிக் கொள்ளும் முகமாக மேருமலை, இமயமலை போன்ற ஏகாந்த மலைகளுக்கு சென்று அங்கு தவமியற்றும் சித்தர்களிடம் இருந்து காய கல்பம் என்னும் அழியாமல் உடலை பாதுகாக்கும் ரகசியங்களை அறிந்து கொண்டார்.

கண்ணிருந்தும் குருடராய் இருக்கும் மனித சமூகத்தை விழிப்புணர்வு பெற செய்து நல்வாழ்வினை நல்குவதே தனது லட்சியம் என்று இவரது செயல்பாடுகள் அனைத்தும் இருந்தன.

மக்களின் இன்றியமையாத தேவையாய் இருந்தது செல்வம் ஒன்றுதான். மக்களின் நலனுக்காகவும் தவம் செய்வோரின் வளமைக்காகவும் தங்கம் செய்யும் முறையை மூலிகைகள் மற்றும் பொருட்களை கொண்டு பயிற்றுவித்தார்.

வியாதி என்று தவிப்போரின் வியாதிகள் நீங்கவும் மீண்டும் அந்த வியாதிகள் அண்டாதிருக்கவும் மூலிகை ரகசியங்களை அறிந்து அனைவருக்கும் கற்றுக் கொடுத்தார்.

போகம் கொள்வது மட்டுமே வாழ்வின் இன்பம் என்று இருந்தோர்க்கு அதன் நன்மை தீமைகளை விளக்கினார்.

இவருடைய காயகல்ப்ப முறைகளும் குளிகைகள் செய்யும் முறையையும் நன்கு தெரிந்தவர் என்பதால் தான் அறிந்த கலையை தனது சீடர்களுக்கும் பயிற்றுவித்தார்.

மேலும் போகர், தான் தயாரித்த குளிகைகளின் மூலமாக ஆகாய மார்க்கத்தில் பயணித்து, இமயமலை மற்றும் மேரு மலையில் தவம் புரியும் சித்தர்களை நேரில் தரிசித்து ஆசி பெற்றார். அங்கிருந்த சித்தர்களும் தாங்கள் அறிந்திருந்த காயகல்ப ரகசியங்கள் பலவற்றை போகருக்கு தெரியப்படுத்தினர் அப்போதெல்லாம் அந்த சித்தர்கள் சொன்ன கருத்து என்னவென்றால், "உலக மாந்தர்கள், என்னதான் நாம் நல்வழி காட்டினாலும் அதில் பயணப்பட மாட்டார்கள். விதியே அவர்களை வழிநடத்தும்; மக்கள் உன்னை இழிவுபடுத்தினாலும் கண்டுகொள்ளாமல் உனது முயற்சிகளை தொடர்ந்து செய்"... என அறிவுறுத்தினர்,போகருக்கு!

## பொன்மயமான மலை:

ஒரு முறை"...... ஓர் புது மணமான இளைஞன் ஒருவன் இறந்து விட, அவனது இளம் மனைவி அழுது துடித்ததைக் கண்டு வேதனை கொண்டார், போகர்!

இறந்தவர்களைப் பிழைக்க வைக்கும்

சஞ்சீவினி மந்திரத்தை அறிந்தால் இப்படிப்பட்ட இன்னல்களை தவிர்க்கலாமே என எண்ணிய போகர், சஞ்சீவி மந்திரத்தை அறிந்து கொள்ளும் பொருட்டு நவநாதர்கள் இருந்த மேருமலையை அடைந்தார். மனமுருக வேண்டினார். ஒன்பது சித்தர்களும் போகருக்கு தரிசனம் தந்தனர். "என்ன வேண்டும்?" என அவர்கள் கேட்க, "இறந்தோரை பிழைக்க வைக்கும் சஞ்சீவினி மந்திரம் வேண்டும்", எனக் கேட்டார், போகர்!
"இது என்ன விபரீதம்?" என எண்ணிய அந்த சித்தர்கள்," போகா! கடவுளின் நியதியை மீற நினைக்கிறாய்; அது நடக்காது.... இனியும் நீ முரண்டு பிடித்தால்.... நீ கற்றது அனைத்தும் தக்க சமயத்தில் மறந்து போகும்!" எனக் கூறினர்."

"உலக மாந்தர் நலமுடன் வாழவேண்டும் என்று நான் நினைப்பது தவறா?. இனி நான் உயிருடன் இருந்து என்ன பயன்?" என நொந்து கொண்டார்

சித்தர்கள், "சரி.... எவ்வளவோ காயகல்ப முறைகளை கற்றறிந்தவன் நீ.... நீ இறந்தால் அவை யாருக்கும் பயன்படாது; எனவே மனதைத் தேற்றிக் கொள்! தகுதி உள்ளவர்களுக்கு மட்டும் காயகல்ப முறைகளைக் கற்றுக் கொடு: இன்னும் நீ அறிந்திராத காய கல்ப முறைகள் சிலவற்றையும் நாங்கள் கற்றுத் தருகிறோம்," என்றனர். சொன்னதோடு கற்றும் கொடுத்தனர்.

அவற்றைக் கொண்டு, உடலை இலகுவாக்கி ஆகாயத்தில் பறப்பது; நீரின் மீது நடப்பது; போன்ற பல சித்துக்களை அரங்கேற்றினார் போகர்! மேலும் பாதரசத்தை கட்டும் முறைகளையும் பயின்றார்.

பிறகு, சீன தேசம் சென்ற போகர், நம்மை அணுகிவந்த சித்தர்களுக்கு எண்ணற்ற ரகசியங்களை கற்றுக் கொடுத்தார்.

இவ்வளவு அறிந்திருந்தும் போகரின் தாகம் அடங்கவில்லை! இன்னும் தெரிந்து கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது என நினைத்தவர் மீண்டும் மேரு மலையை நோக்கி வந்தார், அங்கே....

காலங்கி நாதரின் சமாதியை கண்டதும் போகரின் நெஞ்சில் ஓர் ஆணவம் உதித்தது." நான் ஒருவன் மட்டுமே காலங்கி நாதரின் சீடன்... இப்பெருமை ஒன்றே போதும்", எனக்கு இணை என்று சொல்ல ஒருவரும் இல்லை", என்கிற அந்த கர்வத்துடன் நின்றார் போகர்! அப்போது...

ஆள் அரவமே இல்லாத அவ்விடத்தில் அப்போது நாலா பக்கமிருந்தும் பலத்த சிரிப்பொலி கேட்டது! போகர் ஏதும் புரியாமல் திகைத்தார். அப்போது பல சித்தர்கள் அங்கே தோன்றினர்; சிரித்ததும் அவர்கள்தான் எனத் தெரிந்தது. அனைவரையும் மொத்தமாய் வலம் வந்து வணங்கினார், போகர்!

அவர்களைப் பார்த்து, "நான் ஒருவன்தான் காலங்கி நாதரின் சீடன் என நினைத்தேன்; நீங்களுமா?" என்று கேட்டார். "ஆமாம்", என்றனர் சித்தர்கள். அதோடு, போகரை அருகில் அழைத்து நிறுத்தி, திசைகள் தோறும் காட்டினர். அவர்கள் காட்டிய இடங்களிலெல்லாம் தங்கம், செந்தூர பஷ்பம், நவரத்தினங்கள் என கொட்டிக்கிடந்தது!

போகருக்கு ஒரே ஆச்சரியம்! இத்தனை பொக்கிஷங்களும் யாருக்கும் பயனின்றி, கேட்பாரற்றுக் கிடக்கிறதே" எனப் பரபரத்தார்.
அவரை பார்த்து சிரித்த சித்த புருஷர்கள், "போகனே! மக்கள் யாவரும் அறியாமை என்னும் மயக்கத்தில் சிக்குண்டு கிடக்கிறார்கள். நல்லவற்றை நாடாமல் அல்லவை செய்கின்ற மக்களைத் தேடி இவ்வரிய செல்வங்கள் போவது நல்லதல்ல!
நன்றாக யோசி! " எனக்கூறி அனைவரும் மறைந்து விட்டனர்.

"இங்கு வந்ததால் என்ன பயன்?" என்று போகர் யோசித்தார். எண்ணற்ற சித்தர்கள் இந்த மேரு மலையில் அடிக்கடி தாங்கள் கற்ற ரசவாத வித்தையை பயன்படுத்தியதாலேயே இம்மலை பொற்றுகள் நிரம்பி பொன் மயமாய் ஜொலிக்கிறது. என்னே விந்தை", என எண்ணி வியந்த அதே நேரத்தில் மலையின் ஒரு பகுதியில் பேரொளி ஒன்று தோன்றிட, அந்த ஒளியின் உக்கிரம் தாளாத போகர் மயங்கி விழுந்தார்.

## கிடைத்தது மூலிகை:

ஒரு சித்தர் அங்கே தோன்றினார்... மயங்கிக் கிடந்த போகரின் மூர்ச்சையை தெளிவித்தார். மயக்கம் தெளிந்து எழுந்த போகர்,



சித்தரை வணங்கிட, சித்தர், " இங்கே நான்கு யுகங்களை சேர்ந்த சித்தர்கள் தவ நிலையில் உள்ளார்கள்... நீ உலக நலன் வேண்டி உழைப்பவன்; உன்னை வாழ்த்துகிறேன்; என்றவர், ஒரு வஜ்ரகண்டி மாலையை போகருக்கு பரிசளித்து மறைந்து போனார்.

அப்போது, அங்கே வேறு பல சித்தர்கள் தோன்றினார்கள். போகர் அவர்கள் அனைவரையும் வணங்கினார். அவர்கள் எல்லோருமே மிக உயர்ந்த தவவலிமை மிக்கவர்கள் என்பதை போகர் அறிந்தார்.

அந்த சித்தர்கள் அனைவரும் சேர்ந்து போகரை அருகிலேயே இருந்த ஒரு குகைக்குள் அழைத்துச் சென்றனர். அங்கே... இழந்த உயிரை மீண்டும் அளிக்கும் வல்லமை பெற்ற மூலிகை ஒன்றினை காண்பித்து அதனை பயன்படுத்தும் முறைகளையும் தெளிவாக கூறினர்.

இத்தனை காலமாக போகர், எதற்காக தவத்தில் ஈடுபட்டாரோ, எதற்காக தான் பெரும் ஞானத்தின் பயனை மக்களுக்கு அர்ப்பணிக்க வேண்டும் என்று எண்ணி, தன் வாழ்நாளின் பெரும் பகுதியை செலவிட்டாரோ அந்த எண்ணம் நிறைவேறி விட்டதை எண்ணி மகிழ்ச்சி கொண்டார். அந்த மகிழ்ச்சி தாண்டவமாட, அந்த மலையிலிருந்து ஆனந்தக் களிப்பில் மிக வேகமாக இறங்கி வந்தார். அந்த ஆர்ப்பாட்ட நடையினால் அங்கே தவம் கொண்டிருந்த ஒரு சித்தருடைய கடுந்தவம் கலைந்தது.

தவம் கலைந்த கோபத்துடன் போகரை கண்ட அந்த சித்தர், "போகா! அமைதி மிகுந்த என் தவத்தை கலைத்தது, உன் அளவு கடந்த மகிழ்ச்சியே! அந்த மகிழ்ச்சிக்கு காரணம், உயிரை மீட்கும் மூலிகையை நீ அறிந்ததுதான்! என்னுடைய தவத்தைக் கலைத்த உனக்கு, உயிர் கொடுக்கும் அந்த வித்தை பலிக்காமல் போகட்டும்," என சாபம் அளித்து விட்டார்.

போகரின் மகிழ்ச்சி மண்மேடானது! இறந்தவர்களை உயிர்ப்பிக்கும் உபாயம் அறிந்தும் அதனை என் அளவற்ற மகிழ்ச்சியினால் இழந்து விட்டேனே என கவலை கொண்டார்.

இந்த மன உளைச்சலிலிருந்து விடுபடும் வண்ணம் ஆகாயமார்க்கமாக பொதிகை மலைக்கு வந்து மனதை ஒரு நிலைப்படுத்த, ஆழ்ந்த தியானத்திற்கு அமர்ந்தார்.

தியானத்திலிருந்து கண்விழித்த போகரின் முன்னே அன்னை பரமேஸ்வரி தோன்றி, "போகா... பழனி மலைக்கு போ; அங்கு முருகனை நினைத்து தியானம் செய்.... முருகன் உனக்கு அருள் புரிவான்", என்று கூறி மறைந்தார்.

## பழனிமலையில் உலக சேவை:

அன்னையின் ஆணையை சிரமேற்கொண்டு, பழனி மலையை அடைந்த போகர், அங்கே கடுந்தவம் புரிந்தார். தவத்தின் பயனாய், முருகப்பெருமான் தண்டாயுதபாணியாக தரிசனம் தந்து, "போகா! நீ பெற்ற இந்த தரிசனத்தை உலக மாந்தர் யாவரும் தரிசிக்க வேண்டும்; அதற்கான ஏற்பாடுகளை செய்", என்றவர், சிலையை எப்படி, இந்த வடிவத்தில் என்ன பொருட்களைக் கொண்டு அமைக்கவேண்டும் என்று தெளிவாக அருளினார்.

அந்த தண்டாயுதபாணி சொன்னபடியே, ஒன்பது விதமான பாஷாணங்களைக் கொண்டு மேலும் பல மூலிகைகளை சேர்த்து பழனி ஆண்டவரின் மூல விக்கிரகத்தை உருவாக்கி பிரதிஷ்டை செய்தவர் போகர்!

அனைத்தையும் செய்து முடித்த போக சித்தர், முருகனின் சன்னிதானத்திற்கு அருகிலேயே தகுந்த இடத்தில் தவமியற்றி தன் கடைசி காலத்தை உபதேசித்தே கழித்தார்.

போகர் சித்தரின் உலக நன்மை கருதிய தவம், முயற்சி எல்லாம் இணைந்தே, பழனியாண்டவராய் அருள் புரிந்து கொண்டிருக்கிறது.

**போகரின் புகழ் வாழ்க!**

# செல்வத்தை ஈர்க்கக்கூடிய எளிய லால் கிதாப் பரிகாரங்கள்



லால் கிதாப் புத்தகமானது ஒரு நபரின் ஜாதகத்தை தனித்துவமாக பகுப்பாய்வு செய்வதற்கும், வாழ்க்கையில் ஒரு சவாலான சூழ்நிலைக்கு காரணமான கிரகங்களால் ஏற்படும் பிரச்சினைகளுக்கு வெற்றிகரமாக நிவர்த்தி செய்யும் மிகவும் பயனுள்ள எளிய பரிகாரங்களை எடுத்து கூறியுள்ளது. உங்கள் வாழ்க்கையில் நிதி நிலையை மேம்படுத்துவதற்கான லால்கிதாப் புத்தகத்தில் குறிப்பிடபட்ட பரிகாரங்களை கீழே காண்போம்.

- ஒரு வெள்ளி அல்லது ஒரு தங்க நாணயத்தை ஒரு சிவப்பு துணியில் சுற்றி, உங்கள் பணத்தையும் மதிப்புமிக்க பொருட்களையும் வைத்திருக்கும் பெட்டகத்தில் பாதுகாப்பாக வைத்திருங்கள்.

- ஒரு வெள்ளிக்கிழமையன்று உருளைக்கிழங்கை ஏழைகளுக்கு தானம் செய்து, “ஸ்ரீ சூக்தத்தை” முழு ஈடுபாட்டுடன் உச்சரித்து மகா லக்ஷ்மி தேவியின் ஆசீர்வாதங்களை பெற்று தன நிலையை உயர்த்திக்கொள்ளலாம்.

- உங்கள் பூஜையறையில் ஒரு ஸ்ரீ யந்திரத்தை வைத்து தினமும் வழிபட்டு வர வீட்டில் ஐஸ்வர்யங்கள் பெருகும்.

- பசுக்களுக்கு வெல்லம் கொடுப்பது “பிரகஸ்பதி“ என்று அழைக்ககூடிய தனக்காரகன் குரு பகவானை மகிழ்வித்து, வாழ்க்கையில் செல்வ வளத்தை பெருக்க முக்கியமான அம்சமாக பார்க்கப்படுகிறது.

- சனிக்கிழமை அன்று ஏழைகளுக்கு காலணிகளை தானமாக கொடுப்பது ஜீவனக்காரகன் சனியை மகிழ்விப்பதற்கான ஒரு சிறந்த பரிகாரமாகும். இது நிதி நிலை வளர்ச்சியில் ஏற்பட்ட தாமதத்தை நீக்குகிறது.

- ஏழை குழந்தைகளுக்கு புத்தகங்கள் மற்றும் எழுதுபொருட்களை தானமாக கொடுப்பது வணிகத்திற்கு காரகனான புதன் பகவானை குளிர்வித்து தனத்தை பெருக்கும்.

- எறும்புகளுக்கு சர்க்கரை மற்றும் தானியங்களை உணவாக கொடுப்பது ஆடம்பரம் மற்றும் செல்வச்செழிப்புக்கு காரக கிரகமான சுக்கிரனை மகிழ்வித்து வாழ்க்கையில் ஆடம்பரத்தை மேம்படுத்தும்.

- ஏகாதசி விரதத்தை அனுஷ்டிப்பது நம் வாழ்வில் மகாவிஷ்ணுவின் ஆசீர்வாதங்களைக் கொண்டு வருகிறது, இது நமக்கு ஏராளமான செல்வத்தை அளிக்கிறது.

- செயல்படாத எலக்ட்ரானிக் பொருட்களை அகற்றவும் அல்லது அவற்றை சரிசெய்யவும், ஏனெனில் அவை ராகு மற்றும் கேது போன்ற இயற்கை பாப கிரகங்களின் தோஷத்தை போக்கி வாழ்வின் வளமையை ஏற்படுத்துகிறது.

- உங்கள் வீட்டில் உள்ள அனைத்து நீர் கசிவுகளையும் சரிசெய்யவும். தேவையில்லாமல் தண்ணீர் வீணாகிக் கொண்டு இருந்தால் அது செல்வ வளத்தை மட்டுப்படுத்துவதற்கு காரணமாக அமைந்து விடுகிறது.

- உங்கள் பணப்பையில் மூன்று செப்பு நாணயங்களை வைத்திருப்பது திடீர் நிதி இழப்புகளில் இருந்து பாதுகாக்கும்.

மேலே கூறப்பட்டுள்ள மிகவும் எளிமையான பரிகாரங்களை செய்து செல்வ வளத்தை அதிகரிக்கச் செய்து சொகுசான வாழ்க்கையை நமக்கு அமைத்து கொடுக்கும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.




திரு. செந்தில் நாதன்
ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர்










# எது ஆன்மீகம்? ஏன் ஆன்மீகம்?


திருக்கோயில்களை தரிசிப்பதும், திருமுறைகளை வாசிப்பதும் ஆன்மிகம் தான். இதுவே நிறைவான படி நிலையா? பரிபக்குவம் பெற்றவர்களுக்கும், பெற போகிறவர்களுக்கும் இது பால பாடம் மட்டுமே. ஊன் உடம்பு ஆலயம் என்பதை உணர்ந்தவர்கள் உரைத்தவையும் ஆன்மீகமே! சதா சிவத்தையே தியானித்தவர்கள் கூட இறைநிலையை எய்தி இருக்கின்றனர். அஷ்டமா சித்திகள் கைவரப்பெற்றவர்கள் இந்த உலக வாழ்வை ஆலய பரிகாரமாகவே கருதுகிறார்கள். உலக இன்பங்களை இலட்சிய படுத்துவது இல்லை. உலகில் தாமரை இலைத் தண்ணீராக வாழ்பவர்களே இறை அடியார்கள்.

மலப்புழுக்களை விட கீழானவர்கள் தங்களைப் பெரிய மேதாவிகளாக நினைத்துத் தங்களை கடவுளாகக் காட்டிக் கொள்வார்கள். தங்களிடம் புதைந்து கிடக்கும் அழுக்குகளை வெளிக்காட்டாமல் பசுத்தோல் போர்த்திய புலிகளாக உலாவி வருவதை காணலாம்.

அவர்கள் கண்ணாடி கற்கள் தான் என்பதை காலம் வெகுவிரைவில் காட்டிக் கொடுத்துவிடும்.

எவ்வுயிரும் தம்முயிர் போல் கருதும், மரணமிலா பெருவாழ்வு வாழும் வடலூர் வள்ளலார் அவர்களின் ஜீவகாருண்ய ஒழுக்கம், உயிர் இரக்கம், தயவு நெறி இவைகள் மட்டுமே. முத்தேக சித்திபெற சுவாமிகளுக்கு உதவியது-

ஸ்ரீ ஆதிசங்கரர், ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர், ஸ்ரீ ராகவேந்திரர், போன்ற மகான்கள் அவதரித்த நோக்கமே அருள்



ஞான பூமியாக மாற்றுவதற்காக என்பதை உணர்தல் வேண்டும்.

இறைவன் மனிதர்களுக்கு வழங்கிய இறை நூல் பகவத் கீதை! மனிதன் இறைவனுக்கு வழங்கிய நூல் திருவாசகம்.

மனிதன் மனிதனுக்காக வழங்கிய நூல் தமிழ் மறையாம் உலகப் பொதுமறை திருக்குறள்!

திருக்குறள் ஆன்மீகம் எது என்பதைத் தெளிவுபடுத்துகிறது. எத்தனையோ உரையாசிரியர்கள் எழுதிய போதிலும் வ.உ.சிதம்பரனார், திரு.வி.க போன்றவர்கள் திருக்குறள் பேசியபடி இல்லாமல் குறள் நெறியில் வாழ்ந்த ஆன்றோர்கள்!

திருக்குறள் இல்லறத்தை போற்றுகிறது. இனிய இல்லறமே நல்லறம் என்பதை திரு.வி.க தெளிவுபடுத்துகிறார்.

துறவறம் எவ்வளவு சிறந்ததோ அந்த அளவிற்கு இல்லறம் உயர்ந்தது. தனது இல்லறக் கடமைகளை அறவழியில் புரிந்து, இறையருளை தேடுபவனே உண்மை ஞானி!

அக அழுக்குகளை அறவே நீக்கினால் தான் இறைவனின் அருள் ஒளி பெற இயலும். ஆத்ம லிங்கம் ஏற்கனவே நம் உள்ளம் எனும் பெருங்கோயிலில் இறைவனால் பிரதிஸ்டை செய்யப் பெற்றுள்ளது. நல்ல எண்ணங்கள் என்ற கருங்கற்களைக் கொண்டு, கோயில் எழுப்பி, நல்ல செயல்கள் என்ற அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நடத்துவதே சாலச் சிறந்தது.

புற அழுக்குகளை எளிதில் அகற்றிவிடலாம் அக அழுக்குகளை அகற்ற ஆன்மீக நெறியே ஏற்றது.

மற்றவர்களை ஏலனமாக எண்ணாமல், அவர்களுக்குக் கிடைக்கக் கூடியவற்றைத் தடுப்பதும் மிகப் பெரிய பாவம்.

சுயநலமாக வாழாமல், தான் வாழ அடுத்தவர்களை அழிப்பதும், மகா பாவங்களை செய்வதும் மிகப்பெரிய தவறு.

நல்லவர்களாக வேடம் தரிப்பதும் மகா பாவம்.

இந்தப் பிறவி இறைவன் வழங்கிய அரிய பிறவி! இறை பக்தியுடன், வறுமையில் வாழ்ந்தாலும் பெருமையுடன் வாழ வேண்டும். நேர்மையே இறைவன் விரும்புவான். சான்றோர் பழிக்கும் வினைகளை செய்யாமலும், அமைதியாக அன்பாக, அழகாக, ஆர்ப்பாட்டமில்லாமல் கருவறையை அலங்கரிக்கும் அகல் விளக்குகளாக வாழ முயற்சிப்போம்.

ஒளியாக சிவஜோதி எழுந்தருள் புரிந்து நம்மை புகழ் வாழ்வு வாழ வைக்கும்.



சைவ சித்தாந்த செம்மல்

**கவிஞர். சீனு. செந்தாமரை**

கடலூர்

அற்புத மகான்

# ஷீரடி சாய்பாபா

## கடன் வாங்கி கடவுள் தரிசனம்

"மனித உடலானது பஞ்சபூதங்களால் ஆனது. அது, விரைவிலோ அல்லது பின்னரோ அழியத்தான் போகிறது! அதனுள் வசிப்பவர் இறப்பதும் இல்லை, பிறப்பதும் இல்லை. உள்ளே இருப்பவருக்கு எவ்விதப் பற்றுதலும் இல்லை. நிலையான சாட்சியான அவர், ஆத்மாவின் வடிவில் இருக்கும் அகத்தினில் உறைகிறாரே... அவர்தான் கடவுள்!"

-சாய்பாபா



ஆரூர். ஆர். சுப்பிரமணியன்



மும்பையில் உள்ள "ராலி" கம்பெனியில் லக்மீசந்த்துக்கு குமாஸ்தா வேலை. அவர் முதலில் ரயில்வேயில் தற்காலிகமாக வேலை பார்த்து, அதன்பிறகு அச்சகத்திலும் வேலை பார்த்துவிட்டு, கடைசியாக இந்த கம்பெனியில் குமாஸ்தாவாக வந்து சேர்ந்தார். தான் பார்க்கும் அப்பணியையும் மிக ஈடுபாட்டுடன் மேற்கொண்டார் அவர்.

35 வயதான லக்மீசந்தி; மிகுந்த இறைபக்தி கொண்ட நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவராயினும் அவருக்கு ஷீர்டி குறித்தோ, சாய்பாபாவின் மகிமைகள் குறித்தோ அறிந்துகொள்ள ஆர்வம் ஏற்படயில்லை. அவருக்குத் தெரிந்த ஒரே மகா குரு, கேட்காங் நகரில் இருந்த ஸ்ரீ நாராயண மகராஜ் மட்டுமே! மும்பையின் புறநகர் பகுதியான சாந்தகுரூஸில் லக்மீசந்த் வசித்து வந்தார்.

ஒரு நாள் பக்தர்கள் புடைசூழ தாடியுடன் சாது ஒருவர் நிற்பதை அவருடைய கனவில் கண்டார். இந்தக் கனவிலேயே அவரது மனம் பரவசமடைந்து, அந்த சாதுவின் கால்களின் வீழ்ந்து நமஸ்காரமும் செய்தார் அக்கனவில் இதன்பிறகு, லக்மீசந்த்தின் நெருங்கிய நண்பரான தத்தாத்ரேய மஞ்சுநாத்தின் வீட்டில் தாஸ்கணு மகராஜ் என்பவரின் ஆன்மீக சொற்பொழிவு நடைபெறுவதாக அவர் கேள்விப்பட்டபோது, நண்பரின் அழைப்பின்பேரில் லக்மீசந்த அவரது வீட்டுக்குச் சென்றார்.

சாய்பாபாவின் தலைசிறந்த பக்தர்களில் ஒருவரான தாஸ்கணு. அன்று பக்த துக்காராமின் சுயசரிதையை அனைவரின் மனம் உருகும் வகையில், தனக்கே உரித்தான நகைச்சுவை 'உணர்வுடன் எடுத்துரைக்க.. அந்த உபன்யாசத்தைக் கேட்டு லக்மீசந்த மனமுருகினார். தற்செயலாக தாஸ்கணுவின் அருகில் இருந்த படத்தைப் பார்த்து லக்மீசந்த் திகைப்பில் ஆழ்ந்தார்.

காரணம், அப்படத்தில் இருந்தவரின் உருவமும் கடந்த சில தினங்களுக்கு முன் தான் கனவில் கண்ட முகமும் ஒன்றாக இருப்பதைக் கண்டு லக்மீசத்த் திடுக்கிட்டார். அதன்பின் கண்களில் நீர் சுரக்க, அந்தப் படத்தையே பார்த்து மகிழ்ந்த லக்மீசந்த "இவரை எப்படி எப்போது காண்போம்?" என்ற தவிப்பு நிலைக்கு ஆளாகிவிட்டார்.

இந்த, சாதுவை எப்படியும் விரைவில் சந்தித்து ஆனந்தம் காண வேண்டும் என்ற திடசங்கல்பம் லக்மீசந்த்தின் மனதில் குடியேறி விட்டது. அதன்பின் "ஷீரடி எங்கே இருக்கிறது? அங்கு செல்வதற்கு எவ்வித பயணம் மேற்கொள்ள வேண்டும்! என்பதையெல்லாம் நண்பரிடம் கேட்டறிந்து கொண்ட மாதச் சம்பளக்காரரான லக்மீசத்தி அதற்கு வேண்டிய பணம் எப்படிக் கிடைக்கும்?" என்ற கவலையிலும் ஆழந்து போனார்.

"சாண் ஏறினால் முழம் சறுக்கும்" சூழ்நிலையில் லக்மீசந்த்தின் பொருளாதார நெருக்கடி இருந்தது தான் அதற்குக் காரணம். தாஸ்கணு மகராஜின் உபன்யாசத்தை லக்மீசந்த் முழுமையாகக் கேட்டுவீட்டு, அதை அசை போட்டவாறே தனது வீட்டுக்கு வந்து சேர்ந்தார். அவரது மனதில், அவ்வப்போது கனவில் வரும் சாது வந்து போய்க் கொண்டிருந்தார். அன்றிரவு சுமார் 8 மணி இருக்கும். அவரது வீட்டுக் கதவை யாரோ பலமாகத் தட்டவே, "லக்மீசந்த் விரைந்து சென்று கதவைத் திறக்க.. அங்கே அவரது மற்றொரு நெருங்கிய நண்பரான சங்கர் ராவ் வாசலில் நின்றுகொண்டிருந்தார்.

"வாங்க, சங்கர் ராவ்.." என்று லக்மீசந்த் அன்புடன் வீட்டுக்குள் வரவேற்க, உள்ளே நுழைந்த நண்பரிடம் "இந்நேரம் என் வீட்டுக்கு வந்ததில் ஏதேனும் விசேஷம் உண்டா?" என்று லக்மீசந்த் கேட்டுக்கொண்டே, அவர் குடிப்பதற்கு தண்ணீர் தந்தார்.

"முக்கியமான விஷயமாக இல்லாவிட்டால், நான் இங்கு வந்திருப்பேனா?" என்று பீடிகை போட்ட சங்கர் ராவ், "நான் விரைவில் ஷீரடிக்குச் சென்று சாய்பாபாவைத் தரிசிக்கப் போகிறேன். நீங்களும் வருகிறீர்களா?" என்று கேட்டார்.

"ராவ் சார்! கேட்காங்கில் உள்ள குரு ஸ்ரீ நாராயண மகராஜைத் தரிசிக்கணும்கிற சங்கல்பத்தில் இருக்கேன். அதான்!" என லக்மீசந்த் தயங்கியவாறே கூற. அதை இடைமறித்து, "அதற்கென்ன! முதல்ல ஷீரடி சாய்பாபா தரிசனத்தை முடிச்சுட்டு, அதற்கு அப்புறமா போனாப் போச்சு." என்று சங்கர் ராவ் கூறினார்.

இதைக் கேட்ட லக்மீசத்த்தின் மனம் சற்று அசைந்து கொடுக்க ஆரம்பித்தது.

ஏற்கனவே தான் கனவில் கண்ட சாதுவான பாபாவை நேரில் காணவேண்டும் என்ற ஆர்வம் லக்மீசந்த்தின் மனதில் இருந்ததால், "சரி, ராவ் சார்! நானும் உங்ககூட வர்றேன்..." என்று லக்மீசந்த் உறுதிபட தன் முடிவைக் கூறினார். இதனால் சங்கர் ராவ், ஷீரடி செல்லும் பயணத் தேதியைத் தெரிவித்துவிட்டு மகிழ்ச்சியுடன் புறப்பட்டார்.

குறித்த தேதியில் சங்கா ராவுடன் ஷீரடி செல்லும் ரயிலில் புறப்பட்டுவிட்டார் லக்மீசந்த்,
தன் மூட்டை முடிச்சுகளுடன்! கையில் பணமில்லாத நிலையில் புறப்பட நினைத்த லக்மீசந்த்துக்கும் சங்கர் ராவுக்கும் பயணச் செலவாகத் தலைக்கு 15 ரூபாய் தந்தது, லக்மீசந்த்தின் சித்தப்பா மகன்!"
மும்பையிலிருந்து ரயில் புறப்பட்டவுடனே சங்கர் ராவ், தனக்குத் தெரிந்த பஜனைப் பாடல்களைப் பாடத் தொடங்கிவிட்டார், அந்த பஜனைப் பாடல் பிரியர்! ஷீரடிக்குச் செல்லும் அக்கம்பக்கப் பயணிகளிடம் லக்மீசந்த் வலியத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, ஷீரடி மகான் குறித்த பல தகவல்களை அவர்களிடம் பேசிப் பேசியே திரட்டிவிட்டார்!
லக்மீசந்த் பயணித்த அதே ரயில்பெட்டியில் 4 முஸ்லீம்கள் இருப்பது அவரை ஈர்க்கவே, அவர்களிடம் ஷீரடிநாதன் குறித்து தாங்கள் அறிந்த தகவல்களைக் கூறுங்களேன்" என்று லக்மீசந்த் வினயமாகக் கேட்டுக் கொண்டார்.

"சாய்பாபா, பெரிய மகான்! பல ஆண்டு ஷீரடிவாசியான அவர் தலைசிறந்த சித்த புருஷர் (அவலியா).." என்று அவர்களும் தாங்கள் அறிந்த பாபா குறித்த தகவல்களை லக்மீசந்த்திடம் தெரிவித்தனர். ஷீரடி பயணிக்கும் ரயில் கோபர்காங்கில் ரயில்நிலையத்தில் நின்றது. "அடடா.. இங்கே உள்ள கோதாவரி நதிக்கரையில் அபரிமிதமாக கொய்யாப் பழம் விளையுமே! இது பாபாவுக்கு ரொம்பவும் பிடிக்கும் என்று சில பக்தர்கள் கூறினார்களே..."என்று சங்கா ராவிடம் லக்மீசந்த் கூற, இருவரும் அங்கேயே இறங்கிவிட்டனர்.
அவ்விரு நண்பர்களும் அவ்விடத்திலேயே காலைக்கடன்களை முடித்துவிட்டு, ஒரு குதிரை வண்டியைப்" பேசிக்கொண்டு, கோதாவரி நதிக்கரைக்குச் சென்றுவிட்டனர்.

அங்கு நதிப் பிரவாகத்திலும், கரைகளை ஒட்டியிருந்த செடி, கொடிகளின் வனப்பில் தங்களையே அவர்கள் மறந்து விட்டனர். மீண்டும் குதிரை வண்டியில் அமர்ந்து பயணிக்கத் தொடங்கிவிட்ட அவர்களது நினைவில் பாபாவுக்குப் பிடித்த கொய்யாப்பழம் வாங்கும் உணர்வு மறைந்தே போய்விட்டிருந்தது!
தாங்கள் கொண்டு வந்திருந்த மூட்டை, முடிச்சுகளில் இருந்து பாபாவை ஆராதிக்கத் தேவையான பூஜை சாமான்களைத் தனியே எடுத்துக் கொண்ட லக்மீசந்த்தும் சங்கா ராவும், நேரே பாபா வசித்து வந்த மசூதிக்கும் சென்றுவிட்டனர்.

கருணை முகமும் புன்முறுவலுமாகக் கம்பீரத் தோற்றத்துடன் சாய்பாபா அமர்ந்திருந்த தரிசனத்தைக் கண்டதும், அவ்விரு பக்தர்களும் ஆனந்தப் பரவசத்தில் கண்ணீர் மழை பொழியத் தொடங்கிவிட்டனர்.

சட்டெனத் தன்னை சுதாரித்துக் கொண்ட லகமீசந்த் பரபரப்புடன், தான் கையில் வைத்திருந்த பாத்திரத்தில் எடுத்து வந்த கோதாவரி நீரைக் கொண்டு, பாபாவின் தாமரைப் பாதங்களை ரசித்தவாறே சுத்தம்



செய்துவிட்டார்.

பிறகு அம்மகானுக்கு உரிய பூஜைகளைச் செய்து, சாய் பகவானை வலம் நமஸ்கரித்து, சாய்பாபாவின் காலடியிலேயே லக்மீசந்த் அமர்த்துவிட்டார். பக்தர்கள் கூட்டத்தைப் பார்த்தபடி பாபா, ”எப்பேர்ப்பட்ட அயோக்கியப் பயல் இருக்கிறார்கள்! வழியெல்லாம் என்னைப் பற்றி பஜனை செய்துகொண்டே, என்னைப்பற்றி என்ன விசாரணை வேண்டியிருக்கு? தனக்குத்தானே என்னை உணராமல், அடுத்தவர்களிடம் எதற்கு சந்தேகக் கேள்விகள்? தேவைதானா இது...கனவில் என்னைத் தரிசித்த பிறகும், என்மீது இன்னும் ஐயமேன் இதிலே என்னைப் பார்க்க, மார்வாடிகிட்டே போய் கடன் வேறு வாங்கி, கடன் தரிசனம் “ஏன்? எனக் கொஞ்சம் சூடாகவே பாபா பேசப் பேச “நம் தொடர்பான இவ்விஷயங்களை ஷீரடிநாதன் எப்படி அறிந்திருக்கிறார்?“ என சம்பந்தப்பட்ட இரு நண்பர்களும் வியப்பில் ஆழ்ந்து போக...

கூட்டத்தில் யாரையோ பாபா கடிந்து பேசுகிறாரோ“ என குழப்பத்தில் ஆழ்ந்தனர். “கடன் வாங்கி புனிதப் பயணம் சென்று கடவுள் தரிசனம் செய்வதும், கடன் பெற்று விழா, பண்டிகைகளைக் கொண்டாடுவதும் சாய்பாபாவுக்குப் பிடிக்காத ஒன்று“ என்பதை அங்கு கூடியிருந்த பக்தர்கள் அன்று உணர்ந்தனர்.

சாய்பாபாவின் காலை தரிசனத்தை ஆனந்தமாக முடித்துவிட்டு, ஷீரடியின் முக்கிய பகுதிகளை மதியம் வரை தன் நண்பருடன் லக்மீசந்த் சுற்றிப் பார்த்து ரசித்தார். அத்துடன், அவருக்கு வாயுப் பிடிப்பால் இடுப்பு வலி வேறு வந்துவிட்டது.

ஷீரடிக்குச் சென்ற முதல் நாளே லக்மீசந்த்துக்கு ஒரு வித்தியாசமான அனுபவம் கிடைக்கவே, அதுவே அவர் பாபாமீது கொண்ட பக்தியை அதிகமாக்கிவிட்டது. அன்று பூஜை நேரத்தின்போது ஷீரடி மகராஜிடம் தொண்டு செய்பவர், ”மகானே!
இன்றைய பூஜை நைவேத்தியமாக எதைக் கொண்டுவந்து தங்களுக்குச் சமர்ப்பிக்கலாம்?” எனப் பணிவுடன் கேட்டார். “ஜோக்... பூஜை பிறகு! எனக்கு இப்போது தேவை... ஸாஞ்ஜாதான் !”



(கோதுமை ரவையை நெய்யில் வறுத்து, சர்க்கரை மற்றும் வாசனைப் பொருட்களைச் சேர்த்து, பாலில் வேகவைத்துத் தயாராகும் இனிப்புப் பண்டம்!)
ஏற்கெனவே கடும் பசியில் இருந்த லக்மீசந்த்துக்கு, தான் கேள்விப்பட்ட “ஸாஞ்ஜா“ கிடைக்கப் போகும் மகிழ்ச்சியில், பசியையும் அதே சமயம், கடந்த இரண்டு நாட்களாகத் தன்னை வாட்டி வந்த வாயுப் பிடிப்பின் விளைவான இடுப்பு வலியையும் சற்று மறந்தார். என்றும் கூறலாம்.


சாய்பாபாவின் கட்டளைப்படி பக்தர்கள் விரைந்து செயலாற்ற... பூஜை, ஆரத்தி - இவை அனைத்தும் சடுதியில் முடிந்துவிட்டன! தன் பக்தனின் பசி மற்றும் இடுப்பு வலியையும் பாபா உணர்ந்தாற்போல், “இந்த வேளையில் பசியுடன் இருப்பதே நல்லது. இடுப்பு வலிக்கு மருந்து தேவை...” எனத் திடீரெனக் கூறவே, லக்மீசந்த் ஆச்சரியப்படுகிறார் - “பக்தர்களின் தேவைகளும் குறைபாடுகளும் எப்படித்தான் நம் பாபாவுக்குத் தெரிகிறதோ?!” என, அன்றைய உணவு வேளையின்போது தனக்குப் பரிமாறப்பட்ட ஸாஞ்ஜாவைச் சாப்பிட்டவுடனே, தனக்கு ஏற்பட்ட கடும் பசியுடன் இடுப்பு வலியும் பறந்துபோனதை அறிந்த லக்மீசந்த், தன்னை உளமாற

ஆட்கொண்ட ஷீரடி மகானுக்கு நெஞ்சார நன்றி கூறினார். ஷீரடியில் லக்மீசந்த் தங்கியிருந்த ஒரு நாளில், சாவடியை நோக்கி சாய்பாபா நடந்து கொண்டிருக்கும் வேளையில்... திடீரென குலுங்கி குலுங்கிப் பலமாக இருமத் தொடங்கினார்.

அது சற்று நேரம் நீடிக்கவே... உடன் வந்த லக்மீசந்த் மனம் வருந்தியபடியே, தனக்குள் இப்படிச் சொல்லிக் கொண்டார்; சே... எப்படி. இருமுகிறார் பாபா! ஜனங்களில் எவர் கண்பட்டதோ, இவர் மீது?" என்று, மறுநாள் காலையில் லக்மீசந்த, சங்கர் ராவ் உட்பட பல பக்தர்கள் மசூதி தரிசனத்தில் இருக்கையில், தன்னருகில் இருந்த பக்தர் ஷாமாவிடம், அனைவரின் காதிலும் விழும்படி "நான் நேற்று பலமாக இருமி அவஸ்தைப்பட, எவர் கண்ணோதான் காரணமாக இருந்திருக்குமோ? கெட்ட திருஷ்டிதான் அதற்குக் காரணமாக இருந்திருக்கும்!" என ஷீரடிநாதன் எதேச்சையாகச் சொல்ல.. லக்மீசந்த்தின் தலை சுழன்றது - 'எப்பேர்ப்பட்ட கடவுள் இவர்! என் உள்ளத்தில் அம்மகான் குடிகொண்டதால்தானே. என் உள்ளுணர்வை அவர் புட்டு புட்டு சொல்கிறார்!!
மீண்டும் தான் பணியில் சேரும் நாள் வரவே, லக்மீசந்த்தும் நண்பர் சங்கர் ராவுடன் பாபாவை தரிசித்து, பாத தரிசனம் பெற்று, பாபாவின் திருக்கரங்கள் வழங்கிய உதி பிரசாதத்தை வாங்கிக் கொண்டார்.

அம்மகானை விட்டு பிரிய இருவரது மனங்களுமே இடங்கொடுக்கவில்லை! அன்றிலிருந்து ஷீரடி மகராஜின் முழுப்பக்தராக லக்மீசந்த் மாறிவிட்டார்!
ஷீரடியின் மண்ணும் புல்லும் புண்ணியம் புரிந்தவை. எவ்விதப் பிரயத்தனம் இல்லாமலேயே, அவை பாபாவின் பாதங்களைத் தினமும் முத்தமிட்டு, அவரது பாதத் தூளிகளைத் தங்களுடைய சிரசின்மீது ஏற்றுக்கொண்டு உள்ளன!" என ஷீர்டி மகராஜின் அத்யந்த பக்தரும், பிரபல சங்கீத மகானுமாகிய ஹேமாட் பந்த், தனது அருமையான கவிதை நூலொன்றில் அகமகிழ்ந்துள்ளார்.

(தொடரும்)



# தசரதரின் கர்மா

சூர்யவம்ஸ பரம்பரையின் துணிச்சலான வீரரும் ஸ்ரீ ராமரின் தந்தையுமான மன்னன் தசரதன், தன் மகனைப் பிரிந்ததால் ஏற்பட்ட துக்கத்தால் இறந்தார் என்பதை அனைவரும் அறிந்ததே. தசரதரின் மூத்த மகனான ராமர், தனது மாற்றாந்தாய் கைகேயியால் அயோத்தி ராஜ்ஜியத்தை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இராமன் இல்லாததை ஏற்க முடியாமல், தசரதன் ஆழமான துக்கத்தில் மூழ்கினார்.

தசரதர் மரணப் படுக்கையில் இருந்தபோது, அவர் தனது இளமைப் பருவத்தில் வேட்டையாடுவதற்காக காட்டிற்குச் சென்றபோது நடந்த ஒரு சம்பவத்தை நினைவு கூர்ந்தார்.
அவர் தனது உடல்நிலை மோசமடைந்து வருவதைப் பற்றி மிகவும் கவலைப்பட்ட தனது முதல் மனைவி கௌசல்யாவிடம் அந்த சோகமான நிகழ்வை விவரித்தார்.

தசரதன் ஒரு திறமையான வில்லாளி. எந்த திசையில் இருந்து வரும் சப்தத்தைக் கேட்பதன் மூலம் அவர் தனது இலக்கை குறிவைக்க முடியும். ஷ்ரவணன் என்ற சிறுவன் தன் பார்வையற்ற பெற்றோருக்கு குடத்தில் தண்ணீர் எடுத்து வர சரயு நதிக்கரையில் இருந்தான்.

தசரதனின் கவனத்தை ஈர்த்த சத்தம், ஷ்ரவணனை மான் என்று தவறாக என்னி அந்த சிறுவன் மீது அம்பை தொடுத்தார்
அவர் அம்பு எய்தவுடன், ஒரு மனிதனின் அழுகுரல் கேட்டது. தசரதன் தன் அம்பு தாக்கிய இலக்கு மான் அல்ல மனிதன் என்பதை உணர்ந்தார். அவர் உதவிக்கு விரைந்தார், ஆனால் அதற்குள் ஷ்ரவணன் படுகாயமடைந்தார். கடைசி மூச்சு விடுவதற்கு முன், ஷ்ரவணன் தசரதனிடம் தன் பெற்றோரின் தாகத்தை தீர்க்க தண்ணீர் நிரம்பிய குடத்தை எடுத்துச் செல்லும்படி கூறி இறந்தான்.

அவர் ஷ்ரவணனின் பெற்றோரை அனுகி தான் அயோத்தியின் இளவரசர் என்றும் குற்ற உணர்வுடன் நடந்த சம்பவத்தை கூறினார். தங்களது ஒரே மகனை இழந்த அந்த வயதான தம்பதிகள், அந்த இழப்பைத் தாங்க முடியாமல், தசரதனிடம் அவர் இறக்கும் சமயம் அவரின்



மகன் அருகில் இல்ல நிலயை சந்திக்க நேரிடும் என்று கூறி சபித்தனர்.
இவ்வாறு, ராமனிடமிருந்து பிரிந்ததால், மன்னன் தசரதனின் அகால மரணம் ஏற்பட்டது.

"நாயகனும் நம்பியும் தேர் பாகனை நோக்கி
செய்யனோ அணியனோ என்று தேர்வினாலும்
வேன் உயர் கானில் தானும் தம்பியும் மிதிலை
பொண்ணும் போயனன் என்று பொருள்
பெற்றதும் ஆவி போனான்"

பொருள்: தசரதன் மற்றும் அமைச்சரும் தேர் பாகனிடம் காட்டிருக்கு சென்றவர்கள் மனம் மாறி திரும்பினாராகளா என்று வினவ தேர் பாகனோ ஸ்ரீ ராமர், லக்ஷ்மணர் மற்றும் அன்னை சீதா அடர்ந்த காட்டிற்குள் சென்று விட்டனர் என்று கூறியதும் தசாரதரின் ஆவி பிறந்தது என்பது வரலாறு.

தசாரதரின் கர்மாவயே மாற்றாத இறைவன் நம் கர்மாவை மாற்றுவாரா ?



திரு. கிருஷ்ணன்
ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர்

# கலி தோஷம் போக்கும் நிர்ஜலா ஏகாதசி!

ஆனித் திங்களில் இடம்பெறும் அக்ல பட்ச ஏகாதேசியே நிர்ஜலா ஏகாதசி என வழங்கப்படுகிறது. இத்திதியில் விரதமிருப்பவர்கள், கலி தோஷத்தால் ஏற்பட்ட பாவ, துன்பங்களால் படும் அவதிகள் இல்லாமல் போய்விடும்!

இந்த ஏகாதசி விரதம் குறித்தான புராண நிகழ்வு இது- மகாபாரத, பாண்டவ பீமனின் பலம் அசாத்தியமானது என்பது யாவரும் அறிந்த விஷயமாகும். பீமனின் இந்த பழத்திற்கு முக்கிய காரணம் அவன் எல்லையற்ற உணவு உண்பது! பட்டினி இருக்க முடியாத நிலை கொண்ட பீமனிடம், அவனுடைய அன்னை, பாண்டவ சகோதரர்கள், என் நண்பர்கள் கூட ஏகாதேசி விரதம் மேற்கொள்ள பலமுறை அறிவுறுத்தியும், அதனை அவன் ஏற்றுக்கொள்ள சம்மதிக்கவில்லை. இருந்தாலும் இந்த விரதம் குறித்து தன்னால் செயல்பட முடியவில்லையே என்ற குற்ற உணர்ச்சி பீமனை குடைந்து கொண்டே இருந்தது.

நாள் பீமன் மகரிஷி வேதவியாசரை சென்று தரிசித்து தன் குற்ற உணர்ச்சியை கூறிவிட்டு, எனக்கு ஏகாதசி விரதம் இருக்க ஆசைதான், ஆனால் அதனை அனுபவிக்க முடியவில்லையே என ஏக்கமுடன் தெரிவித்தான். அதனைக் கேட்ட வேதவியாசர் புன்முறுவலுடன் என் அன்புக்குரியவனே! கவலை தவிர்! உனக்குத் தக்க வழி சொல்கிறேன்.

“நீ ஆண்டு முழுவதும் வரும் 25 ஏகாதசி திதிகள் அத்தனையிலும் விரதம் இருக்க வேண்டாம்! அதற்கு மாற்றாக ஆனி மாதத்தில் இடம்பெறும் சுக்லபட்ச ஏகாதசி அன்று மட்டும் நீ ஜலம் கூட அருந்தாது, ஒருநாள் முழுமையாக விரதம் இருந்தால் போதுமானது. அதன் பலனே உனக்கு மீதி அத்தனை 24 ஏகாதசி பலன்களையும் அளித்துவிடும்”, என ஆலோசனை அருளினார்.

இந்த உபதேசத்தை பெற்றுக்கொண்ட பீமசேனன் ”அப்பாடா! நம்ம பிரச்சனை தீர்ந்தது என மகிழ்ந்து மகரிஷியிடம் விடைபெற்று திரும்பினான்.

அதற்குப் பிறகு அந்த பாண்டவன் ஒவ்வொரு வருசமும் ஆனி மாத சுக்ல பட்சம் கூடிய ஏகாதசி திதியில் மட்டும், தன் சிரத்தையுடன் விரதம் இருந்தான். அதனால் தான் அந்த நிர்ஜலா ஏகாதசி திதி, பீம ஏகாதேசி என்ற பெயரையும் பெற்றது.

ஏனாதூர் பத்ரி நாராயணன்

# மந்திர மகிமை

# மலடு நீங்கி மகப்பேறு அடைய....

கருனை உள்ளத்தோடு மகான் ஆதிசங்கரர் அருளிய அன்னையின் அழகை வர்ணிக்கும் "சௌந்தர்ய லஹரி"யில் மனித வாழ்க்கை மேம்பட்டு, வளமுடன் வாழ்ந்திட மட்டும் மந்திர பாடல்கள் உள்ளதாய் நினைப்பது பெருந்தவறு! மேலும் மனிதனை அச்சுறுத்தும் கர்மவினைகள், அதன் காரணமாய் உண்டாகும் மன மற்றும் உடல் நோய்கள் சரியாகும் வண்ணம் மனித குலத்தையே மேம்படுத்துகின்ற மந்திரங்களை தன்னுடைய தவ வலிமையால் அன்னையின் அருளோடு பாடல்களாக்கி, அவற்றை மந்திர மகிமையோடு நமக்கு கொடுத்திருக்கிறார், ஆதிசங்கரர்!

அவ்வகையில் இன்றைய காலச் சூழலில் பெரும்பாலான மக்களை வருத்திக் கொண்டிருக்கும் "குழந்தையில்லா குறை" என்னும் பெருங்குறை எதிர்காலத்தில் துன்பம் தரும் என்று அன்றே கணித்த ஆதிசங்கரர், அக்குறை நீக்கும் மந்திர பாடலையும் அருளியிருக்கிறார். அதனை ஆழ்ந்து கவனிப்போம்.

மந்திர பாடல்:

"சதுர்ப்பி: ஸ்ரீகண்டை: சிவயுவதிபி: பஞ்சபிரபி
ப்ரபின்னாபி: சம்போர் -நவபிரபி மூலப்ர கிருதபி:
சதுச்சத்வாரிம்சத் -வஸீதல- கலாச்ர -த்ரிவலய
த்ரிரேகாபி: ஸார்த்தம்தவ சரணகோனா: பரிணதா"

சௌந்தர்ய லஹரியின் 11 வது பாடலான இதுவே மகப்பேறு கிடைக்க அருள் செய்வதாய் அமைந்துள்ளது.

மந்திர பாடலின் பொருள்:

அன்புள்ளம் கொண்ட தாயே! சிவசக்கரங்களாகிய நான்கு, சக்தி சக்கரங்களாகிய 5.... ஆகமொத்தம் ஒன்பது சக்கரங்களாக உள்ளதும் பிரபஞ்சத்தின் மூல தத்துவமாகவும் விளங்குகின்ற ஸ்ரீசக்கரத்தில் உறைபவனே! இந்த ஸ்ரீ சக்கரத்தின் கோணங்களும் 8 தலங்களும் மூன்று வட்டங்கள் மற்றும் மூன்று கோடுகளும் உன் வடிவாகவே விளங்கிடும் உண்மையை உணர்ந்தேன். உன்னை துதிப்போர்க்கு குழவியில்லாக் குறைதான் தீருமே!



மந்திரத்தை பிரயோகிக்கும் முறை:

வசதி படைத்தோர் இந்த மந்திரத்திற்கான யந்திரத்தை தங்க தகட்டில் வரைந்து கொள்ளலாம். இயலாதவர்கள் வெண்ணையின் மீது வரைந்து கொள்ளலாம். இப்படி வரைந்து பூஜைக்கு பயன்படுத்த வேண்டும். யந்த்ரம் வரைந்த எண்ணையை தினந்தோறும் உட்கொள்ளவும் செய்யலாம். வடக்கு முகமாக அமர்ந்து ஆறு தினங்களோ அல்லது ஆயிரம் தினங்களோ.... விடாமல் தினமும் ஜெபிக்கவேண்டும். குங்குமத்தினை கொண்டு லலிதா ஸஹஸ்ரநாம அர்ச்சனை செய்வது சிறப்பான பலனை தரும். பூஜையின் போது தினமும் மஞ்சள் கலந்த அன்னம், பழங்கள், சர்க்கரைப்பொங்கல் இவற்றை படைக்க வேண்டும்.

தவறாமல் இப்படி செய்வதனால், மலட்டுத்தன்மை நீங்கி, குழந்தை பேறு உண்டாகும்!



ரா. பன்னீர்செல்வம்



திரு. செந்தில் நாதன்
ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர்

# ஆன்மீக ஈடுபாட்டை மேம்படுத்தி ஞானத்தை வளர்க்கும் குலசுந்தரி எந்திரம்

நாம் எல்லோரும் இல்லுலக பற்றில் அதிக ஆர்வம் காட்டினாலும், வாழ்க்கையில் சில கஷ்டங்களை கொடுத்து வாழ்க்கை பாடங்களை கற்றுகொடுத்து ஆன்மீக ஈடுபாட்டை அதிகரித்து ஞான மார்கத்திற்கு அழைத்து செல்கிறது. அவ்வாறு ஆன்மீகத்தில் உயர்ந்த நிலையை அடைய வைப்பதற்கு தேவி குலசுந்தரி அருள்புரிகிறாள். “குலசுந்தரி” என்ற சொல்லுக்கு தன் குலத்திலேயே மிகவும் அழகு நிறைந்தவள் என்று பொருள். திதிகளில் ஒன்பதாம் திதி யான நவமி திதியை ஆட்சி செய்யக்கூடியவள் இந்த குலசுந்தரி தேவியாவாள். இவள் சரஸ்வதி தேவியின் மறு உருவமாக பார்க்கப்படுவதால் படிப்பில் முதன்மை பெறவும் கலைகளில் சிறந்து விளங்கவும் இந்த குலசுந்தரி எந்திரம் வழிவகை செய்கிறது. ஆன்மீக குருவிடமிருந்து வித்தைகளை கற்றுக்கொள்வதற்கு முன் எடுத்துக்கொள்ளப்படும் தீட்சைக்கும் குருவின் அருளாசி கிடைப்பதற்கும் இந்த குலசுந்தரி எந்திரப் பூஜை உதவுகிறது. ஆன்மீக ஞானம் அதிகரிப்பதற்கும், உள்ளுணர்வு மேம்படுவதற்கும் இந்த குலசுந்தரி எந்திரம் பயன்படுகிறது. தியானத்தில் குண்டலினி சக்தியை உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்லவும், மனதில் உள்ள கசடுகள் நீங்கி உள்ளத்தூய்மை அடையவும் இந்த குலசுந்தரி எந்திரம் பயன்படுகிறது.

இந்த குலசுந்தரி தேவி எந்திரத்தை பூஜை அறையில் கிழக்கு அல்லது வடக்கு நோக்கி வைத்து, சந்தன குங்கும திலகமிட்டு தினமும் மல்லிகை மலர் கொண்டு பூஜித்து தீப தூப ஆராதனை காட்டி கீழே கொடுக்கப்பட்டிருக்கும் மந்திரத்தை 108 முறை கூறிவருவதால் மேன்மையான பலன்களை அள்ளித்தரும்.

குலசுந்தரி தேவியின் மந்திரம்:

“ஓம் ஐம் ரீம் ஸ்ரீம் ரிம் குலசுந்தரி தேவியே நமஹா”

குலசுந்தரி தேவியின் யந்திரம்:



Kulasundari



# சகாதேவனின் ஞானம்

மகாபாரததில் பாண்டு இறக்கும் தருவாயில் தன்னுடைய 5 புத்திரர்களை அழைத்து தன்னுடைய உடலை தீக்கிரை ஆக்கும் மூன் அதனை உண்ண வேண்டும் என்று பணித்தார். அவ்வாறு உண்டால் முக்காலமும் உணரும் சக்தியை அவர்கள் பெருவார்கள் என்று கூறி இறந்தார். இதனை மறைந்து கவனித்த மாயவன் கண்ணன் அவர்களை திசை திருப்பி பாண்டுவை எரிக்க காட்டிற்கு சென்று விறகுகளை கொண்டு வருவோம் என்று அழைத்து சென்றான். பாண்டுவின் பூத உடலின் பாதுகாப்பிற்காக சகாதேவனை மட்டும் காவல் காக்கும்படி கூறி கண்ணன் மீதமுள்ள நால்வரையும் அழைத்துசென்றான். இதற்கிடயில் தந்தையின் கூற்றை சிந்தித்த சகாதேவன் கிருஷ்ணன் வருவதற்குள் பாண்டுவின் சுண்டு விரலை உண்டார். அதனால் முக்காலமும் உணரும் சக்தியை பெற்றான். அனைவரும் விறகினை கஷ்டப்பட்டு சுமந்து வரும் சமயம் கிருஷ்ணனின் தலையில் விறகுகள் இல்லாமல் அவைகள் மிதந்தும் பறந்தும் வந்ததை சகாதேவன் கண்டான். ஒவ்வொருவரும் விறகுகளை சுமந்து களைப்பில் இருக்க இறைவனும் களைப்பில் இருப்பதை போல் நடிக்க சகாதேவனோ இறைவனிடம் நன்றாக நடிக்கிறாய் மாதவா என்று சொன்னதும் கண்ணன் சகாதேவனை வினவ சகாதேவன் உண்மையை ஒப்புக்கொண்டான். உடனே கிருஷ்ணன் சகாதேவனிடம் எதிர் காலத்தில் தான் நடத்த இருக்கும் லீலையை நீயும் இனி முன்கூட்டியே அறிவாய் என்றும் எக்காலத்திலும் யாருக்கும் அதனை முன்னரே கூறக்கூடாது என்று சத்தியைத்தைப்பெற்றான். அதனால் தான் துரியோதனன் பாரத போரில் சகாதேவனை அனுகி வெற்றிக்கு நாள் வேண்டி இருந்தான்.

சகாதேவனுக்கு மட்டும் ஏன் இந்த வரைத்தை இறைவன் அளித்தான். அதனை ஏன் மற்றவர்களுக்கு மறுத்தான். அதுவும் அவன் லீலைகளில் ஒன்று.

தர்மன் : அனைத்து சாஸ்திரங்களை அறிந்தவர். அந்த ஞானத்தை பெற்றார்.
பீமசேனன் : உடல் வலிமை மிக்கவன்.
அர்ஜுனன் : சிறந்த வில்லாளி.
நகுலன் : மருத்துவ கலையில் நிபுணத்துவம் பெற்றவன்.
அதனால் தான் கிருஷ்ணன் சகாதேவனுக்கு இந்த

வரத்தை அளித்தான்.
இறைவன் நினைத்திருந்தால் சகாதேவன் சக்தியை பறித்திருக்க இயலும் அதனை செய்யாமல் இருந்தது தான் கண்ணனின் கருணை.

ஜோதிட சாஸ்திரதில் கைத்தேர்ந்தவனாக விளங்கிய சகாதேவன். பாரதப் போரில் கர்ணன் இறந்ததும் மற்றும் துரியோதனன் தோற்ற பிறகு கிருஷ்ணனிடம் இக்கலை ஒரு மாயை என்றும் உண்மை இல்லாத சாஸ்திரம் என்று கூறி ஜோதிட குறிப்புகளை எரிக்க முற்ப்பட்டான்.
கிருஷ்ணன் அதனை தடுத்து சகாதேவனிடம் ஏன் இவ்வாறு கூற காரணம் என்ன என்று கேட்க சகாதேவனோ என் தமயனில் ஒருவன் கர்ணன் அதனை என்னால் உணர முடியவில்லை. நான் நாள் குறித்தும் துரியோதனன் தோற்றான் என்றும் கூற இறைவன் சிரித்தவாறே அனைத்தும் நீ நினைத்தபடி நடந்தால் பிறகு 'நான் எதற்கு? என்றான்.

சர்வம் ஸ்ரீ கிரிஷ்ணார்ப்பணமஸ்து.



**திரு. கிருஷ்ணன்**
ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர்



# ஆன்மீக சிறுகதை

# இன்னார்க்கு இன்னாரென்று....





ரா. பன்னீர்செல்வம்

தங்க நிற பூக்கள் கொத்துக்கொத்தாய் தொங்கி, காலை வெயிலில் ஜொலித்துக் கொண்டிருந்தது. இறைவனின் படைப்பு இத்தனை அதிசயம் நிறைந்ததா?! என்ன அழகு.... என்ன அழகு?!... மஞ்சள் நிறத்தில் திராட்சைக் கொத்துகள் தொங்குவது போல அந்த மலர்கள் மென் காற்றில் ஆடிக்கொண்டிருந்ததை ரசித்துப் பார்த்த ஆனந்தனின் உள்ளம், அவனது பெயருக்கேற்றாற் போலவே இனம்புரியாத ஆனந்தத்தில் திளைத்தது!.

அது.... சரக்கொன்றை மரம்! இலைகளே தெரியா வண்ணம் மரம் முழுக்க மலர்கள்! தினமும் காலையில் கோவிலுக்கு செல்லும்போது சிலகணங்கள் நின்று ரசித்து பார்த்து விட்டுத்தான் செல்வான் ஆனந்தன்.

இன்று... இளம் வெயிலில்... காலைக்கதிர் ஒளியில் பூக்களின் அழகு, இனம் புரியாத இன்பத்தை விளைக்க.... "இத்தனை அழகாய் இருப்பதால் தான் இறைவன் ஈசன் இதனை அகமகிழ்ந்து அன்போடு சூடிக்கொண்டாரோ?... இறைவனுக்கு பிடித்த இந்த மலரை, சூட்டினால் பக்தர்களின் வேண்டுதலை இறைவன் நிச்சயமாக நிறைவேற்றுகிறான் என்பது உண்மைதானோ?!...

இது என்ன மலரா?... மஞ்சள் நிறத்தில் காய்த்துத் தொங்கும் திராட்சைக் கொத்தா?.. " என பலவாறு நினைத்து மகிழ்ந்தவனை ஒரு குரல் திசை மாற்றியது!

“என்ன தம்பி.... இந்த பூக்களையே பார்த்தபடி நிக்கிற?”, வீட்டின் கேட்டை பிடித்தவாறு உள்ளே நின்ற முதிய பெண்மணி, கனிவாக கேட்டார்.

எதிர்பாராமல் வந்து விழுந்த கேள்வி! கொஞ்சம் தடுமாறி, பின்பு சமாளித்து, தயக்கத்தோடு பதில் சொன்னான், " இல்ல... இது ரொம்ப அழகா இருக்கு... "

"அதனால தானேப்பா, ஆண்டவனே இது மேல பிரியப்படறான்"... என்றார் அந்தப் பெண்மணி!

“ஆமா... நீ யாரு?... இப்பத்தான் கொஞ்ச நாளா உன்னை பார்க்கிறேன்... ஊருக்கு புதுசா?.."

எனக்கேட்டார், பெண்மணி....

“ஆமாம்மா! தாலுக்கா ஆபீஸ்ல வேல... மாற்றலாகி வந்து ஒரு மாசம் தான் ஆகுது! தினமும் இந்த வழியா தான் கோவிலுக்கு போவேன்"... என்றான் ஆனந்தன்!

"நல்ல பழக்கந்தான்..... ஆமா, கல்யாணம் ஆயிடுச்சா?"



"இன்னும் இல்லம்மா! " சங்கடத்தோடு சொன்னான்,
"வெறுங்கையோட கோவிலுக்கு போகாதப்பா! தினமும் இந்தப் பூவை பறித்துக் கொண்டு போய் சுவாமிக்கு கொடு! சீக்கிரமே கல்யாணம் நடந்திடும்!" கரிசனத்தோடு சொன்னார், பெண்மணி!
"கல்யாணம் இருக்கட்டுட்மா..... இந்தப் பூவப் பறிக்க அனுமதி கொடுத்தீங்களே அதுவே போதும்,... ரொம்ப நன்றிமா!" கிடைக்காதது கிடைத்து விட்டதைப் போல் ஆனந்தன் மகிழ்ந்தான்.

சட்டென்று வேகமாக சென்று, அருகிலே இருந்த செங்கற் குவியலின் மீது ஏறி, உயரத்தில் தொங்கிக் கொண்டிருந்த மலர்க் கொத்தினை பறித்தான்.... இறைவனே தன் கைக்குள் அகப்பட்டு விட்டதைப் போல் ஆனந்தமடைந்தான்.
"தம்பி.... என் மகளுக்கு 27 வயசாகியும் வரன் அமையல! அஞ்சு பிரதோஷம்... இந்தப்பூவ சார்த்தி வேண்டிக்கிட்டா! ஆறாவது பிரதோஷத்துக்கு அவ கோயிலுக்கு போகலை! அன்னைக்குத்தான் மாப்பிள்ளை வீட்டார் வந்தாங்க! அந்த வரனே முடிஞ்சி, இன்னைக்கு குழந்தை குட்டியோட நல்லா இருக்கிறா!" பெருமையோடும் நம்பிக்கையோடும் சொன்னார், அந்தப் பெண்மணி!
வேலை பார்க்கிற இடத்தில் நிம்மதியா, எந்த பிரச்சனையும் இல்லாம இருந்தால் போதும்மா!... அதுக்காகத்தான்..... சரி... நான் வரேன்மா!" என்றவாறு கோவிலை நோக்கி நடந்தான் ஆனந்தன்.
கோவில்.....

சிவலிங்கத்தின் மீது ஆனந்தன் கொண்டுவந்த கொன்றை மலர் கொத்து, அந்த சுந்தரேஸ்வரரை மேலும் சுந்தரமாக்கியது. அந்தப் பெண்மணியிடம் தயங்கினாலும் இறைவனிடம் மானசீகமாக வேண்டிக் கொண்டான் ஆனந்தன்!
"அப்பா இல்லாத குறையே தெரியாத அளவுக்கு அம்மாவும் அண்ணனும் என்னை நல்லா படிக்க வச்சு, உத்தியோகமும் வாங்கிக் கொடுத்துட்டாங்க! கல்யாணம் பண்ணி வெச்சுட்டா தன்னோட பொறுப்பை நிறைவேற்றின திருப்தி கிடைக்கும்னு அண்ணன் நினைக்கிறாரு.... பேரன், பேத்திகள கண்ணால பார்த்துடன்னுன்னு அம்மா ஏங்குறாங்க!...

தெய்வமே! அவங்க ஆசையை நிறைவேற்று! " என வேண்டிக் கொண்டான் ஆனந்தன்.

ஏதோ தனக்கு திருமணத்தில் விருப்பம் இல்லாதவன் போல் வேண்டிக் கொண்டது, பக்கத்து இலைக்கு பாயாசம் கேட்பதுபோல் இருந்தது! இதை என்ன.... இறைவன் அறிய மாட்டானா?....

வேலை முடித்து வீடு திரும்பிய ஆனந்தன், தன் அம்மாவிடமும் அண்ணன் சுந்தரிடமும் கொன்றை மலரை பறிக்க அனுமதி கிடைத்ததும் சுவாமிக்கு சாற்றி வேண்டிக் கொண்டது பற்றியும் உற்சாகமாகச் சொன்னார்.

ஆனந்தனின் அண்ணி, "அப்போ.. ஆனந்த் தம்பிக்கு சீக்கிரமே கல்யாணம்

கூடிடும். எனக்கு துணையா வேலை செய்ய ஓரகத்தி வரப்போறா! அவ யாரோ?, எப்படி இருப்பாளோ?... அந்த கடவுள் அருளால வர்றவ; நல்ல பெண்ணா தான் இருப்பா! " என்றதும் எல்லோரும் சிரித்து ஆனந்தனை பார்க்க, அவனுக்கு வெட்கம் பிடுங்கித்தின்றது. புன்னகையை மறைத்தவாறே, தன் அறைக்குள் போனான்.

இரண்டாம் நாள்.... ஞாயிற்றுக்கிழமை!

காலை நேரம்! மிகவும் பரபரப்பாக இருந்தது. ஆனந்தனின் அம்மாவும் அண்ணியும் அண்ணியின் ஊருக்குச் செல்ல கிளம்பிக் கொண்டிருந்தார்கள்.

அம்மா," சுந்தர்.. உன் மாமனார் வீட்டுக்கு போயிட்டு நானும் இவளும் ஒரு ரெண்டு நாள் இருந்துட்டு வந்துடறோம்.... இனி சாப்பாடெல்லாம் செஞ்சிக்குவ இல்ல!? "... என மூத்த மகனிடம் கேட்டார்.

"அத பத்தி எல்லாம் கவலைபடாம நீ போயிட்டு வாம்மா! நானும் ஆனந்தனும் பார்த்துக்கறோம். எம்பொண்டாட்டி சமையல்ல இருந்து விடுதலை கிடைக்கும் என்று நினைத்தேன்... முடியல! அவர் கற்றுக்கொடுத்த சமையல பண்ணி, அவ கை பக்குவத்தில நான் சமைக்கப் போறேன்.... வேற வழி?" என சிரிக்க, ஆனந்தன் அண்ணியின் முகத்தை பார்த்து சிரிக்க, அண்ணி அகிலா கொழுந்தனின் கேலியை ரசித்தவாறு கணவனை பொய்யாய் முறைத்தாள்!

வெளியே, சைக்கிள் ரிக்ஷா வந்து நின்றது! அம்மா...

"சரி, ரிக்ஷா வந்துடுச்சு... நாங்க கிளம்பறோம்.... ஜாக்கிரதை!.." என்றபடி அம்மாவும் சுந்தரின் மனைவி, குழந்தைகளும் ரிக்ஷாவில் ஏறி புறப்பட்டார்கள்.

சுந்தர், "டேய், ஆனந்த்... குளிச்சிட்டு வந்துடு! டிபன் சாப்பிடலாம். நல்ல வேள.... டிபன் செஞ்சு வச்சிட்டா! சீக்கிரம் சாப்பிட்டு மதிய சாப்பாட்டு வேலைய ஆரம்பிக்கணும்! " பரப்பரப்பானார்கள்.

இருவரும் டிபன் சாப்பிட்டு முடித்து, தட்டினை கழுவிக் கொண்டு இருக்க... "அம்புஜம்... அம்புஜம்...." ஹாலில் குரல் கேட்க, அம்மா பெயரை சொல்லி அழைப்பது யார்? இருவரும் ஒருவருக்கு ஒருவர் பார்த்தபடி, கூடத்திற்கு வந்தனர்.

இவர்களை பார்த்தவுடன் சிரித்தார் ரங்கராஜ் மாமா! நெருங்கிய சொந்தம் தான். ஆனால், இப்போது அதிகப்படியான போக்குவரத்து கிடையாது! காரணம், ரங்கராஜ் மாமாவின் மனைவி சுலோச்சனா தான். கட்டிய கணவனை மதிக்காமல் அடிமைபோல் நடத்தும் சுலோச்சனாவின் குணம் சுந்தரின் அம்மாவுக்கு கொஞ்சமும் பிடிக்காது!

சுலோச்சனா தான் இப்படி என்றில்லை, அவரது அம்மா மகள்கள், இவளது தங்கை எல்லோருக்குமே ஆண்களுக்கு- குறிப்பாக கணவன்மார்களுக்கு கட்டுப்படாமல் அடிமையாய் நடத்தும் குணம் வழி வழியாய் வந்து கொண்டிருந்தது.

ஆனந்தன், "வாங்க மாமா.... எப்படி இருக்கீங்க?" என்றான்.

சுந்தர், " மாமா... டீயா? காபியா? " சொல்லுங்க. சீக்கிரம் போட்டுக் கொண்டு வந்துடறேன், " என்றான்.

திகைத்த மாமா, " என்னது... நீ காபி போடப் போறியா?...

எங்கடா என் தங்கை அம்புஜம்?! உன் பொண்டாட்டியும் இல்லையா?" எங்க போனாங்க?" என்றார்.

"ஒரு மாறுதலுக்காக அகிலா வீட்டுக்கு போயிட்டு வரேன்னு இப்பதான் கிளம்பி போனாங்க! அகிலாவும் அவ அம்மாவை பார்த்து ரொம்ப நாளாச்சு! அதான் பிள்ளைகள கூட்டிகிட்டு இப்ப தான் போனாங்க!" என்றான் சுந்தர்!

மாமாவின் மூளை வேகமாக வேலை செய்தது! யோசித்தார்.

இதுதான் சரியான சமயம்! அவர் தன் எண்ணத்தை செயல்படுத்த ஆரம்பித்தார்." சரி.... நீங்க இப்ப என்ன பண்ணப்போறீங்க?"...

"மதியம் சாப்பிடணும்ல்ல; சமையல் பண்ண போறோம்! " ஆனந்த தன் பாணியில் பதில் சொன்னான்.

மாமா, "சாப்பாடு என்னடா பெரிய சாப்பாடு... உடனே நீங்க எங்க கூட கிளம்புங்க.... மதிய விருந்தே சாப்பிடலாம்...ம்.... சீக்கிரம்.... " என அவசரபடுத்தினார்.

"எங்கே மாமா?" பொறுமையாய் கேட்டான் சுந்தர்! நம்ம உறவுக்காரங்க வீட்டில் ஒரு விசேஷம்... அம்புஜத்தை கூட்டிட்டு வரேன்னு அவங்க கிட்ட சொல்லிட்டேன். அதான், அம்புஜம் இல்லையே... நீங்க ரெண்டு பேரும் வாங்க... போயிட்டு

வந்துடலாம். போக ஒரு மணி நேரம்... வரதுக்கு ஒரு மணி நேரம்... அங்க ஒரு மணிநேரம்...ம்... சீக்கிரம் கிளம்புங்க! " அவரது குரலில் அவசரம் இழையோடியது.

ஆனந்த், சுந்தரை பார்த்தான், இருவரது பார்வையும் என்ன செய்வது? " என்றே பேசிக்கொண்டன.
"என்னடா இப்படி பேந்த பேந்த முழிக்கறிங்க? நேரமாச்சி... " என கண்களை உருட்டினார் மாமா!

பெரியவர்களை மதிக்க வேண்டும்... உரிய மரியாதையைக் கொடுக்க வேண்டும்... பெரியோர்கள் பேச்சை தட்டக்கூடாது என்கிற நற்பண்புகளை சொல்லிக்கொடுத்து வளர்க்கப்பட்டவர்கள் ஆதலால் மாமாவின் சொல்லுக்கு உடன்பட வேண்டும் என்கிற முடிவிற்கு வந்தார்கள்.

ரயிலடியை நோக்கி நடந்தார்கள். நான்கடி முன்னால் சென்றுகொண்டிருந்த மாமா திரும்பி சுந்தரரைப் பார்த்து, " ஏண்டா, நீ மட்டும் பொண்டாட்டி, புள்ளைன்னு வாழுற.... சின்னவனுக்கு உத்தியோகமும் கிடைச்சு, அவனுக்கு சிரமம் வைக்கக்கூடாதுன்னு குடும்பமே இங்க மாற்றலாகி வந்துட்டீங்க; எல்லாம் சரிதான். இதெல்லாம் மட்டும் போதுமா?... உத்தியோகம், வருமானம்ன்னு இருக்கறவனுக்கு காலாகாலத்துல ஒரு கால் கட்டு போட வேணாமா? இதையெல்லாம் பெரியவன் நீ யோசிக்கவே மாட்டியா?"... என கனிவுடன் கேட்டார். அவரது கரிசனம் இருவருக்குமே நெகிழ்ச்சியை, தந்தது.

சுந்தர் பணிவுடன், "பார்த்துகிட்டு தான் இருக்கோம் மாமா!" என்றான்.
"எப்படி?....வீட்டுக்குள்ளேயே மூலைமுடுக்கெல்லாம் பார்க்கிறீர்களோ?... நாலு இடத்துக்கு போகணும்.... நாலு பேர் கிட்ட சொல்லி வைக்கணும் அப்பத்தானே 10 பொண்ணுல ஒண்ணாவது தேறும்", சிரித்தார், மாமா.

சுந்தர்," சரிங்க மாமா... அம்மா வந்ததும் சொல்லி, ஆக வேண்டியத செஞ்சுடறேன்", என்றான்.
"இந்த மாதிரி நேரத்துல வழிகாட்ட தான் என்னை மாதிரி பெரியவங்க இருக்கிறோம். ஒரு மாமனா இருந்துகிட்டு இது கூட செய்யலைன்னா நான் எல்லாம் எதுக்கு?... சுந்தரா.... இன்னைக்கு நடக்கப்போற விசேஷத்துக்கு பல பெண்கள்.... எல்லாம் நம்ம உறவுக்காரங்க தான்.... அதுல நான், ஒரு பொண்ணு ஆனந்துக்கு னு செலக்ட் பண்ணி இருக்கிறேன். அவனுக்கு பிடிச்சா, உடனே முடிச்சுடலாம் என்ன ஆனந்தா?!" அக்கறையோடு ஆனந்தை பார்த்தார்!

ஆனந்த் சங்கடத்தோடு தலைகுனிந்தான். அவன் மனதில் எண்ணங்கள் அலை மோதின." எப்படி இருப்பாள் அந்த பெண்... படித்தவளா?.. அழகானவளா?... பண்பு மிக்கவளா?... அது ரொம்ப முக்கியமாச்சே?.." சரி... மாநிறமா? பொன் நிறமா? மனசறிந்து நடப்பவளா? "... இவனது சிந்தனையை தடுத்தது மாமாவின் குரல், "நீ என்ன நினைக்கிறேன்னு தெரியுது! அவ அழக பார்த்தா, அப்படியே சொக்கிப் போய்டுவ, படிப்புல உன்ன மாதிரியே! வசதிக்கும் குறைச்சல் இல்லை... நீ சரின்னு சொன்னா மட்டும் போதும்"...
அவன் எண்ணத்தை அறிந்து ஆசையை தூண்டுவதாக பேசினார்.

சுந்தர், "அப்படினா... அம்மாவையும் கூட்டிக்கிட்டு இன்னொருநாள் போகலாமே மாமா! " என்றான்.
"டேய்... அது எனக்கு தெரியாதா? அவ இல்லாமலா இவன் கல்யாணம் நடக்கப் போகுது?! முதல்ல இவன் பொண்ண பார்த்து, பிடிச்சிருக்கு என்று சொல்லட்டும்! அப்புறம் மத்தத பார்த்துக்கலாம்".... என்றார் மாமா! ஸ்டேஷன் வந்து விட்டது; தானே பணத்தை எடுத்துக் கொடுத்து டிக்கெட் வாங்கச் சொன்னார்.

வீட்டை நெருங்கினார்கள், "இந்த வீடு தாம்பா", என்றார் மாமா! புரியாமல் பார்த்த ஆனந்த், " விசேஷம்ன்னு சொன்னீங்க.... விசேஷ வீடு மாதிரி தெரியலையே!.... " எனக் கேட்டான்.
"ஊரை கூட்டியா விசேஷம் பண்றாங்க! வீட்டுக்குள்ளேயே நடக்கிற சின்ன விசேஷம்; வாங்க! " என்றபடி உள்ளே நுழைய பின்னால் சென்றனர், சகோதரர்கள்.
மாமா என்னவோ விசுவாமித்திரர் மாதிரியும், இவர்கள் ராம லட்சுமணர் மாதிரியும் அடக்கமாக சென்றனர்.
"ஆனால், அவர் அழைத்துச் செல்வது வில்லை வளைக்கவா?... வேள்வி காக்கவா? "....



இனிமேல்தான் தெரியும்.

உள்ளே வந்தவர்களை உட்காரவைத்து வெகுவாய் கவனித்தாள், ரங்கராஜ் மாமாவின் மனைவி வைதேகி. அப்போது காப்பி கொண்டுவந்து கொடுப்பதும் தண்ணீர் கொடுப்பதுமாய் ஒரு உருவம் சகோதர்களை சிந்திக்க வைத்தது." யார் இந்த அப்பாவி?; பேசவே மாட்டான் என்கிறாரே... ஒருவேளை ஊமையோ?" என்று நினைக்க, அப்போதுதான் டிபன் கேரியருடன் அவர் வெளியே சென்றார்.

சுந்தருக்கு எல்லாம் விளங்கிவிட்டது. வைதேகி மாமியின் மூத்த தங்கையின் கணவர் தான் இத்தனை நேரம் பொறுப்பான வேலைக்காரன் போல நடமாடியவர். அவரது தங்கை ஒருத்தி இருப்பதாக சுந்தர் கேள்விப்பட்டிருக்கிறான். ஆனால், பார்த்ததில்லை! "ஒருவேளை.... தம்பி ஆனந்துக்கு அந்தப் பெண்ணை.... ஒருவாறு யூகித்துக் கொண்டான் சுந்தர். ஆனால்," இந்த வீட்டு பொண்ணா?... என் தம்பிக்கா? "என நினைத்து கலக்கமடைந்து, தம்பியைப் பார்க்க, ஆனந்தின் முகத்தில், ஆவலும் எதிர்பார்ப்பும் தூக்கலாகவே இருந்தது. இருக்காதா பின்னே... இதுவரை பெண் பார்க்க என்று எங்குமே போனதில்லை; இது தான் முதல் அனுபவம். மாமா வேறு, பெண்ணின் நிறம், குணம் என்று என்னென்னவோ அளந்து வைத்தார். அதன் விளைவே, பெண்ணை பார்த்தே ஆக வேண்டும் என்ற ஆவலோடு கண்களை அலைபாய விட்டான், ஆனந்த்! அவனைப் பார்த்து சுந்தருக்கு கவலை அதிகமாகியது! மெல்ல அவனருகே அமர்ந்தான்.

"டேய், ஆனந்த்..... நம்ம அம்மா அடிக்கடி சொல்வாங்களே... ஆம்பளைங்கள அடிமை மாதிரி நடத்த குடும்பம்னு! சாட்சாத் அது இந்த குடும்பம் தாண்டா; மெல்ல கிசுகிசுத்தான், சுந்தர்!
"அய்யய்யோ"... உண்மை உறைக்க, சட்டென்று வாய் விட்டு லேசாக அலறினான் ஆனந்த்!
"என்னாச்சு தம்பி"..... வைதேகி வேகமாய் கேட்டாள்...

சமாளித்த ஆனந்த், " ஒன்னும் இல்ல.... எறும்பு....கடிச்சி.... " என்றபடி முழங்கையில் தேய்த்துக் கொண்டான்...
"என்ன தம்பி நீங்க.... எறும்பு கடிக்கே இப்படியா?.... " சிரித்தாள் வைதேகி!
"அதானே... இவங்க கடியை எல்லாம் எப்படி தாங்குவது!? " என்று தம்பியின் காதில் சுந்தர் சொன்னான், "டேய் ஜாக்ரதடா! அடிமை குரூப்ல இன்னொரு மெம்பரா நீ சேர்ந்துடாதே," என்றான்.

அப்போது உள்ளே இருந்து வந்த ரங்கராஜ் மாமா..... "வைதேகி.... வரதராஜ் சாப்பாடு கொண்டு வந்துவிடுவான், நேரம் போய்க்கிட்டே இருக்குது! என்னம்மா சொல்ற? " குழைந்தார்.

"ஏய் துளசி.... ஜானுவ அழைச்சுக்கிட்டு வா! அப்படியே அந்த" என்று உள்ளே பார்த்துக் குரல் கொடுத்தாள் வைதேகி.

ஆவலும் பயமும் போட்டி போட

வரப்போகிறவளை பார்க்க ஓரக்கண்ணால் பார்வையை ஓட்டினான் ஆனந்த்!

சுந்தருக்கு தர்மசங்கடம்! ஆனந்தின் காதில், “அப்சரஸ் வந்தாலும்.... வேணாம்னு சொல்லிடுடா!” என்று கூறினான்.

கையில் தட்டை ஏந்தி, அதிலேயே டம்ளர்களில் மோர் இருக்க, கோவில்களில் பாவை விளக்கு.... அதாவது விளக்கேந்திய பாவை சிற்பங்கள் இருக்குமே அதைப்போன்ற அங்கலட்சணத்துடன் முக வசீகரத்துடனும் தங்க வார்ப்பாக வந்து நின்று, மோர் டம்ளர்களை கொடுத்தாள், ஜானு!

அவளது இளம் புன்னகை எனும் பள்ளத்தாக்கில் ஆனந்த் விழுந்து விட்டான் என்றே சொல்ல வேண்டும். அந்த அளவுக்கு ஆனந்தை ஜானு கவர்ந்து விட்டாள். எப்படி எழுவான், ஆனந்த்!?

ஜாடைமாடையாக இதனை கண்ட சுந்தர் வெலவெலத்துப் போய் விட்டான், “ஐயோ இவன் என்ன?... இல்லாதவன் இருட்டுக்கட அல்வாவை பாக்குற மாதிரி பார்க்கிறான்... தெய்வமே!” என வேண்டியபடி, நிலைகொள்ளாமல் தவித்தான்.

“நீ உள்ள போமா! ” வைதேகி சொன்னதும் ஜானகி உள்ளே சென்றாள்.

”அண்ணா. .. நல்லாத்தானே இருக்குது!” என சுந்தரின் காதில் மகிழ்ச்சியாய் கிசுகிசுத்தான் ஆனந்த்!

“முதல்ல நல்லா தாண்டா இருக்கும்! தாலி கட்டிட்ட.... லைசன்ஸ் கட்டின, நீ நாயா அலையணும்.... அதோ பார்த்தியா?”...

சுந்தர் சுட்டிக் காட்டிய திசையில் ஒரு கையில் சாப்பாடு கேரியர், இன்னொரு கையில் வாழை இலை சகிதமாய் உள்ளே நுழைந்தார், வைதேகியின் மூத்த தங்கையுடைய கணவர்!

”டேய், நீ பொண்ண பார்த்து மயங்கி சம்மதம் சொன்னா டிபன் கேரியரை தூக்க மாட்ட! பர்மனென்ட் குக்கா ஆகி, கிச்சன்லேயே வெந்துடுவ; ஜாக்கிரதை!” பல்லைக் கடித்தபடி சுந்தர் சொல்ல...

ஆனந்த் தவித்தான், ”அழகா இருக்கிறா.... அண்ணா பயமுறுத்துறார், எப்படி சமாளிக்கிறது?! ”என குழம்பினான். அப்போது ”என்ன தம்பி... பொண்ணு பிடிச்சிருக்கா.... ரெண்டு பேருக்கும் செம பொருத்தமாயிருக்கும்! என்ன சொல்ற? ” வைதேகி நேரிடையாக கேட்க....

மாமா..... “சொல்லுடா ஆனந்தா... மாமி கேட்கிறா இல்ல!? பட்டுனு சொல்லு! உனக்கு ஜானுவ பிடிச்சிருக்குல்ல?! சொல்லிடு!” என்றார், எல்லோரும் ஆனந்தை பார்க்க...

சுந்தர் மனதிலோ போராட்டம்! ”டேய், வேணாண்டா! நீயே சமைச்சி எடுத்துகிட்டு வேலைக்குப் போக உன்னால முடியாதுடா! பிடிக்கலைன்னு சொல்லிடு! சொல்லு பிடிக்கல.... பிடிக்கல..... பிடிக்கல.....” வெளியே சொல்லி தம்பியை தடுக்க முடியாமல் தவித்தான்....

வைதேகி, ”சொல்லுங்க மாப்ள... பொண்ண....பிடிச்சிருக்கா?” சற்றே கண்டிப்போடு கேட்டாள்.

வெட்கமும் குழப்பமும் முகத்தில் குடிகொள்ள எல்லோரையும் பார்த்த ஆனந்த், இறுதியாக அண்ணன் சுந்தரை பார்க்க.... கண்களாலேயே ஜாடை காட்டினான் சுந்தர்!

தரையைப் பார்த்தபடியே, ஆனந்த், ”எனக்கு பிடித்திருக்கிறது வேற விஷயம்! அம்மாகிட்ட அபிப்ராயம் கேட்டு சொல்றேன். நல்ல முடிவா அம்மா எடுப்பாங்க!” என சொல்ல, ” அப்பாடா! என நிம்மதிப் பெருமூச்சு விட்டான் சுந்தர்! சாப்பிட்டவுடன் புறப்பட்டார்கள்

விஷயம் தெரிந்த அம்மா பொரிந்து தள்ளினாள், ”அந்த மனுஷனுக்கு ஏன் இந்த ஆசை?! என் மகனுக்கு கல்யாணத்தை பண்ணி வைக்க எனக்கு தெரியாதா? போயும் போயும் புதைகுழியில் சிக்கவைக்க பார்த்தாரே!... டேய், ஆனந்த், கடவுளுக்கு நன்றி சொல்லிட்டு வேலைய பாரு” என்றாள்.

அன்று பிரதோஷம்! ஒரு மணி நேரம் அலுவலகத்தில் அனுமதி வாங்கி வீட்டிற்கு வந்த ஆனந்த், கோவிலுக்குப் புறப்பட்டான். வழக்கம்போல அந்த வீட்டின் மரத்தில் சரக்கொன்றை மலர்களில் சில கொத்துக்களை பறித்துக் கொண்டு சென்றான்.

சிவலிங்கத் திருமேனியில் கொன்றை சரங்கள் அழகூட்டிக் கொண்டு இருந்தன. அப்போது அர்ச்சகரை நெருங்கிய ஒரு இளம் பெண், அவரிடம், ஏதோ கேட்க... கண்களை மூடி கடவுளிடம் வேண்டியபடி நின்ற ஆனந்தை கை காட்டினார், அர்ச்சகர்.

ஆனந்தின் அருகில் வந்தாள் அந்த

இளம்பெண்! வேண்டுதல் முடித்து கண்களை திறந்தான் ஆனந்த்! அந்தப் பெண் அருகில் நிற்பதை பார்த்ததும் அவன் மனதில் ஒரு மின்னல்! சிவந்த மேனி, தேவதை போல தோற்றம்! எதற்காக இவள் என்னையே பார்த்தபடி நிற்கிறாள்; ஒன்றுமே புரியாமல் தவித்தான். அவளோ வெட்கத்தோடு பேசினாள்.

"கொன்றை மரத்தில் நீங்கதானே தினமும் பூவ பறிக்கிறது?! " தயக்கத்துடன் வார்த்தைகள் வெளிவந்தன.

"ஆ... ஆமாங்க! நான்.... அந்த பெரியம்மா கிட்ட அனுமதி கேட்டுத்தான் பறிச்சுக்கிட்டு இருக்கேன், " பதறி பதில் சொன்னான், ஆனந்த்!

"அந்த பெரியம்மா என்னோட பாட்டி தான்! அவங்களுக்கு உடம்பு சரியில்ல.... ஒரு வாரமா ஹாஸ்பிடல்ல சேர்த்திருக்கிறோம்? அவங்கள பார்த்துக்க தான் நான் தஞ்சாவூர்ல இருந்து வந்திருக்கேன் என்றாள். அவள் பேசும்போது பிரிந்து சேரும் உதடுகளின் அழகில் நிலைகுலைந்து போனவன் ஏதும் பேசாமல் அவளையே பார்த்தபடி நின்றான்.

"பாட்டி.... உங்கள பார்க்கணும்னு சொன்னாங்க! இன்னைக்கு பிரதோஷம் கண்டிப்பா அந்த தம்பி, கோவிலுக்கு வருவாரு! இந்தப் பகுதியிலேயே கொன்றை மரம் நம்ம வீட்டுல தான் இருக்குது! இது வரைக்கும் யாரும் கோவிலுக்கு இத பறிச்சுகிட்டுப் போனதில்லை; அந்தத் தம்பி தான் என்கிட்ட அனுமதி கேட்டு பறித்துகிட்டு போறாரு! அர்ச்சகர் கிட்ட கேளு, அவர் சொல்வார் என்று சொன்னாங்க"..... என சங்கடத்துடன் சொன்னாள்.

"இப்ப நல்லா இருக்காங்களா?... ஆமா... என்னை எதுக்காக கூட்டிக்கிட்டு வரச் சொன்னாங்க? " ஆனந்தின் கேள்வியில் ஆவலும் கலந்திருந்தது,"தெரியல" என்றாள், அவள்!

இறைவனை கையெடுத்து கும்பிட்டு விட்டு அவளுடன் நடந்தான் ஆனந்தன்!

இதுதான் விஷயம்! தன் மகள் வழிபேத்தியான சீதாவை பக்தியும் பொறுமையும் கொண்ட ஆனந்திற்கு மணம் முடிக்க விரும்பிய அந்த பெண்மணி, ஆனந்திடம் சில விபரங்கள் கேட்டாள்!

எல்லா அம்சமும் பொருந்தியது! இரு வீட்டார் பேசி முடிக்க, இனிதே திருமணம் நடந்தது ஆனந்தனுக்கு, குடும்பத்திற்கு ஏற்ற அழகான, அறிவுள்ள மருமகளாய் குலம் காக்க வந்தாள், சீதா!

கொண்ட உறவால் மட்டுமே முடிச்சு போட நினைத்தார், ரங்கராஜ் மாமா! கொன்றை மலரை கொண்டே இன்னார்க்கு இன்னார் என தீர்மானித்தான் இறைவன்!

# ஆன்மீக கேள்விகளும் அர்த்தமுள்ள பதில்களும்…



ஆரூர். ஆர். சுப்பிரமணியன்

### நாமியை விட நாமமே சிறந்ததா?

நிச்சயமாய். “மந்திரம் போல் வேண்டுமடா சொல்லின் இன்பம்“ என்பார் அமரகவி பாரதியார். இதோ திருமங்கையாழ்வாரின் பாடல் பாரதியின் கருத்தை ஏற்கும் விதமாக,

“குலம் தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நீலந்தரஞ் செய்யும் நீள்வீசும் பருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலம் தரும் மற்றுந் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலம் தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்”

அது மட்டுமா ராமனைவிட ராமநாமம் மிகவும் சக்தி வாய்ந்தது என்பதை பல புராண சம்பவங்கள் நிரூபிக்கும்.

### தன் மனைவி பெயரை முன்வைத்து இக்கால கணவர்கள் செய்வது போல அக்காலத்தில் உண்டா?

பல உதாரணங்கள் உண்டு. உதாரணத்திற்கு ஒன்று.

அஷ்டபதியிலே, அதனை இயற்றிய ஜயதேவர் தம் மனைவி பத்மாவதி பெயரை முன் வைத்து, தான் பத்மாவதியின் கணவனான ஜயதேவர் என்று தான் பெருமையுடன் கூறியுள்ளார்.

ஏன் பகவான் கண்ணன் கூட தன்னை ராதே கிருஷ்ண என பக்தர்கள் கூப்பிடுவதையே விரும்புகிறாராம்!

### சப்த கோடி (ஏழு கோடி) மந்திரங்கள் என்கிறார்களே, அவ்வளவு மந்திரங்கள் உள்ளனவா?

ஏழு கோடிகள் என்றால், ஏழு முடிவுகள் என்று பொருள். கோடி எண்ணிக்கையல்ல.

நமஹ - ஐஸ்வர்யம் வழங்குதல்
சுவாஹ - தேவதைகள் திருப்தியுறல்
சுவதா - வசீகரம் தருவது
பட் - விக்கினங்களை துரத்துவது
ஹூம்பட் - காமாதிகளை போக்குவது
வௌஷட் - தேவதைகளை இழுப்பது
வடிட் - தேவதைகளை வசமாக்குதல்
ஆக ஏழு முடிவுகள்.

### வாமனரின் உபநயனம் மிகச் சிறப்பானதாமே?

அதிதிக்கும், மகரிஷி காஷ்யபருக்கும் மகனாக பகவான் அவதரித்து வாமனன் என்ற திருநாமங் கொண்டார்.

வாமனனின் உபநயன விழாவில் முப்பத்து முக்கோடி தேவர்களும், அனேக ரிஷிகளும் பங்கேற்றனர்.

வாமனனுக்கு பிரம்மோபதேசம் செய்ய காயத்ரீ மந்திரத்திற்கே அதி தேவதையான சூரிய பகவானே வந்து உபதேசித்தார்.

சிறுநீர் தொற்றுப் போன்றவை அந்த பிரம்மச்சாரியை அணுகாவண்ணம் தடுக்கும் உஞ்சிக் கயிறை, வாமனின் தந்தை மகரிஷி காஷியபர் அளித்தார்.

மான் தோல் போட்டு வாமனனை அழகு பார்த்தது பூமாதேவி. சந்திர பகவான் தன் பங்குக்கு பலாச தண்டத்தை விழா நாயகனுக்குத் தந்தார்.

பிரம்மா சும்மா இருப்பாரா? அவர் ஒரு கமண்டலம் நிறைய கங்கை நீரை நிரப்பி வாமனனுக்குக் கொடுத்து மகிழ்ந்தார்.

சப்தரிஷிகள் தர்ப்பம் தர, கலைமகள் ஜெபிக்க ஜெபமாலையை வாமனன் கழுத்துக்குப் போட்டு அழகு பார்த்தாள்.

உபநயனம் முடிந்து தன் கடமையாக அந்தப் பிரம்மசாரி பிட்சை எடுக்க குபேரன் ஒரு தங்கப் பாத்திரத்தை வழங்கினார்

உபநயன விழா முடிவை நிறைவு செய்யும் வகையில் அன்னை அன்னபூரணி தங்க பிட்சை பாத்திரத்தில் அட்சதை போட்டு, அனைவரையும் ஆனந்தத்தில் ஆழ்த்தி விட்டாள்.

ஆனால் ஒரு காலத்தில் அதே பிரம்மா, சிவன் அளித்த ஒரு சாபத்தால் பூலோகத்தில் மானிடப் பிறவி எடுத்த போது, உபநயனம் செய்விக்க ஆளில்லாமலும், பிரம்மோபதேசம் புரிய யாரும் முன்வராத நிலையிலும் தவித்தது தனிக்கதை!

## தீபாவளி எண்ணெய் குளியலுக்கு குறித்த நேரம் ஏதேனும் உண்டா?

தீபாவளி ஸ்நானத்தை அருணோதயக் காலத்தில் செய்ய வேண்டும்.

அது என்ன அருணோதயக் காலம்?

சூரியன் வடிவானத்தில் தெரிவதற்கு 48 நிமிடத்திற்கு முன் உள்ள காலமாகும்.

தீபாவளி தினத்தில் சூரிய உதயம் தொடங்குவதற்கு ஒரு முஹுர்த்தக் காலத்திற்கு முன்பே வெந்நீரில், எண்ணெய் தேய்த்துக் குளிக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் இரவு 2 மணி, 3 மணிக்கோ ஸ்நானம் புரிவது நன்றல்ல.

## 'ப்ருஹத் ஸம்ஹிதை" என்ற நூல் எதைப் பற்றிக் கூறுகிறது?

முதலில் இந்நூலைப் படைத்தவர் யாரென அறிவோம்.

வராஹமிஹிரர் என்ற ஞானியே ப்ருஹத் ஸம்ஹிதையின் ஆசிரியர். 100 அத்தியாங்களுக்கும் மேற்பட்ட இந்நூலில் தாவர சாஸ்திரம், பட்சி சாஸ்திரம், மிருக சாஸ்திரம், மிருகங்கள் சாஸ்திரம், வேதாந்த சாஸ்திரம் மற்றும் அரிய நாடிகளுடைய சாஸ்திரமும் பற்றிய அநேக அபூர்வ விஷயங்கள் குறித்துக் கூறப்பட்டுள்ளது.

தான் மேலே கூறப்பட்ட விஷயங்களை சுருக்கமாக மட்டுமே தந்துள்ளேன் என்பதை வராமிஹிரர் தனது நூலில் கூறியுள்ளது குறிப்பிடத்தக்க ஒன்று.

வராக மிஹிரர் சக்கரவர்த்தி விக்கிரமாதித்தன் காலத்தில் அவருடைய அவையை அலங்கரித்த நவரத்தினங்களில் ஒருவராவார்.

## நாடி சாஸ்திரம் எதைப் பற்றி விவரிக்கும்?

சொல்லப்போகும் நாடி சாஸ்திரத்திற்கும், நாடி ஜோஸ்யத்துக்கும் எந்தவித சம்பந்தமுமில்லை.

நமது நாசியிலிருந்து சில சமயம் இடபுறமிருந்தும், சில சமயம் வலப்புறமிருந்தும் மூச்சுக் காற்று வரும். இரண்டு பக்கத்திலிருந்தும் சேர்ந்து காற்று வருவதில்லை. அதற்கு தனித்தனி பெயர்கள் உள்ளன.

நாடி சாஸ்திரம், வலது மூக்கு சுவாசக் காற்று இப்படி இப்படி வந்தால் என்னென்ன நல்லது கிடைக்கும் என்றும், இடது நாசிக் காற்றினால் இன்ன வசதி கிட்டும் என்று கூறுவதோடு மூச்சுக் காற்றை எப்படி எப்படி மாற்றி வெளிவிட்டால் எவ்வளவு நல்லவை சித்திக்கும் என்பதையும் விளக்கும்.

அந்நூலில் வலது மூச்சுக் காற்றை உயர்த்தி, அதனால் நல்ல சித்த விருத்தி, சாந்தம், ஆரோக்கியம் கிடைக்கும் என்பதைத் தெரிவித்து இடது நாசிக் காற்றால் கோபம், ரோகம், துக்கம் போன்றவை சூழும் என்பதையும் விளக்கமாக சொல்லப்பட்டுள்ளது.

## இரண்டின் சிறப்பு எவை?

அனைவருக்கும் பொது 2 - பிறப்பு, இறப்பு
வந்தால் போகாது 2 - புகழும், பழியும்
போனால் வராதது 2 - மானமும், உயிரும்
உடன் வருவது 2 - புண்ணியமும், பாவமும்
வருவதும் போவதும் 2 - இன்பமும், துன்பமும்
தானாக வருவது 2 - இளமையும், முதுமையும்
அடக்க முடியாதது 2 - ஆசையும், துக்கமும்

தவிர்க்க முடியாதது 2 - பசியும், தாகமும்
பிரிக்க முடியாதது 2 - பந்தமும், பாசமும்
இழிவைத் தருவது 2 - பொறாமையும், கோபமும்
இக்காலத்தில்
அழிக்க முடியாதது 2 - தீவிரவாதமும், செல்போனும்
தீர்க்க முடியாதது 2 - நீர் பங்கிடும், மின்சக்தி தடையும்

## நீராடும் முறைகள்?

ஆற்றில் குளிக்கையில் நீரோட்டம் எப்பக்கமோ, அப்பக்கம் நோக்கி நிற்க வேண்டும்.
குளத்தில் ஸ்நானம் புரிகையில் சூரியனைப் பார்த்து நிற்க வேண்டும்.
தீட்டு காரணமாய் இரவு குளியல் மேற்கொள்கையில் கிழக்கு அல்லது வடக்குதிசை நோக்கி நிற்க வேண்டும்.
வீட்டுக் கிணற்றடியில் நீராட நேர்ந்தால் கிழக்குத் திசை நோக்கி அதைச் செய்ய வேண்டும்.



# பக்தர் வாழ்வை வண்ணமயமாக்கும் பஞ்சவர்ணேஸ்வரர்



பிரபுசங்கர்

“நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்
நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்
சினந்திருகு களிற்றுரிவைப் போர்வை வைத்தார்
செழுமதியின் தளிர்வைத்தார் சிறந்து வானோர்
இனந்துருவிமணிமகுடம் தேறத் துற்ற இனமலர்கள்
போதவிழ்ந்து மதுவாய்ப் பல்கி
நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூர் எம் பெருமானார் நல்லவாறே”
-என்றுதிருநாவுக்கரசர் போற்றி மகிழ்ந்த திருத்தலம், திருநல்லூர்.

ஏழுநிலை ராஜகோபுரம், நான்கு ராஜவீதிகள் கொண்ட கோவில் இது. கோபுர வாயிலினுள் நுழைந்தால், இடப்பக்கத்தில் அமர்நீதி நாயனார், கைக்குழந்தையை ஏந்தியபடி அவருடைய மனைவி இருவரையும் சிற்பமாகக் காணலாம். சிவனடியார்களுக்கு ஆடை அளித்து, இன்னமுதும் படைத்திட்ட இந்த அடியாரை சிவபெருமான் வேதியர் வடிவில் வந்து சோதித்தது இந்தத் தலத்தில்தான் என்பது குறிப்பிடத்தக்கது. பலிபீட வடிவில் விநாயகர் காட்சியளிப்பது இந்தக் கோவிலில் மட்டும்தான். மேற்கு கோபுர வாயிலில் காணப்படும் இந்த கணநாதருக்கு ஆண்டுக்கு ஒருமுறை மிகப் பெரிய பூஜை நடத்தப்படுகிறது. அன்று திருநல்லூர் மக்கள் மற்றும் அடுத்த ஊர்களில் வசிப்பவர்கள் அனைவரும் தங்கள் வீட்டுப் பசு கறக்கும் ஒருவேளை பாலைக் கொண்டுவந்து கணநாதரை அபிஷேகித்து மகிழ்கிறார்கள்.

மூலவர் கல்யாண சுந்தரேஸ்வரர் என்று வணங்கப்படுகிறார். அம்பிகை, திரிபுரசுந்தரி. கயிலாயத்தில் சிவன் – பார்வதி திருமண வைபவத்திற்காக பிரபஞ்சமே அங்கே திரண்டு வந்தபோது உலகை சமன்படுத்துவதற்காக, ஈசன், அகத்திய முனிவரை தென்திசைக்குச் செல்லுமாறு பணித்தார். இறைவனின் திருமணத் திருக்காட்சியைத் தான் காண முடியாத ஏக்கத்தை

முனிவர் வெளிப்படுத்தியபோது, அக்காட்சியைத் தானே அவருக்கு தென்பகுதியில் காண்பிப்பதாக வாக்களித்தார் ஐயன். அதன்படி திருநல்லூருக்கு வந்த அகத்தியருக்குத் திருமணக் கோலத்தைக் காண்பித்து அருளினார். அதனால் ஈசன் கல்யாண சுந்தரேஸ்வரர் என்றழைக்கப்பட்டார். அவ்வாறு அகத்தியர் கண்ட காட்சியை நாமும் இன்றும் காணலாம். ஆமாம், மூலஸ்தானத்தில் லிங்கத்துக்குப் பின்னால் அக்காட்சி சுதை சிற்பமாக அமைந்துள்ளது. அருகிலேயே அகத்தியர் ஸ்தாபித்த லிங்கத்தையும் தரிசிக்கலாம்.

கல்யாண சுந்தரேஸ்வரர் கருவறை முன் நின்றால் உள்ளத்தோடு, உடலும் சிலிர்ப்பதை உணர முடியும். இந்த லிங்கத்தில் ஏழு கடல்களும் ஒடுங்கியதை நிரூபிப்பதுபோல ஏழு துளைகளைக் காணலாம். இவர் பஞ்சவர்ணேஸ்வரர் என்றும் காரணப் பெயரால் அழைக்கப்படுகிறார். ஆமாம், ஆறு நாழிகைக்கு ஒருமுறை தாமிரம், இளம் சிவப்பு, தங்கம், நவரத்தின வர்ணங்களோடு, இன்னதென்று பகுத்தறிய இயலாத ஐந்தாவது வர்ணத்தோடும் அடுத்தடுத்து அருட்காட்சி நல்குகிறார். இவருக்கு இன்னொரு சிறப்பு என்னவென்றால், மேலே உள்ள பதிகம் சொல்வது போல, திருநாவுக்கரசர் என்ற அப்பர் பெருமானுக்கு, இறைவன் தன் 'திருவடியைத் தலைமேல் வைத்தார்'. அதனலேயே இத்திருக்கோவிலில், வைணவக் கோவில்களில் செய்வதுபோல, சுவாமி சந்நதியில் தரிசனம் செய்யும் பக்தர்கள் தலைமீது இறைவன் திருப்பாதம் (சடாரி) சாத்தப்படுகிறது.

மூலவர் விமானத்தின் பின்புறம் நரசிம்மர் காட்சியளிப்பது வித்தியாசமாக இருக்கிறது. இதற்கும் ஒரு புராண சம்பவம் உண்டு. அதாவது இரண்யனை வதம் செய்வதற்காக மஹாவிஷ்ணு எந்த வடிவம் எடுப்பது என்று இந்த தலத்து ஈசனிடம் யோசனை கேட்டாராம், அதற்கு அவர், நரசிம்ம அவதாரம் எடுத்துச் செல்லுமாறு தெரிவித்தாராம்.

இறைவனுக்கு அருகிலேயே அன்னை திரிபுரசுந்தரி என்ற கிரி சுந்தரி, அருளாட்சி புரிகிறாள்.

இந்தக் கோவில் வளாகத்திலுள்ள சப்த சாகரம் என்ற தீர்த்தம் மிகவும் புண்ணியமானது. அதாவது ஏழு கடல்கள் சங்கமிக்கும் திருக்குளம் இது. ஒரு பிரளய காலத்தில் ஏழு கடல்களும் ஆர்ப்பரித்தபோது இறைவன் அவற்றை ஒடுக்கித் தம்முள் அடக்கிக் கொண்டு பிறகு மென்மையான திருக்குளமாக வெளிக் கொணர்ந்தார் என்று சொல்லப்படுகிறது. மாசி மாதத்தில் கும்பகோணத்திலுள்ள மகாமகக் குளத்தில் நீராடினால் என்ன புண்ணியம் கிட்டுமோ, அதனை இந்தக் குளத்தில் நீராடினால் பெறலாம் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

அவ்வாறு நீராடி, தன் தோஷம் நீங்கப் பெற்றவள் பஞ்ச பாண்டவரின் தாயாரான குந்திதேவி. பஞ்சபூதங்கள் தொடர்பால் மக்களைப் பெற்றெடுத்ததால் ஏற்பட்ட தோஷத்தை நாரதரின் அறிவுரைப்படி இத்திருக்குளத்தில் நீராடி நிவர்த்தியாகப் பெற்றாள் என்கிறது புராணம்.

இக்கோவிலின் இன்னொரு சிறப்பம்சம், இங்கு அருள்பாலிக்கும் அஷ்டபுஜ மாகாளி. பொதுவாகவே காளி என்றால் கோரமான முகம்தான் நம் நினைவுக்கு வரும். ஆனால் இந்தக் காளி மிகவும் சாந்த சொரூபி. மஞ்சள் பூசிய முகத்துடன் கருணை பொங்கும் விழிகளுடன் நல்லருள் புரிகிறாள். கர்ப்பிணிகள், தம் சுகப்பிரசவத்திற்காக இந்த காளியிடம் வேண்டிக் கொள்கிறார்கள். அவள் முன்னிலையிலேயே வளைகாப்பு விழாவையும் செய்து கொள்கிறார்கள். பிறகு காளியின் கரங்களிலும் இரு வளையல்களைப் பூட்டி அழகு பார்க்கிறார்கள்.

வில்வ மரம் இக்கோவிலின் தலவிருட்சமாகத் திகழ்கிறது. இங்குள்ள சோமஸ்கந்த மூர்த்தியை திருவாரூர் தியாகராஜருக்குச் சமமாக பாவிக்கிறார்கள். மாசிமக விழாவின்போது இவர் கோவிலுக்குள் பிராகாரங்களில் உலா வருவார். மாடக்கோவில் படிவழியாக இவர் இறங்கும்போது இவருக்கு வியர்வை பொங்கும் அதிசயம் நிகழ்கிறது. பக்தர்கள் இவருக்கு வெண்சாமரம் வீசியும், விசிறியால் விசிறியபடியும் வருவதையும் காணலாம். அவற்றையும் மீறி இவருக்கு வியர்ப்பது தெய்வீக வியப்புதான்.

மகம் நட்சத்திரத்தில் பிறந்தோர் இக்கோவிலில் வழிபாடு நடத்தித் தம் துயர் களைகிறார்கள்.

கும்பகோணம் – தஞ்சாவூர் நெடுஞ்சாலையில் சுந்தர பெருமாள் கோவில் என்னும் ஊருக்கு அருகே அமைந்துள்ளது நல்லூர்.





திருவாரூர் சு.சேகர்

# ஏற்றமிகு வாழ்வு தரும் வல்லம் ஏகவுரி அம்மன் கோவில்!!

இந்த உலகில் அனைத்திற்கும் ஆதியும் அந்தமும் ஆன அன்னை ஆதிபராசக்தி எத்தனையோ அவதாரம் எடுத்து அரக்கர்களையும், அதர்மத்தையும் அழித்து மக்களையும் மற்ற உயிர்களையும் காத்து வந்துள்ளார். ஒரு சமயம் பல கொடுமைகள் செய்து வந்த தஞ்சகாசுரனை வதம் செய்ததினால் பராசக்தியின் உக்கிரம் அதிகரிக்க, அசுரனால் துன்பப்பட்ட தேவர்களுக்கும், முனிவர்களுக்கும் இப்போது தங்களைக் காக்க வந்த அன்னையாலேயே துன்பம் ஏற்பட்டு விட்டதே என வருத்தப்பட்டு சிவனை வேண்டினர். சிவபெருமான் பராசக்தியை நோக்கி “ஏ கவுரி! சாந்தம் கொள்” என்றார். கணவன் சொல் கேட்டு சாந்தமடைந்த பராசக்தி நெல்லிப் பள்ளம் என்று அழைக்கப்பட்ட வல்லத்தில் சீற்றம் குறைந்து அமர்ந்தார்.

அண்டி வந்தவர்களுக்கு வேண்டியதை அள்ளிக் கொடுத்தாள். சிவன் அழைத்த பெயரிலேயே இவருக்கு ஏகவுரியம்மன் என்ற பெயர் ஏற்பட்டது. அசுரன் தஞ்சகாசுரன் கேட்டுக் கொண்டபடி அவன் பெயராலேயே அவ்வூருக்கு தஞ்சாவூர் எனப் பெயரிட்டார்கள்.

தஞ்சையில் இருந்து திருச்சி செல்லும் சாலையில் 12 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது வல்லம் என்ற ஊர். இங்குள்ள ஏகவுரி அம்மன் கோவில் இரண்டாயிரம் ஆண்டுகள் பழமையானது. எட்டு திருக்கரங்களுடன் பராசக்தி அக்னி கிரீடம் அணிந்து, ஒன்றின்மீது ஒன்றாக அமைந்த இரண்டு திருமுகங்களுடன் பத்ம பீடத்தின் மீது அமர்ந்த கோலத்தில் காட்சி தருகிறார். அம்பிகையின் உக்கிரமான முகம், பக்தர்களுக்கு ஏற்படும் தீமைகளை அழிக்கும் சக்தியாகும், மேலேயுள்ள தலை அவர்களுக்கு நல்லதை அருளும் முகமாகவும் இருக்கிறது. அம்மன் பாதத்தில் சக்திவாய்ந்த ஸ்ரீ சக்கரம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இதிலிருந்து கிடைக்கும் சக்தியானது வழிபடும் பக்தர் களின் வேண்டுதல்களை நிறைவேற்ற உதவுகிறது.

## ஸ்தல புராணம்:

பெண்ணால் மட்டுமே தனக்கு அழிவு உண்டாகும்படியான வரம் பெற்ற தஞ்சகாசுரன், தேவர்களையும், முனிவர்களையும்

துன்புறுத்தினான். பல கொடுமைகள் செய்து வந்த தஞ்சகாசுரனை பற்றி தேவர்களும், முனிவர்களும் சிவபெருமானிடம் முறையிட, சிவபெருமான் பார்வதிதேவியை அழைத்து, தஞ்சகாசுரனை அழிக்க ஆணையிட, அன்னை பராசக்தி அசுரனுடன் போரிட்டார். தஞ்சகாசுரன் பல வடிவங்கள் எடுத்து அம்பிகையுடன் சண்டையிட்டான். ஒரு கட்டத்தில் அவன் எருமை வடிவம் எடுத்தான். பராசக்தி அவனை தன் சூலத்தால் குத்தி வதம் செய்தார். அரக்கனை வதம் செய்த பிறகும் அம்பிகையின் கோபம் தணியாததால், தேவர்கள் மீண்டும் சிவபெருமானிடம் அம்பிகையின் சீற்றத்திலிருந்து தங்களைக் காக்குமாறு வேண்டினர். சிவபெருமான் பராசக்தியை நோக்கி "ஏ கவுரி! சாந்தம் கொள்" (கவுரி என்பது அம்பிகையின் ஒரு பெயர்) என்றார். கணவன் சொல் கேட்டு சாந்தமடைந்த பராசக்தி நெல்லிப் பள்ளம் என்று அழைக்கப்பட்ட வல்லத்தில் அமர்ந்தார்.
இவருக்கு கரிகாலற்சோழ மன்னன் இங்குக் கோயில் எழுப்பினான். சிவன் அழைத்த பெயரிலேயே "ஏகவுரியம்மன்" என்று பெயரிட்டார். பின்னர் வல்லன் என்ற மன்னன் ஆட்சி செய்ததால் தலத்திற்கு வல்லம் என்றும் அன்னை "வல்லத்துக்காளி" என்றும் பெயர்கள் ஏற்பட்டது.

## கல்வெட்டு:

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வல்லம் என்ற இந்தத் தலத்தைப் பற்றிய குறிப்பு உள்ளது. அகநானூற்றில் பாடலொன்றில் பரணர் எனும் புலவர், "சோழர் மருக நெடுங் கதிர் நெல்லின் வல்லங்கிழவோ னல்லடி யுள்ளனாவும்" என்று பாடி, கிழவன் நல்லடி போன்ற சோழ மரபினரால் ஆளப்பெற்ற ஊர் இது என்று எழுதியுள்ளார்.

இக்கோயில் கி.பி.9ஆம் நூற்றாண்டில் இக்கோயில் கட்டப்பட்டிருக்கலாம் எனப் பராந்தக சோழனின் 40ஆம் ஆட்சி யாண்டில் வெட்டப்பெற்ற கல்வெட்டு தெரிவிக்கிறது. பின்பு, 1535இல் தஞ்சையை ஆண்ட அரசன் செவ்வப்ப நாயக்கரும் அவரது மகன் அச்சுதப்ப நாயக்கரும் சேர்ந்து கருவறை, அர்த்த மண்டபம் ஆகியவற்றை இணைத்துப் புதிய மகா மண்டபம் கட்டிய செய்தியை அர்த்தமண்டபத்தில் காணப்படும் கல்வெட்டு குறிப்பிடுகிறது. தஞ்சையை ஆண்ட சோழ மன்னர்கள் பலர், போருக்குச் செல்லும்முன், இந்தக் கோயிலுக்கு வந்து பூஜைகள் செய்துவிட்டுப் போவதை வழக்கமாகக் கொண்டிருந்திருக்கிறார்கள்.

## திருக்கோயில் அமைப்பு:

இத்திருக்கோயில் தஞ்சைப் பிரகதீஸ்வரர் கோவில் கட்டுவதற்கு முன்பாகவே கட்டிய கோவிலாக இருந்துள்ளது. வடக்கு நோக்கி அமைந்துள்ள கோவிலின் நுழைவாயில் முதல் பெரிய சுற்றுப்பாதை ஒரு கோட்டையைப் போலப் பாதுகாப்பாக இருக்கின்றது. ஆலயக் கோபுரத்தைத் தாண்டி உள்ளே நுழைந்ததும், விநாயகர், முருகன், சிவலிங்கம், காத்தவராயன், சண்டிகேஸ்வரர், வாராஹி, பிரத்யங்கராதேவி, சப்த மாதர்கள், ஆதிசங்கரர், நாகர் ஆகியோர் தரிசனம் தருகிறார்கள்.

சோழரின் கட்டிடக் கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் கோயிலின் கருவறை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. கருவறையில் சுமார் 6 அடி உயரத்தில் சுடருடன் எட்டுத் திருக்கரங்களில் படைக்கலன் ஏந்தி, சுதை வடிவத்தில் ஏகவுரியம்மன் காட்சியளிக்கிறார். அந்த சுதை வடிவம் இன்றளவும் மாற்றப் படாமல் வழிபடப்பட்டு வருகிறது.
கோயிலிலேயே ஒரு தூணுக்கு முன் சூலத்தைப் பதித்துப் பூஜிக்கிறார்கள். அம்மனின் விமானம் முழுதும் பெண் தெய்வங்களின் சுதைச் சிற்பங்கள் காணப்படுகின்றன. வெளிப்பிரகாரத்தில் அம்மனுக்குப் பரிவார தேவதைகளாக வெள்ளையம்மாள், பொம்மியுடன் மதுரை வீரன், கருப்பசாமி, லாட சன்னியாசி, சாலியக்காத்தான், லாட சந்நியாசி, பட்டவராயர் ஆகியோர் வீற்றிருக்கிறார்கள்

## ஏகவுரி அம்மனின் திருக்கோலம்:

ஏகவுரி அம்மன் அக்னி கிரீடம் அணிந்து ஆறு அடி உயரத்தில், பத்ம பீடத்தின் மீது அமர்ந்த கோலத்தில் ஒன்றின் மீது அமைந்த இரண்டு திருமுகங்களுடன் காட்சி தருகிறார். ஒரு முகம் கோரைப்பல்லுடன் உக்கிரமாக உள்ளது. இது, அசுரனை அழித்த கோப வடிவமாகும். இதற்கு மேலுள்ள மற்றொரு முகம் சாந்த சொரூபமாக உள்ளது. அம்மனின் உக்கிரமான முகம், பக்தர்களுக்கு ஏற்படும் தீமைகளை அழிக்கும் சக்தியாகும், மேலேயுள்ள முகம் நல்லதையே அருளும் முகமாகவும் இருக்கிறது. எட்டு கைகளில் சூலம், கத்தி, உடுக்கை, நாகம், கேடயம்,

மணி, கபாலமும், பார்வதியின் அம்சத்தை உணர்த்தும் விதமாகக் கிளியும் உள்ளது. அம்மன் பாதத்தில் சக்திவாய்ந்த ஸ்ரீ சக்கரம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

கோவில் கருவறையில் ஏகவுரி அம்மனைச் சுற்றியபடி இரண்டு நாகங்கள் இருப்பதைக் காணலாம். ராகுவும், கேதுவும் அம்மனின் கட்டுப்பாட்டில் இருக்கும் தலம் இது . ராகு, கேது தோஷம் நீங்கும் தலம். இந்தத் தலத்திற்கு வந்து அம்மனை தரிசித்தால் நாகதோஷம், கால சர்ப்ப தோஷம், களத்திர தோஷம், முதலான அனைத்து தோஷங்களும் நீங்கும் என்பது ஐதீகம்.

## சந்நிதியில் தரும் சிறப்புப் பிரசாதம்:

### எலுமிச்சை சாறு:

எல்லா அம்பாள் கோயில்களில், சந்நிதியில் பூஜை செய்த எலுமிச்சை பழங்களைப் பிரசாதமாகத் தருவார்கள். ஆனால் இக்கோயிலில் எலுமிச்சை சாற்றைக் கொடுக்கிறார்கள். குழந்தைச் செல்வம் இல்லாத பெண்களுக்கு மட்டுமே, இந்த பிரசாதம் கொடுக்கப்படும். அம்பிகையை வேண்டி இங்கேயே எலுமிச்சை சாற்றைக் குடித்து விட வேண்டும். இதனால், விரைவில் குழந்தைப் பேறு கிடைக்கும் என்பது நம்பிக்கை.

### மங்கலம் தரும் மஞ்சள்:

இந்தக் கோயிலில் பெண்கள் அம்மனுக்குக் குளியல் மஞ்சள் படைத்து வேண்டிக்கொள்கிறார்கள். பின், அதையே பிரசாதமாகத் தருகின்றனர். தினமும் அந்த மஞ்சள் தேய்த்து பெண்கள் நீராடி வர, விரைவில் நல்ல வரன் அமையும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இந்த மஞ்சளின் வடிவிலேயே அம்பிகை, பக்தர்களின் வீட்டிற்கு எழுந்தருளுவாள் என்பது ஐதீகம்.

## தரிசன பலன்களும், நேர்த்திக்கடனும்

தீராத கடன் பிரச்சினை, தீராத நோய், தீராத பகை என்று கலங்கித் தவிப்பவர்கள், ஏகவுரி அம்மனிடம் மனதார வேண்டிக் கொண்டால், விரைவில் கடன் பிரச்சினை தீரும், தீராத நோயும் குணமாகும், பகை அனைத்தும் விலகும் என்பது ஐதீகம். ஏவல், பில்லி, சூனியம், கிரகக் கோளாறுகளால் அவதிப்படுபவர்கள் இங்கு வந்து அம்மனை வழிபட்டு பலன் பெறுகின்றனர். தடைப்பட்ட திரு மணம் நடைபெற மற்றும் குழந்தை பாக்கியம் முதலியவற்றிற்கு மிகச்சிறந்த பரிகார தலமாக உள்ளது. திருமணத் தடை உள்ள பெண்கள் இங்கே வந்து அம்மனுக்குப் புடவை சாத்தி, அம்மனின் திருப்பாதத்தில் மஞ்சள் வைத்து வணங்குகின்றனர். அதில் இருந்து ஒரேயொரு மஞ்சளை எடுத்து வந்து தினமும் குளிக்கும்போது பூசிக்கொள்ள விரைவில் திருமணம் நடைபெறும் என்பது ஐதீகம்.

### எருமைக்கன்று காணிக்கை :

ஏகவுரி அம்மன் கோவிலில் மிகவும் உடல் நலமில்லாமல் இருப்பவர்கள் தாங்கள் உடல் நலம் பெற்றால் அம்மனுக்கு எருமைக்கன்றைக் காணிக்கையாகச் செலுத்துவதாக வேண்டிக்கொள்கிறார்கள். அவ்வாறு பிரார்த்தனை செய்து கொண்டவர்கள் தாங்கள் உடல் நலம் பெற்றவுடன் அந்த வருடம் ஆடி கடைசி வெள்ளிக்கிழமை திருவிழா அன்று எருமைக்கன்றை அம்மனுக்குக் காணிக்கையாகச் செலுத்தி வழிபட்டுச்செல்கின்றனர்.

### பிராது கட்டுதல்:

ஏகவுரி அம்மன் கோவிலில் பிராது கட்டும் வழக்கம் நடைமுறையில் இருந்து வருகிறது. சொத்தை பறிகொடுப்பது, திருட்டு போன்ற சம்பவங்களுக்கு அம்மனிடம் பிராது கொடுப்பதால் நியாயம் கிடைக்கிறது என்பது நம்பிக்கை. இதுபோன்ற பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டவர்கள் நடந்த சம்பவங்களைக் கோவில் பூசாரியிடம் ஒரு வரிவிடாமல் கூறுவார்கள். அதற்குப் பூசாரி அம்மனுக்கு அர்ச்சனைகள் செய்து முறையிடுவார். இதைக்கேட்டு ஏகவுரி அம்மன் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் கிடைக்கச்செய்கிறார் என்பது ஐதீகம்.

### பூக்குழி இறங்குதல்:

ஏகவுரி அம்மன் கோவிலில் பக்தர்கள் பூக்குழி இறங்கியும், பால் குடம், காவடி எடுத்தும், அலகு குத்தியும் அம்பிகைக்கு நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர்.

## திருவிழாக்கள்:

மாதந்தோறும் அமாவாசை மற்றும் பவுர்ணமி நாட்களில் அம்மனுக்குச் சிறப்பு ஹோமங்களும், அபிஷேக, ஆராதனைகளும் நடைபெறுகிறது. இந்த ஹோமத்தில் கலந்துகொண்டு அம்மனை வழிபடத் துன்பங்கள் நீங்கி சந்தோஷம் நிலைக்கும் என்கின்றனர். ஏவல், பில்லி, சூனியம், கிரகக்கோளாறுகளால் அவதிப்படுபவர்கள் இங்கு வந்து அம்மனை வழிபட்டு பலன் பெறுகின்றனர்.

இக்கோவிலில் சித்ரா பௌர்ணமி விழா முப்பெரும் விழாவாகக் கொண்டாடப்படுகிறது. அவ்விழாவில் தேவிக்கு நடத்தப்படும் சண்டி ஹோமம், திருவிளக்கு பூஜை, சித்ரா பௌர்ணமி விழா அடங்கும். சண்டிஹோமம் செய்வதால் பராசக்தியின் வடிவங்களாகிய துர்க்கை, லட்சுமி, சரஸ்வதி ஆகிய தேவிகள் மகிழ்ந்து துயர்களை நீக்கி வாழ்வில் அனைத்து நலன்களையும் பக்தர்களுக்கு அருள்வதாக நம்புகின்றனர்.

ஆடிப்பதினெட்டு அன்று வல்லம் கடைவீதியிலுள்ள மாரியம்மன் கோவில் விழாவோடு ஏகவுரி அம்மன் கோவில் திருவிழா நடத்தப்பெறுகிறது. ஏகவுரி அம்மன், மாரியம்மன், அய்யனார் ஆகிய உற்சவமூர்த்திகளைத் தனித்தனியே அலங்கரித்து வீதி உலா நடத்துகின்றனர். ஆடி மாதத்தில் கடைசி வெள்ளிக்கிழமை ஆடிக்கழிவு திருவிழா நடைபெறுகிறது. தீமிதி, அம்மனுக்குப் பகலில் சைவ பூசை, தொடர்ந்து இரவில் எருமைக்கிடா பூசை போன்றவை நடத்தப்பெறும். கோவில் காவல் தெய்வங்களுக்கு ஆடு,கோழி வெட்டி பூசை செய்கின்றனர். இத்திருவிழாவைக் காண வல்லம் அருகில் வாழும் மக்களும் ஈரோடு, இராமநாதபுரம், கோவை, பெங்களூர் ஊர்களிலிருந்து வரும் மக்களும் கலந்துகொள்கின்றனர்.

எல்லா முக்கிய பண்டிகைகளும், விழாக்களும் மிக விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றன. இந்த ஆலயத்தின் உற்சவ மூர்த்தியை வல்லம் ஊரின் மையத்தே விளங்கும் அம்மன் கோயிலில் வைத்திருக்கிறார்கள்.

## கோயில் திறந்திருக்கும் நேரம்:

இக்கோயில் கோவில் காலை 10.00 மணி முதல் இரவு 7.00 மணி வரை தொடர்ந்து திறந்திருக்கும்

## கோயிலுக்குச் செல்லும் வழி:

இக்கோயில் தஞ்சாவூரிலிருந்து திருச்சி செல்லும் சாலையில் 12 கிலோமீட்டர் தொலைவில் உள்ள வல்லத்திலிருந்து வடக்கு நோக்கி ஆலங்குடி செல்லும் சாலையில் 1 கி.மீ. பயணித்தால் ஏகவுரி அம்மன் கோயிலை அடையலாம். வல்லத்திற்குத் தஞ்சையிலிருந்து நகரப் பேருந்துகள் உள்ளன. வல்லத்திலிருந்து ஆட்டோ மூலம் செல்லலாம். வல்லம் ஆலக்குடி பஸ்ஸில் சென்று இக்கோயிலை அடையலாம்

## ஸ்ரீ கௌரி காயத்ரி மந்திரம்

“ஓம் மகாதேவ்யை ச வித்மஹே
ருத்ர பத்னியை ச தீமஹி
தந்நோ கௌரி ப்ரசோதயாத்”

பொருள்: மகாதேவியாக இருப்பவளும் மகாருத்திர மூர்த்தியின் மனைவியாய் இருப்பவளுமான கௌரி தேவியைத் தியானிக்கிறேன்.

ஏற்றமிகு வாழ்வு தரும் வரலாற்றுச் சிறப்புமிக்க, சக்தி ஸ்தலமான வல்லம் ஏகவுரி அம்மனை வழிபட்டுப் பலனடைவோம்!!
வல்லம் ஏகவுரி அம்மன் தாயே சரணம்..!! சரணம்...!!!
ஓம் சக்தி..! பராசக்தி…!!

# பெருமாளுக்கு வில்வார்ச்சனை

பொதுவாக சிவபிரானுக்கு அவருக்கு உகந்த வில்வ இலை அர்ச்சனை நடக்கும். ஆனால் வித்தியாசமாக திருமலையில் அருளும் ஸ்ரீ வெங்கடாசலபதிக்கு, ஒவ்வொரு வெள்ளிக் கிழமையில் நடைபெறும் பெருமாள் திருமண வைபவத்தின் போது அணிவிக்கப்படும் பூலங்கு சேவை மாலையில் வில்வதளம் இடம்பெறுகிறது.

# ஒரு சொம்பிலே இரு திரு உருக்கள்

வைணவ ஆச்சார்யரான மணவாள மாமுனிகளின் சீடர்களுக்கு ரொம்ப நாளாக ஒரு விருப்பம் உண்டு, தங்கள் குருநாதருக்கு ஒரு விக்கிரக திரு உரு அமைக்க வேண்டும் என. இதற்காக அவர்கள் துணிந்து ஒரு நாள் குருவிடம் தங்கள் ஆசையை தயங்கியவாறே கூறினார்கள். ஆனால் அவர் அதற்கான இசைவைத் தர மறுத்துவிட்டார்.

மீண்டும், மீண்டும் அவர்கள் மணவாள மாமுனிகளை வற்புறுத்தவே, அவர் மனம் இரங்கி தான் பல காலமாக பயன்படுத்தி வந்த பெரிய தாமிரச் சொம்பை அளித்து "இதிலிருந்து என் திருவுருவை சிறிய அளவில் அமைத்துக் கொள்க"! என்று ஆக்ஞையிட்டார் . மகிழ்ச்சியுடன் அதனை பெற்றுக் கொண்டு சீடர்கள் தாமிரத் திருமேனியாக குருவின் உற்சவ சிலையை வடிக்க ஏற்பாடு செய்தனர்.

குருநாதர் வழங்கிய அச்சொம்பின் மூலம் அந்த சீடர்கள் இரண்டு சிறிய அளவு மணவாள மாமுனியின் உற்சவத் திருவை தயாரிக்க, அதில் ஒரு விக்ரஹம் ஞானமுத்திரையுடன், வீற்றிருந்த நிலையில் அமைக்கப் பட்டது. அத்திரு உரு திருவரங்கப் பெருமாள் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. மற்றொரு விக்ரஹம் மாமுனி நின்றநிலை காட்சிதர, இருக்க அது பிரதிஷ்ட ஆன பெருமாள் திருக்கோயில் ஆழ்வார் திருநகர் தலத்தில்! அது கொண்ட உயரம் மூன்றங்குலமே!

# தென் கைலாயம்

அக்காலத்தில் ஒரு சந்தர்ப்பத்தில், ஆதிசேஷனுக்கும், வாயு பகவானுக்கும் ஒரு போட்டி நடந்தது. அவர்கள் நோக்கம், தங்கள் இருவரில் யார் பலசாலி என்பதை உலகிற்கு காட்ட. இதற்காக அவர்கள் தேர்ந்தெடுத்தது மேரு மலையை (பர்வதம்). அம்மலையை இறுகப் பற்றிக்கொண்ட ஆதிசேஷன் வாயுவிடம் " எங்கே உன் பலத்தை காட்டி இம்மலையை அகற்றிப் பார்! " என சவால் விட்டார்.

இதனை ஏற்றுக்கொண்ட வாயு தன் முழு பலத்தையும் பயன்படுத்தி மேருமலையை இழுத்துப் பார்த்தும், கொஞ்சம் கூட அதனை அசைக்க முடியாது திணரி விட்டார். அப்பொழுது வாயுவுக்கு உதவ எண்ணங் கொண்ட தேவர்கள், ஆதிசேஷனை நெருங்கி அவரிடம் பேசி, பேசி வஞ்சக முறையில் அவரது கவனத்தை சிதற அடித்து விட்டனர். இதனைப் பயன்படுத்திக் கொண்ட வாயு தன் முழு வீரியத்தையும் பயன்படுத்தி ஆதிசேஷனின் பிடியிலிருந்த மேரு மலையைப் பெயர்த்து வீசி விட, அதனுடைய பல பகுதிகள் சில இடங்களில் சிதறி விழுந்தன. அப்படி சிதறிய மலையின் ஒரு பகுதி தான் சிராமலை என்ற இன்றைய திருச்சிராப்பள்ளி. மற்றவை திருக்காளத்தையும், இலங்கையைச் சேர்ந்த திரிகோணமலையும்!

அதனால் திருச்சிக்கு தென்கயிலாயம் என்ற பெயரும் ஏற்பட்டது!

ஏனாதூர் பத்ரி நாராயணன்

# பொறுப்பைத் துறக்காதீர்

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மற்றும் தொடர்களில் அது தொடங்குவதற்கு முன்னர் பொறுப்பு என்று சில வாசகங்களை எழுதி ஒளிபரப்புவார்கள், அது ஊடக தர்மம்.

ஆனால், சமூக தர்மம் வேறு! மக்கள் எல்லோருக்கும் சமூக பொறுப்பு என்பது கட்டாயம் இருக்க வேண்டும்.

பாதையில் முள் கிடந்தால் ஓரமாக எடுத்துப் போடுவது, குழாயில் தண்ணீர் வீணாகப் போவதை பார்த்து சரி செய்வது என இவையும் சமூகப் பொறுப்பு தான். இதற்கும் மேலே.... பொது இடங்களில்... மற்றவருக்கு எந்த இடைஞ்சலும் இல்லாமல் நாம் செயல்படுவதுதான் சிறப்பான பொறுப்பு ஆகும். நம்மால் யாருக்கும் எந்த தடங்களும் ஏற்படாத வண்ணம் நடந்து கொள்வது சிறப்பு!

சாலை அகலம் குறுகியதாக இருக்கும்; நிறைய வாகனங்கள் போய் வந்து கொண்டிருக்கும். அந்தக் குறுகிய சாலையில் “பை“க்கை ஓரமாக நிறுத்தாமல் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக நிறுத்தி நண்பர்கள் என்ற பெயரில் நான்கு பேரோடு நின்று பேசுவதும்... பஸ், லாரி போன்ற பெரிய வாகனங்கள் போகமுடியாமல் ஹாரன் அளித்தாலும் அதை காதில் வாங்காமல் திரும்பிப் பார்த்து முறைத்து, ” இது எங்க ஏரியா... நாங்க இப்படித்தான்“ எனக் கெத்து காட்டும் இளைஞர்கள் மற்றவர்களுக்கு இடையூறாக இருக்கிறோம் என்னும் எண்ணமே சிறிதும் இல்லாமல் இருப்பது, அவர்களுடைய கௌரவம் என்றும் ஒதுங்கி வழி விடாமல் தன் மரியாதை குறைந்து விடும் என்பது போல் நடந்து கொள்வதும் சிறிது கூட கூச்சம் இல்லாமல் பொது இடங்களில் பிரச்சினையை ஏற்படுத்துவதும் பொறுப்பற்றவர்கள் செய்யும் காரியம் ஆகும்.

பொது இடங்களுக்கு வரும் யாரும் “நான் இந்த சமுதாயத்தின் அங்கம்“ என்பதை உணர்ந்து கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகளை மீறாமல் சமூகப் பொறுப்போடு நடந்து கொண்டால் எல்லாமே நலமாகும்.

தனிமனித ஒழுக்கமே சமுதாய ஒழுக்கமாய் போற்றப்படும்.

**தமிழ் வசந்தன்**

# 108 முத்திரைகள்

தமிழகத்தின் பாரம்பரிய நாட்டியக் கலையே பரதக்கலை! இந்த பரதக்கலையின் தனிப்பெரும் சிறப்பு என்னவென்றால், இது இறைவனின் முன்னிலையில் ஆடப்படுவது. இதற்கு தெய்வீக நடன கலை என்னும் சிறப்பும் உண்டு.

மனிதர்கள் இந்த கலையினை ஆடும்போது நடனம் என்கிறோம். இறைவன் ஆடுவதை தாண்டவம் என்கிறோம்.

இறைவனை தாண்டவக் கோலத்தில் தரிசனம் செய்வது மன்னுயிர்கள் பெற்ற புண்ணியம் என்றே கருதப்படுகிறது!

இறைவனை ஆராதிக்கும் கலை இது என்பதனால், தஞ்சையில் பெரிய கோவிலை கட்டிய மாமன்னன் ராஜராஜசோழன் இந்த கலைக்கு ஒரு சிறப்பினை பெரிய கோவிலில் செய்துள்ளார்.

கருவறையில் மிகப்பெரிய சிவலிங்கம்! அதற்கு மேலே விமானம். கருவறைக்கு மேலே சுமார்

40 அடிகள் முதல் தளம்! அதன் மீதே விமான கோபுரம் எழுப்பப்பட்டுள்ளது.

அந்த இடத்தில்... அதாவது, கருவறையின் லிங்கத்திற்கு மேலே ஒரு சுற்றுப் பாதை, இறைவனை மேலே இருந்து வலம் வரும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது.

அந்த சுவற்றில்- விமான கோபுரம் தொடங்கும் இடத்தில் பரதநாட்டியத்தின் கர்ணங்கள் எனப்படும் 108 முத்திரைகளையும் சுமார் 2 அடி உயர சிற்பங்களாய் செதுக்க ஆணையிட்டார், இராஜராஜ சோழன்!

(அதில் 24 சிற்பங்கள் செதுக்கப்படாமல் உள்ளது, ஒரு வரலாற்று உண்மை)

இந்த பரதக் கலைக்கு அந்த இடத்தில் சிற்பங்கள் வடித்த சோழ மாமன்னன் உணர்த்துவது என்ன?

பரதம் என்பது தெய்வீகக்கலை!

**சோழ தாசன்**

# குறளும் பொருளும்

திருக்குறளில் காணப்படும் அனைத்து கருத்துக்களுமே எல்லா மனிதர்களுக்குமே ஒரு பாடமாய் அமையும்... இது தவிர, மனிதர்கள் தங்கள் வாழ்வில் அன்றாடம் சந்திக்கும் நிகழ்வுகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு குறளை நினைவுபடுத்தும். எனவே குறள் கூறும் நெறியை உணர்ந்து நடந்தால் பல சங்கடங்களை தவிர்க்கலாம்.

இதோ.....

அருகருகே உள்ள கிராமத்தைச் சேர்ந்த இரண்டு இளைஞர்கள் சென்னையின் குறுகலான ஒரு இடத்தில் சிறிய அறை ஒன்றை வாடகைக்கு எடுத்துத் தங்கி, கட்டட வேலை செய்து வந்தார்கள்.

இறைவன் வசதியை தான் குறைத்தானே தவிர, உணர்வை கொஞ்சமும் குறைக்கவில்லை. இருவரும் தாங்களே சமைத்து, சாப்பிட்டு, ஊரில் உள்ளவர்கள் பசியாற கொஞ்சம் பணமும் அனுப்பிக் கொண்டிருந்தார்கள்.

இவர்களது பக்கத்து அறையில் மூன்று இளைஞர்கள் வந்து தங்கினார்கள். இவர்களை ஒத்த வயசுதான் என்றாலும் அவர்கள் படாடோபம் நிறைந்தவர்கள்.

இவர்கள் இருவரும் வாரம் முழுவதும் உழைத்து எவ்வளவு கூலி வாங்குகிறார்களோ.... அந்த அளவு பணத்தை ஒரு வேலைக்கே தண்ணீராய் செலவழிப்பார்கள். என்ன வேலை இவர்களுக்கு? எவ்வளவு சம்பளம்?... எதுவுமே தெரியவில்லை, எப்போது வேலைக்கு போகிறார்கள் என்று கூட தெரியவில்லை.

வெயில் காலம் வாட்டி வதைத்தது! காற்றோட்டமே இல்லை. அதற்காக அந்த ஒற்றை அறையின் கதவை திறந்து வைத்தே தூங்குவார்கள்! இருவரில் ஒருவன் வேலன்! பத்தாம் வகுப்பு தேராதவன்.

இன்னொருவன் குமார்! ஐந்தாவது வரை படிப்பு. நல்ல உழைப்பாளி! வேலன் சற்றே புத்திக் கூர்மையுள்ளவன்! ஆனால் வெகுளி! இவர்கள் நிலையைப் பார்த்த பக்கத்து அறை இளைஞன் ஒருவன் இவர்களிடம் ஒரு டேபிள் ஃபேனைக் கொண்டு வந்து கொடுக்க, இருவரும் மறுத்தனர்.

அவனோ.... ”பேச்சிலர் தானே நாம! ஒருத்தருக்கொருத்தர் உதவினா என்ன? எங்ககிட்ட சீலிங் ஃபேன் இருக்கு! பரவாயில்லை இத வச்சுகீங்க”, என்று வைத்துவிட்டு சென்றான்.

வேலன், நண்பனிடம், ”டேய், நல்ல பசங்க இருக்காங்க! இருக்கட்டும்; அவங்க கேட்கும் போது கொடுத்துடலாம்”, என்றான்.

இப்படித் தொடங்கிய இவர்களின் பழக்கம் அவர்களோடு சினிமாவிற்கு போவது வரையில் தொடர்ந்தது.

ஒரு நாள்.... பக்கத்து அறை இளைஞர்களைத் தேடி போலீஸ் வந்தது. அந்த அறையை சோதனை செய்தார்கள்.

வேலன், குமார் இருவரையும் விசாரித்தார்கள். தங்களிடம் அவர்கள் கொடுத்தது இதுதான் என டேபிள் ஃபேனை கொண்டுவந்து கொடுத்தார்கள்.” இருந்தாலும் எப்போது வேண்டுமானாலும் நீங்கள் விசாரணைக்கு அழைத்தால் வரவேண்டும்“ என உத்தரவிட்டு சென்றார்கள்.

இவர்களும் இரண்டு, மூன்று முறை போலீஸ் நிலையம் சென்று வந்தார்கள்.

வேலனுக்கு அவமானம் பிடுங்கித் தின்றது. இறுதியில், அந்த இளைஞர்கள் மூவரும் போதைப் பொருள் விற்பவர்கள் எனத் தெரிந்தது. வேலன், குமார் இருவருக்கும் சம்பந்தமில்லை; இவர்கள் அப்பாவிகள் என போலீஸ் முடிவு செய்து அனுப்பினார்கள்.

“ஊருக்கு இந்த விஷயம் தெரிந்தால்?.... குடும்ப மானமே போய் விடும்“ என்னும் கலக்கத்தோடு அறைக்கு வந்தான் வேலன்! கதவு உட்புறம் தாழிடப்பட்டிருந்தது.

”டேய் குமார், கதவுத்திறடா!” என தட்டினான். திறக்கப்படவில்லை; மீண்டும் மீண்டும் பலமாகத் தட்டினான். கதவு திறந்தது! கலங்கிய கண்களோடு நின்றிருந்தான் குமார்.

பதறிய வேலன், ”என்னடா.... ஏன் இப்படி இருக்கற?... என்ன ஆச்சு... ” எனப் பதறினான்.

”வேலா! நாம போலீஸ் ஸ்டேஷன் வரைக்கும் போய் வந்தத யாரோ ஊர்ல சொல்லி இருக்காங்கடா! அம்மாவும் அப்பாவும் அசிங்கப்பட்டு நிற்கிறார்களாம். இப்படி ஒரு மகன் எதுக்குடா உயிரோட இருக்கணும்?! அதான் எலி மருந்து வாங்கி வந்து குடுக்க போனேன்! ” என அழுதான்.

ஆறுதலாய் அவன் தோளை அணைத்த குமரன், ”வேலா!... இது நமக்கு ஒரு பாடம்! விபரம் புரியாம எத வேணும்னாலும் பேசுவாங்க! உண்மை என்னனு நமக்குத் தெரியும்.

அதுக்காக உயிர விடுவியா?... நான் பத்தாவதுல்ல படிச்ச ஒரு திருக்குறள் ஞாபகத்துல வருதுடா! குறளை சொன்னான்.

”ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை தான்சாந் துயரம் தரும்”! அதாவது ”ஆராய்ந்து பழகாத நட்பு, கடைசியில சாகர அளவுக்கு துன்பத்தக் கொண்டு வந்துடும்னு வள்ளுவர் சொன்னது எவ்வளவு உண்மையாய்ப் போச்சி பாத்தியா?”

சாகர அளவு துன்பத்த அனுபவிச்சாச்சி! அதுக்காக சாகனுமா?... இனிமே குறளைப் படிச்சி குறையில்லாம வாழலாம்”, என்றான் வேலன்! கண்களைத் துடைத்துக் கொண்டான் குமார்.

**சோழ தாசன்**



ரா. பன்னீர்செல்வம்

அரிய ஆன்மீக தகவல்

# திருவரங்கப் பெருமைகள்

வைணவப் பெருமக்கள் வாஞ்சையோடு வணங்கும் திருத்தலங்களை திவ்யதேசம் என்று கொண்டாடி மகிழ்வார்கள் உயர்ந்த தலம் என்னும் பொருளில் திருப்பதி என்றும் இத் தளங்களை ஆராதிப்பதுண்டு! பரவாசு தேவன் பல்வேறு நிலைகளில் வீற்றிருந்து அருள்புரியும் இந்த திவ்ய தேசங்கள் 108 என வரையறுத்திருக்கிறார்கள்.

எதனைக்கொண்டு "திவ்ய தேசங்கள் 108" என்று அறுதியிட்டார்கள்?

அந்த புருஷோத்தமனின் புகழ்ப்பாட இம்மண்ணில் உதித்தவர்களே ஆழ்வார்கள். பரமாத்மாவின் இலச்சினைகளை உடலில் தாங்கி, திருமகளை இதயத்தில் வைத்த மாலவனை தங்கள் நெஞ்சில் ஏந்தி பகவத் பாதாளாக விளங்கிய ஆழ்வார்கள் தாங்கள் பெற்ற ஞானத்தால் திருமாலை தமிழால் பாடிப்போற்றி மங்களாசாசனம் செய்த தலங்களே இந்த 108 திவ்யதேசங்கள்

இத்துணை சிறப்பினையும் பெற்றுள்ள திவ்ய தேசங்களில் முதன்மையாகக்கருதி வணங்கப்படுவதும் அனைத்து திவ்ய தேசங்களுக்கும் தலைமையானதாய் போற்றப்படுவது திருவரங்கம் என்னும் ஸ்ரீரங்கம் என்னும் திருமால் பதியாகும்.

வைணவப் பதிகளில் பெரிய கோவில் என்னும் சிறப்பினைப் பெற்றதே இந்த திருவரங்கம் காவேரித்தாய் தன் ஒற்றைப் பாதையை விரிவாக்கி, காவேரி, கொள்ளிடம் என்ற தன் இருக்கரங்களை விரித்து, மீண்டும் கரம்கூப்பி அதனிடையில் அரங்கள் அறிதுயில் புரியும் அனந்தத் திருவிடமே இந்த திருவரங்கம்!

இமைகள் விலக, உள்ளே கண்மணி திகழ்வது போல் கண்ணன் துயிலும் பூலோக வைகுண்டம் இப்பதி! இந்த அரங்கன் இத்தனை தத்ரூபமாக எப்படி வடிக்கப்பட்டான்? வடித்தது யார்? இந்த இறைவன் இத்தலத்திற்கு எப்படி வந்தான்?

சத்திய லோகத்தில் பிரம்மன் வழிபடுவதற்காக அர்ச்ச மூர்த்தியாக தோன்றியவனே இந்த அரங்கநாத பெருமாள், அதன்பின் மண்ணுலக வேந்தனான இச்சிவாகு தான் வழிபட பிரம்மனிடம் வேண்டி, பெற்றுக்கொண்டு வந்தான்.

அந்த இச்சுவாரு வம்சத்தில் வந்த ராமபிரானால்



பூஜித்து வணங்கப்பட்ட பெருமைக்குரியவரே இந்த அரங்கன்!

இராம ராவண யுத்த முடிவில் ஸ்ரீராம பிரானின் பட்டாபிஷேகக் முடிந்து இலங்கைக்குக் திரும்பிய ராவணனின் இளவில் விபீஷணன் ஸ்ரீராமனிடம் வேண்டி, தான் வணங்குவதற்காக இவரை இலங்கைக்குக் கொண்டு செல்லும் வழியில் காவேரி ஆற்றின் நீரிப் பெருக்கில் மகிழ்ந்து, நீராடும் பொருட்டு மூர்த்தத்தை வைத்துவிட்டு செல்ல... இத்தலமே தான் உறைந்து அருள்புரிய ஏற்ற இடம் என்று பகவானே விரும்பி இங்கே கோவில் கொண்டதாய் அறியப்படுகிறது.

இத்திருத்தலத்தில் பிறந்து சிறந்த சான்றோர்கள் எவர் என பார்க்கும் போது பெரிய நம்பி, பிராசரபட்டர், பிள்ளை லோகாச்சார்யர் வடக்குத் திருவிப்பிள்ளை ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

தமிழ்நிலத்தை ஆண்ட மூவேந்தர்கள், விஜயநகர அரசர்கள் நாயக்க மன்னர்கள் ஆகியோரால் திருப்பணிகளும் கொடைகளும் வழங்கப் பெற்ற பெருமைக்குரிய திருத்தலம் இது.

பாரத நாட்டின் மாபெரும் இதிகாசங்களில் ஒன்றான ராமாயண காவியத்தை கம்பர் பெருமான் இந்த ஆலயத்தில் தான் அரங்கேற்றினார் என்பது பெருமைக்குரிய சிறப்பாகும்.

ஒரு தேசத்தை ஆளுகின்ற அரசப் பெருமகனார்க்கு நடப்பதைப் போன்றே உபசாரங்களும் விழாக்களும் இங்கே கொண்டாடப்படுவது மேலும் ஒரு சிறப்பு!

இத்திருக்கோவிலின் வழிபாட்டு முறைகளை நெறிப்படுத்தி வழங்கிய ராமானுஜரின் பூதவுடல் ஆயிரம் ஆண்டுகளாக இங்கே பாதுகாக்கப்பட்டு வருவதும் இவ்விடத்தில் ராமானுஜரின் விக்ரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டு வைணவப் பெருமக்களால் வணங்கப்பட்டு வருவதும் இத்தலத்தினுடைய ஆண்டுப் பெருமையை இன்றளவும் பறைசாற்றி வருகிறது.

அனைத்து ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட இத்தலம் ஏழு திருச்சுற்றுகளுக்குள் அடங்கிய இணையில்லா பேராலயமாக இன்னருள் புரிவது, கலியுகத்திலும் கருணை மழை பொழியும் கடவுள் கண்ணனே என்பதை உணர்த்துகின்றனது.

பூலோக வைகுண்டம் என போற்றப்படுகின்ற பென்னிகர் பெம்மானின் பெருமைகளைப் போற்றி, இந்த அழகிய மணவாளனை அனுதினமும் சேவிப்போம்!


அரங்கனின் புகழ் பாடுவோம்.

# உங்கள் படைப்புகள் எங்கள் இதழில் இடம் பெற வேண்டுமா?

இனிய சத்வித்யா வாசகர்களே! நமது மாத இதழில் உங்கள் ஆன்மீகக் கட்டுரைகளும் கருத்துகளும் இடம் பெற வேண்டுமா? உங்களுடைய அரிய ஆன்மீக படைப்புகளை எங்களுக்கு அனுப்புங்கள்! தகுதியானவை ஏற்றுக்கொள்ளப்படும் கட்டுரைகள் கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி

Astroved.com Pvt.Ltd
“சத்வித்யா” ஆன்மீக மாத இதழ்,
SP-75, தொழிற்பேட்டை,
அம்பத்தூர், சென்னை - 600058.

Email id: magazine@astroved.com





விஜய்
ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர்

# ஜீன் மாத பலன்கள் 2022




## மேஷம்

மேஷ ராசி நேயர்களே, சுப விரயங்கள் ஏற்படும் விரயங்களால் எந்த வித பாதிப்பும் ஏற்படாது, விருந்து, விழாக்களில் கலந்து கொள்ள வாய்ப்புகள் வரும். வெளியூர், வெளிநாடு செல்ல வசந்த காலமாகும்.

இடம் மாறுவதால் பொருளாதார வளர்ச்சி ஏற்படும். சகோதர, சகோதரிகள், ரத்த சம்பந்தமான உறவுகளுக்குள் இருந்த பிரச்சனைகள் நீங்க ஒற்றுமை ஏற்படும். பூர்வீக சொத்துக்களால் லாபம் கிடைக்கும், சேமிப்பு உயரும். சிறு தூரப் பயணங்களும் ஏற்படும். வேலையில் முன்னேற்றம் காண்பீர்கள். பதவி உயர்வு, வருமான உயர்வு ஏற்படும்.


திருமணம் நடக்க வாய்ப்புகள் வரும். வாழ்க்கைத் துணை உங்களைத்தேடி வரும் காலம் ஆகும். திருமணமானவர்கள் வாழ்க்கைத்துணையை அனுசரித்து செல்வது நன்மை தரும். உங்கள் வீட்டுப் பெண்களிடம் வாக்குவாதங்களை தவிர்க்க வேண்டும். லக்ஷ்மி நரசிம்மர் வழிபாடு பொருளாதார வளர்ச்சியை தரும்.



## ரிஷபம்

ரிஷப ராசி நேயர்களே, புகழ், மரியாதை உயரும் மாதமாகும். எதிர்பார்ப்புகள் அதிகமாகும். கனவு, கற்பனை, மனக்கோட்டை அதிகரிக்கும். வீடு, வாகனம் சொத்து போன்றவைகள் வாங்க முடியும். வருமானத்தில் தடை தாமதங்கள் காணப்படும். முடிவெடுக்கும் சூழ்நிலையில் மனம் தடுமாற்றம் அடையும். பெருமாள் வழிபாடு தடுமாற்றங்களை தவிர்க்கும்.


குழந்தைகள் பிடிவாதத்துடன் காணப்படுவர். சுயத்தொழிலில் லாபம் கிடைக்கும். திருமணத் தடை நீங்கும். மனதிற்குப் பிடித்த வாழ்க்கை துணை கிடைக்கும். தொழிலில் சீரான முன்னேற்றம் காணப்படும். ஆடம்பரச் செலவுகள் ஏற்பட வாய்ப்பு உண்டு, கவனம். நண்பர்களுடன் கேளிக்கையில் ஈடுபடுவதால் செலவுகள், பாதிப்புகள் ஏற்படலாம். புதிய முயற்சிகளை தவிர்ப்பது நன்மை தரும். தாய் தந்தையாரை அனுசரித்து செல்வது உயர்வைத் தரும்.



## மிதுனம்

மிதுன ராசி நேயர்களே, மாற்றங்களால் ஏற்றங்கள் ஏற்படும் மாதமாகும். புதிய மாற்றங்கள் வளர்ச்சியை தரும். வருமானம் அதிகரிக்கும்,சேமிப்பு உயரும். குடும்ப நபர்கள் ஒத்துழைப்பு கிடைக்கும். குழந்தைகள் வளர்ச்சிக்காக கடன் வாங்கும் சூழ்நிலை உருவாகும். பூர்வீகம் சார்ந்த செயல்களில் ஈடுபடக்கூடாது. காதல், வழக்குகளை சந்திக்கும் சூழ்நிலையை உருவாக்கும். அதை ஆன்மீகத்தில் செலுத்துவதால் தவறான பாதையில் இருந்து விடுபட முடியும். உயர் கல்வியில் மேன்மை கிடைக்கும்.

எதிர்பார்த்த துறையில் மாணவர்களுக்கு சீட் கிடைக்கும். வேலையில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். மதிப்பு கூடும், மரியாதை உயரும். பொருளாதார உயர்வு மூலம் சொத்துக்கள் சேர்க்க முடியும். புதிய முயற்சிகளால் விரயம் ஏற்படலாம், எனவே புதிய முயற்சிகளை தவிர்ப்பது நலம். இளைய சகோதர சகோதரிகளுக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு கிட்டும். அம்மன் வழிபாடு வளர்ச்சியை தரும்.



## கடகம்

கடக ராசி நேயர்களே, குரு பார்வை இருப்பதால் பாதுகாப்பு கிடைக்கும். அனைத்து பிரச்சினைகளையும் சமாளித்து வெற்றி பெறுவீர்கள். நிர்வாகம் சார்ந்த பதவி வகிப்பவர்கள் உயர்வடைவார்கள். மாணவர்களுக்கு உயர்கல்வி உறுதுணையாக இருக்கும். ஆசிரியர்களின் ஆதரவு கிடைக்கும். நல்ல மதிப்பெண் பெற முடியும். தந்தைக்கு சொத்து சேர்க்கை ஏற்படும்.


உங்களுக்கு சமுதாயத்தில் மதிப்பு மரியாதை கிடைக்கும். பயிற்சி நிறுவனங்களால் லாபம் கிடைக்கும். பூர்வீகத்தில் மதிப்பு கூடும், புகழ் கிடைக்கும். ஊர் பொது நிகழ்ச்சிகளுக்கு தலைமை தாங்கும் பொறுப்பு கிடைக்கும். பிள்ளைகள் அவர்கள் செயல்களால் பெற்றோருக்கு பெருமை சேர்ப்பார்கள். கணவன்-மனைவி இடையே கருத்து வேறுபாடுகள் இருக்கும், அது குடும்ப வாழ்வில் பாதிப்பை அதிகரிக்கக்கூடும், எனவே குடும்ப உறுப்பினர்களிடம் அனுசரித்து செல்வது மனம் சார்ந்த பிரச்சினைகள் ஏற்படாமல் தடுக்கும். குருபகவான் வழிபாடு முன்னேற்றத்தைத் தரும்.



## சிம்மம்

சிம்ம ராசி நேயர்களே, கிழக்கு திசை அனைத்து செயல்களிலும் வெற்றியைத் தரும் திசையாகும். உழைப்பிற்கேற்ற லாபம் கிடைக்கும். திட்டங்கள் வெற்றி தரும். கல்வி அறிவு மேம்படும். மாணவர்கள் சிறப்பான நிலைக்கு செல்வார்கள். பொதுஜன தொடர்பில் உள்ளவர்களுக்கு சமுதாயத்தில் மதிப்பு கூடும், புகழ் கிடைக்கும். திடீர் பணவரவு உண்டு. அதிர்ஷ்டத்தால் சேமிப்பு நிலை உயரும். இளைய சகோதரி பிடிவாதமாக இருப்பார்.

நீண்ட தூர பயணங்கள் பாதிப்பைத் தரலாம். ஆன்மீக யாத்திரையால் செலவுகள் அதிகரிக்கலாம். தவறான நபர்களை சந்திக்க நேரிடும், கவனம் தேவை. திருமணம் கைகூடும். வாழ்க்கைத் துணைவரால் நல்ல மாற்றங்கள் ஏற்படும். வெளிநாடு சார்ந்த தொழில் செய்பவர்களுக்கு லாபம் கிடைக்கும். கருப்பசாமி வழிபாடு நன்மையை தரும்.



## கன்னி

கன்னி ராசி நேயர்களே, கவனமுடன் இருக்க வேண்டிய மாதமாகும். எந்த ஒரு நன்மை நடந்தாலும் அதற்குப்பின்னால் ஒரு தீமை நடைபெற காத்திருக்கும். எதிர் பாலின நபர்களுடன் இடைவெளி பின்பற்ற வேண்டும். உங்கள் ரகசியங்களை யாரிடமும் பகிரக் கூடாது. இளைய சகோதரர் காதல் வயப்பட வாய்ப்பு உள்ளது, எச்சரிக்கை தேவை.


வீடு, இடம், சொத்து போன்றவைகளில் ஒரு பெரிய பாதிப்பை சந்திக்க வாய்ப்பு உண்டு. எனவே, இந்த விஷயங்களில் இந்த மாதம் ஈடுபடாமல் இருப்பது நல்லது. முடிவெடுக்க முடியாத சூழ்நிலையாக இருக்கும். வேலை மாற்றம் ஏற்படும். குடும்பத்தில் கடன், நோய், வழக்கு போன்றவைகளால் நிம்மதி குறையும். முன்னோர்கள் வழிபாடு, காவல் தெய்வங்களை சரண் அடைவதால் தீய காலத்தை கடக்க முடியும்.



## துலாம்

துலாம் ராசி நேயர்களே, திருமண ஏற்பாடுகள் செய்யலாம். வரன் உங்களைத் தேடி வராது, ஆகையால் அனைத்து முயற்சிகளையும் நீங்களே செய்ய வேண்டும். உங்களது தீர்க்கமான எண்ணம், செயல் வெற்றியைத் தரும். கூட்டுத்தொழில் செய்யக்கூடாது. கூட்டாளிகளுடன் கணக்கு வழக்குகளில் கவனமாக இருக்க வேண்டும். உங்கள் சேமிப்பு, வருமானம், பிறருக்கு போய் சேர வாய்ப்புகள் உண்டு, எனவே யாரையும் நம்பிக்கையானவர்கள் என அருகில் வைக்கக்கூடாது.

எதிரியை நீங்களே உணவு கொடுத்து வளர்க்கும் காலம், கவனம் தேவை. நீண்ட தூர பிரயாணம் மிகுந்த நன்மையான மன மாற்றத்தை தரும். ஆன்மீக யாத்திரைகள் அனைத்து சவால்களையும் வெல்லும் சக்தியை தரும். விநாயகர் வழிபாடு அனைத்து தடைகளையும் நீக்கி வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்லும்.



## விருச்சிகம்

விருச்சிக ராசி நேயர்களே, அதிக நன்மைகள் தரும் குலதெய்வ வழிபாடு. பூர்வீகம் உதவி கரமாக இருக்கும். பெரிய சொத்து சேர்க்கைக்கான நேரமிது. திடீர் அதிர்ஷ்டங்கள் நடக்கும். வீடு, வாகனம் சொத்து போன்றவைகள் பழையதாக வாங்கினாலும் நன்மை செய்யும். குழந்தைகள் மூலம் மகிழ்ச்சி உண்டாகும். திருமண செயல்கள் துவங்கலாம். மறு மணத்திற்காக எதிர்பார்ப்பவர்களுக்கு வாய்ப்புகள் அமையும். திருமணம் ஆனவர்களுக்கு குழந்தை பாக்கியம் உண்டாகும்.

வாழ்க்கைத் துணைக்காக நேரத்தை ஒதுக்க வேண்டும். அவர்களைப் புகழ்ந்து பேசுவதால் குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். சுயத்தொழிலில் முதலீடு செய்யக்கூடாது. வரும் லாபங்களை சொத்து சேர்க்கைக்காக பயன்படுத்தலாம். புதிய முயற்சிகள் வெற்றியடையும் துணிந்து அனைத்து செயல்களையும் துவங்கலாம்.



## தனுசு

தனுசு ராசி நேயர்களே, அனைத்து சுகங்களையும் அனுபவிக்கக் கூடிய காலமாகும். வருமானம் உயரும், சேமிப்பு அதிகரிக்கலாம். வீட்டுக்குத் தேவையான புதிய பொருட்களை வாங்கலாம். குடும்ப நபர்களின் தேவைகளை பூர்த்தி செய்து வைப்பீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி, நிம்மதி இருக்கும். இளைய சகோதரர் நிலை உயரும். தாயின் உடல்நிலை சீராக இருக்கும். சமூகத்தில் உங்கள் குடும்பத்திற்கு நன்மதிப்பு கிடைக்கும்.

குழந்தைகளின் நடவடிக்கைகளில் கவனம் தேவை. தவறான நண்பர்களுடன் சேர அனுமதிக்கக் கூடாது. திருமண முயற்சிகள் தாமதமடையும் ஆனால் தடைபடாது. சுய தொழிலை விட வேலையில் உயர் நிலை பெற முடியும். புதிய பதவிகளால் மரியாதை மதிப்பு கூடும். சக ஊழியர்கள் ஒத்துழைப்பு கிடைக்கும். திருச்செந்தூர் முருகன் வழிபாடு சாதனைகளை படைக்க உறுதுணையாக இருக்கும்.



# மகரம்

மகர ராசி நேயர்களே, வீட்டுப் பெரியோர்களின் ஆலோசனைப்படி நடப்பது நன்மை தரும். அருகில் இருப்பவர்களால் தொந்தரவுகள் வரும், ஆகையால் அனைவரிடத்திலும் இடைவெளி கடைப்பிடிப்பது நலம். பெரிய பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்கள் தீட்டக்கூடாது. பெரும் இழப்புகள் ஏற்படலாம்.


தந்தையின் உடல்நிலையில் பாதிப்பு ஏற்படலாம். தாய் வழி குலதெய்வ வழிபாடு தோஷங்களை நீக்கி மறதிகளை நீக்கும். குறித்த நேரத்தில் வேலையை முடிக்க உதவும். தொழிலுக்காக கடன் வாங்கக் கூடாது. முதியோர்களுக்காக மருத்துவ செலவு மேற்கொள்ள நேரிடும். யாரிடமும் போட்டிப்போட்டு காயப்படுத்த கூடாது. அனுசரித்து விட்டுக் கொடுப்பதால் பெரிய பாதிப்புகளை தவிர்க்க முடியும்.



# கும்பம்

கும்ப ராசி நேயர்களே, நீங்கள் நினைத்த லட்சியம் அடைய முடியும். பெரிய பொருளாதார வளர்ச்சி கிடைக்கும். புதிய சேமிப்பு கணக்குகள் துவங்கலாம். அனைவரின் ஒத்துழைப்பும் உங்கள் வளர்ச்சிக்கு உதவும். புதிய வீடு வாங்கலாம். கனவு வீடு, வாகனம் அமையும். திருமணம் கைகூடும். வாழ்க்கை துணைவர் உங்களுக்கு அனைத்து நன்மையும் செய்து தருவார்.

நீங்கள் உங்கள் வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து செயல்களிலும் ஈடுபடலாம். தொழிலில் லாபம் உங்கள் குடும்ப அந்தஸ்தை உயர்த்தும். மாணவர்கள் கல்வியில் மேன்மையடைவார்கள். கல்விக்காக வெளிநாடு செல்ல வாய்ப்பு கிடைக்கும். போட்டி பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். காவல் தெய்வ வழிபாடு மிகவும் நன்மை தரும்.



# மீனம்

மீன ராசி நேயர்களே, முன்னோர்கள் செய்த புண்ணியத்தை அனுபவிக்கும் காலம். சமுதாயத்தில் புகழ் கிடைக்கும். பெரிய செயல்களை கூட எளிதாக செய்து முடிப்பீர்கள். பிறரின் வளர்ச்சிக்கு நீங்கள் உதவி செய்வீர்கள். சகோதரரின் கடனை அடைத்து அவரை மேன்மை நிலைக்கு அழைத்துச் செல்வீர்கள்.

வடமேற்கு திசை உங்கள் வளர்ச்சிக்கு உகந்ததாக இருக்கும். புதிய முயற்சிகள் வெற்றியடையும், கனவு நனவாகும். ஆன்மீகச் செயல்கள் மன அமைதியைத் தரும். உங்கள் திறமைகளை வெளி உலகம் உணரும் காலம் ஆகும். அனைத்து நன்மைகளும் உங்களைத் தேடி வரும். ஆலங்குடி குரு வழிபாடு மிகவும் நன்மை தரும். தொழில் சிறப்பாக சிறக்கும். புதிய கிளைகள் தொடங்க முடியும். வெளிநாட்டிலிருந்து பண வரவு ஏற்படும்.